ISSN 1391-9504

# Vijey விஜய்

26.01.2011 - மலர் 07, இதழ் 47



## பாடசாலைக் கல்வியில் வாசிப்பின் முக்கியத்துவம்

## சமூகத்தின் முக்கியத்துவம்

## மத்திய காலத்தின் பின்னரான மறுமலர்ச்சி

விலை ரூபா 15/-

தமிழ்பேசும் பிள்ளைகளுக்கான அறிவுசார் வாரப்பத்திரிகை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




# மன்னரின் மாமனாரின் அதிகாரம்

ஒல்லாந்த வர்த்தகசங்கம் இந்தக் கள்ளத்தனமான வர்த்தகம் குறித்து கண்டி அரசுக்கு முறையிட்டது. துறைமுகங்களைத் திறக்காவிட்டால், இதனைவிட மோசமான முறையில் வர்த்தகம் நடைபெறும் என மகாஅதிகாரம் ஒல்லாந்தரின் முறைப்பாட்டிற்கு பதில் அளித்தார். இதற்கிடையில் மன்னரின் சேவையாளர் ஒருவரின் தந்தை பாக்கு மூடைகள் நிறைந்த பல படகுகளுடன் பலாத்காரமாகப் பயணிப்பதற்கு முயற்சித்தார். அவரின் பயணத்திற்கு ஒல்லாந்தரால் தடை ஏற்பட்டது. இதனால், அவர் பல ஒல்லாந்தர்களைக் கைது செய்தார். அத்துடன், அவர்களை யாழ்ப்பாணத்திற்கு கொண்டுசென்றார்.

ஒல்லாந்தர்களோ, தமது வீரர்களை விடுவித்து அவரை எட்டு நாட்களுக்குள் யாழ்ப்பாணத்தை விட்டு வெளியேறும்படி கட்டளையிட்டார்கள். அந்தக் கட்டளையை எடுத்துச் சென்ற ஒல்லாந்த அதிகாரிகளை அவர் விரட்டிவிட்டார். அது மாத்திரமன்றி; இந்த நபர் தாம் பயணித்த படகினை ஒல்லாந்தர் சோதனை செய்யவும் இடமளிக்கவில்லை. இறுதியில் வர்த்தகசங்கத்தினர் அவரோடு மோதுவதைத் தவிர்த்தனர். அவரின் விருப்பப்படி வர்த்தகம் செய்ய சந்தர்ப்பம் வழங்கினர். பின்னர் அவரின் கோரிக்கைகளுக்கு இணங்கினர். நட்புப் பூண்டனர். பரிசில்களை வழங்கி அனுப்பி வைத்தனர்.

இதற்கிடையில், மிகவும் பலம் வாய்ந்த சிங்கள அதிகாரி ஒருவர் மூன்றாம் கோரளைக்கும், நான்காம் கோறளைக்கும் அதிகாரம் மிக்கவராக மாறினார். அவர் ஒல்லாந்த வர்த்தக சங்கத்திற்கும் மன்னருக்கும் இடையில் உள்ள கருத்து வேறுபாடு களைக் களைவதற்கு முயற்சித்தார். அதற்கு பல ஆலோசனைகளை முன்வைத்தார். அதற்காக பெருமளவினரோடு கொழும்புக்கு வந்தார். ஆளுநரைச் சந்தித்தார். சீயம் நாட்டிலிருந்து பௌத்த பிக்குகளை அழைத்துவர உதவுமாறு கேட்டுக் கொண்டார். அதற்காக சில அதிகாரிகளை சீயம் நாட்டிற்கு அனுப்பும்படியும் வற்புறுத்தினார். ஆனால், ஆளுநரோ அதனைச் செய்ய முடியாதெனக் கூறினார். எனினும், எதிர்ப்புகள் அதிகரிக்கும் என்பதை உணர்ந்து இறுதியில் ஆளுநர் அதற்கு இணங்கினார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வாசிப்புத் திறமையுள்ள மாணவர்களுக்கு விருது வழங்கத் திட்டம்



பாடசாலை மாணவர்களிடையே வாசிப்புப் பழக்கத்தை விருத்திசெய்யும் நோக்கில், தேசிய நூல் அபிவிருத்தி சபை கல்வி அமைச்சுடன் இணைந்து சிறந்த வாசிப்புப் பழக்கமுள்ள மாணவர்களை விருது வழங்கிக் கௌரவிக்கத் திட்டமிட்டுள்ளது. இது குறித்தான அறிவுறுத்தல்களையும் விண்ணப்பங்களையும் சகல பாடசாலை அதிபர்களுக்கும் இலங்கை தேசிய நூல் அபிவிருத்தி சபை அனுப்பி வைத்துள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

இதற்காக ஒவ்வொரு பாடசாலையிலும் தரம் 7 தொடக்கம் தரம் 13 வரையான வகுப்புகளில் கல்வி கற்கும் மாணவர்களிடையே சிறந்த வாசிப்புப் பழக்கமுள்ள மூன்று மாணவர்களைத் தெரிவு செய்து, அவர்களின் பெயர்களை இம்மாதம் 29 ஆம் திகதிக்கு முன்னர் வலயக் கல்விப் பணிப்பாளர்களுக்கு அனுப்பி வைக்குமாறு சகல பாடசாலை அதிபர்களும் கேட்டுக்கொள்ளப்பட்டுள்ளனர்.

## உ/தரத்திற்கு கொரிய மொழி



இந்த வருடத்திலிருந்து க.பொ.த உயர் தரத்திற்கான பாடங்களில் கொரிய மொழியும் உள்ளடக்கப்படும் என கல்வி அமைச்சர் பந்துல குணவர்தன தெரிவித்துள்ளார்.

அதற்கமைய, அந்தப் பாடத்தைக் கற்கும் முதலாவது மாணவப் பிரிவு 2012 ஆம் ஆண்டு நடைபெறும் உயர் தரப் பரீட்சையில் கொரிய மொழி வினாத்தாளுக்கு விடையளிக்க வேண்டி இருக்கும் என அமைச்சர் குறிப்பிட்டுள்ளார்.

கொரிய மொழியைக் கற்பதனூடாக, அந்நாட்டில் வேலை வாய்ப்புகளைப் பெறுவது இலகுவாக அமையும் என்பதனால், உயர் தரத்திற்கான பாடவிதானத்தில் கொரிய மொழியையும் உள்ளடக்கத் தீர்மானித்ததாக தெரிவித்த அவர், கொரிய மொழியை ஒருசில பாடசாலைகளில் ஆரம்பித்த பின்னர், படிப்படியாக அது ஏனைய பாடசாலைகளிலும் ஆரம்பிக்கப்படும் எனவும் தெரிவித்துள்ளார்.

## சா/தரத்திற்கு தோற்றிய 900 பேருக்கு மோசடிக் குற்றச்சாட்டு



கடந்த டிசம்பர் மாதம் நடைபெற்ற க.பொ.த சாதாரண தரப் பரீட்சைக்குத் தோற்றிய சுமார் 900 மாணவர்கள் மோசடிகளில் ஈடுபட்டுள்ளதாக குற்றம் சாட்டப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

பரீட்சை மத்தியநிலையங்களில் முறைகேடாக நடந்து கொண்டமை, வினாக்களுக்கு விடையளிப்பதற்கு ஏதுவான தாள்கள் மற்றும் குறிப்புக்களை உடன் வைத்திருந்தமை, தமக்குப் பதிலாக வேறொரு நபரை பரீட்சைக்கு அமர்த்தியமை, ஆள் அடையாளத்தை உறுதிப்படுத்தத் தவறியமை போன்ற குற்றச்சாட்டுகள் இவர்கள் மீது சுமத்தப்பட்டுள்ளதாக பரீட்சைகள் ஆணையாளர் அநுர எதிரிசிங்க தெரிவித்துள்ளார்.

## பாடசாலைகளில் பாலியல் கல்வி கற்பிப்பது அவசியம்

### கல்வி அமைச்சின் மேலதிக செயலாளர் தெரிவிப்பு

இலங்கையில் வருடந்தோறும் 16 வயதிற்குக் குறைந்த பெண் பிள்ளைகள்



தாய்மை அடையும் நிலை அதிகரித்து வருவதாகவும் இந்த நிலையை மாற்றுவதற்கு பாடசாலைகளில் தரம் 6 இல் இருந்து பாலியல் தொடர்பான கல்வியைக் கற்பிப்பது அவசி யம் எனவும் கல்வி அமைச்சின் மேலதிக செயலாளர் பாலித மஹிபால அண்மையில் சுகாதார கல்விப் பணியகத்தில் இடம்பெற்ற கருத்தரங்கொன்றில் கலந்துகொண்டு உரையாற்றும்போது தெரிவித் துள்ளார்.

குறைந்த வயதில் குழந்தைகளைப் பிரசவிக்கும்போது, குறித்த தாய் உடல், உள ரீதியான பாதிப்புகளுக்கு ஆளாவதுடன் பிறக்கும் குழந்தையும் ஆரோக்கியமற்றுக் காணப்படுகின் றது. எனவே, பாடசாலைப் பெண் பிள்ளைகளுக்கு இதுபற்றிய கல்வியை வழங்கி தெளிவுபடுத்தப்பட வேண்டியது அவசியமாகின்றது என அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

விஜய் Vijey
விஜய நியூஸ்பேப்பர்ஸ் லிமிட்டெட்
08, ஹுணுப்பிட்டிய குறுக்கு வீதி,
கொழும்பு - 02
தொலைபேசி: 2479653,
மின்னஞ்சல்: Vijey @ Wijeya.lk

பரிசுப் போட்டி வெற்றியாளர் விபரங்கள் 5ஆம் பக்கத்தில்...

## மழை வெள்ளம் கல்விச் செல்வத்தை அள்ளிச் சென்றிருக்க முடியாது!

**வணக்கம், அஸ்ஸலாமு அலைக்கும்**

நாட்டின் பல பாகங்களிலும் சில தினங்களாக நிலவிய சீரற்ற காலநிலையால் இயற்கை அழிவுகளும் அனர்த்தங்களும் ஏற்பட்டதை நாம் அனைவரும் அறிவோம். இதில் பாதிக்கப்பட்ட அனைவருக்கும் எமது கவலையைத் தெரிவிக்கின்றோம். மிகவும் வேதனைக்குரிய இந்த சம்பவங்களால் ஏராளமானவர்கள் நிர்க்கதி நிலைக்கு ஆளாகியுள்ளனர். சிறியோர், பெரியோர் என அனைவருமே இதில் உள்ளடக்கம். இத்தனை அனர்த்தங்களின் மத்தியிலும்கூட, நமது 'விஜய்' வாசகர்களாகிய மாணவர்கள், ஆசிரியர்கள், பெற்றோர், நலன் விரும்பிகள் என பலர் எம்முடன் தொடர்புகொண்டு தமது வேதனைகளை எம்முடன் பகிர்ந்து கொண்டமை மறக்கமுடியாத நிகழ்வாகவே உள்ளது. பலர் தமக்கு 'விஜய்' பத்திரிகையை வாசிக்க முடியாமல் போய்விட்ட அங்கலாய்ப்பையும் வெளிப்படுத்த மறக்கவில்லை.

வெள்ளநீர் வடிந்தோடினாலும் அனைத்துமே பழைய நிலைக்குத் திரும்புவதற்கு இன்னும் சில நாட்கள் ஆகலாம். அதுவும்கூட ஓர் உறுதியற்ற நிலைதான். அத்துடன், பல பாடசாலைகள்கூட இன்னமும் இயங்க முடியாத நிலையிலேயே உள்ளமை வேதனைக்குரிய விடயமே. எனினும், எமது மாணவர்களிடம் நாம் கேட்பதெல்லாம், எதற்கும் மனம் தளரக் கூடாது என்பதேயாகும். உளரீதியிலும் நம்மை வழமை நிலைக்குக் கொண்டுவர நாம் முயற்சிக்க வேண்டும். பலர் தமது கல்விப் புத்தகங்களைக்கூட இழந்திருக்கக்கூடும். இவ்வாறானவர்களுக்கு ஏனையவர்கள் தம்மிடம் உள்ள புத்தகங்களைக் கொடுத்து உதவுவது விலைமதிக்கமுடியாத ஓர் உதவியாகவே இருக்கும். ஏனெனில், கல்விதான் நமது எதிர்காலத்திற்கான சிறந்தவொரு மூலதனமாகும்; அத்திவாரமாகும். அதில் தடைகள் வராமல் பார்த்துக்கொள்வதுடன், மற்றவர்களுக்கும் இதில் ஒத்துழைப்புக் கொடுத்தல் வேண்டும்.

பிறருக்கு ஒரு கஷ்டம் என்றால் அதனையிட்டு ஏனையவர்கள் மனம் இரங்கும்போதுதான் அங்கு மனிதம் உணர்த்தப்படுகின்றது. எனவே, நாட்டின் எந்தத் திக்கில் இருந்தாலும் பாதிக்கப்பட்டவர்களுக்கு உதவக்கூடிய ஆவல், மனநிலை அனைவருக்கும் இருத்தல் வேண்டும். மனித வாழ்க்கை என்பது ஒருவரில் ஒருவர் தங்கி வாழ்தல் என்பதாகும். அதனை உணராதபோதுதான் கர்வத்தனம் மேலோங்குகின்றது. கர்வத்தனமானது, மனித சமூகத்திலிருந்து ஒருவரைத் தனிமைப்படுத்திவிடும். எனவே, அவ்வாறு அல்லாமல் மற்றவர்களின் இடத்தில் எம்மை வைத்துப் பார்க்கப் பழகிக்கொள்ளல் வேண்டும். அப்போது இயல்பாகவே பிறருக்கு உதவும் மனப்பக்குவம் வந்துவிடும்.

இயற்கையின் இந்த அனர்த்தத்தை தற்காலிக பின்னடைவாகவே கருதுவோமாக! அத்துடன், இதே இயற்கை அனர்த்தமானது, செழிப்பான ஒரு பாதையை வகுத்துத் தரும் என்றும் நம்புவோமாக! இத்தனை அனர்த்தங்களின் பின்னரும் 'விஜய்' மீது நீங்கள் வைத்துள்ள பிணைப்பும் உங்கள் மீது 'விஜய்' வைத்துள்ள பாசமும் என்றும் நிலையாகவே இருக்கும். என்றென்றும் நாம் உங்களுடனேயே இருப்போம்.

வெள்ளநீர் எதனை அள்ளிச் சென்றிருந்தாலும் நாம் கண்ணெனக் காக்கும் கல்விதனை அள்ளிச் சென்றிருக்க முடியாது. அதுதான் கல்வியின் சிறப்பும்கூட. அத்தகைய கல்விக்கான உரமிடலைத் தொடர்ந்தும் 'விஜய்' முன்னெடுக்கும். அனைவரும் சோதனைகளைத் தாண்டி சாதனை இலக்குகளை அடைவதற்கு எமது வாழ்த்துக்கள்.

சந்திப்போம்

அன்புடன்,
ஆசிரியர்.
*(வி.ரெட்லி ஹெரிசன்)*

## கணிதத்தில் சித்தியில்லாவிட்டாலும் உ/தரம் கற்க அனுமதி

### கணிதத்தில் விதிவிலக்கு வழங்குவது பற்றி ஆராயப்படும் -கல்வி அமைச்சர்

க.பொ.த சாதாரண தரப் பரீட்சை கணித பாடத்தில் சித்தியடையாவிட்டாலும் உயர் தரத்தைத் தொடர்வதற்கு அனுமதி வழங்கும் வகையில் கல்வித் திட்டத்தில் புதிய மாற்றமொன்றை ஏற்படுத்துவதற்கு கல்வியமைச்சு நடவடிக்கை எடுத்து வருவதாக கல்வி அமைச்சர் பந்துல குணவர்தன தெரிவித்துள்ளார்.

அரசாங்கத் தகவல் திணைக்களம் இது குறித்து வெளியிட்டுள்ள ஊடக அறிக்கையில்; சாதாரண தரப் பரீட்சை கணிதபாடத்தில் ஒருவர் சித்தியடையாவிட்டால் அது



அவருக்கு பாரிய இழப்பை ஏற்படுத்துகின்றது. எனவே, அத்தகையவர்களுக்கு கணித பாடம் முக்கியத்துவமளிக்காத வகையில் மாற்று வழிகளில் உயர் கல்வியைத் தொடர்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. இசை மற்றும் விளையாட்டுத் துறைகளில் உயர் கல்வியைத் தொடரவுள்ளவர்களுக்கு கணித பாடத்தில் விதிவிலக்கு வழங்குவது பற்றி ஆராய்ந்து, அதுகுறித்து விரைவில் தீர்மானம் எடுக்கப்படவுள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

இது குறித்த விரிவான தகவல்கள் 11ஆம் பக்கத்தில் இடம்பெற்றுள்ளன.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 5-14 வயதுடைய பிள்ளைகள் சகலருக்கும் கல்வி



**புத்தாண்டு பிறந்துள்ளது. பெற்றோர் தங்களது பிள்ளைகளை பாடசாலைகளில் சேர்ப்பதில் மிகவும் மும்முரமாக ஈடுபட்டிருப்பர். அத்துடன், உரிய வயதை அடைந்தும் பாடசாலை செல்லாத பிள்ளைகளும் இருந்துகொண்டே இருக்கின்றனர். அவர்களையும் கற்றலின்பால் கவனம் செலுத்துவதற்கு கட்டாயக் கல்வி பற்றிய எண்ணக்கருவை விளங்கியிருப்பது அவசியமாகும்**





அந்த அடிப்படையில், நமது நாட்டில் இன்று கட்டாயக் கல்வி பெறும் உரிமை பேணப்பட்டு வருகின்றது. 5-14 வயதிற்கு இடைப்பட்ட சகல சிறார்களும் கட்டாயமாகப் பாடசாலை செல்ல வேண்டுமென்ற சட்டத்தை வகுத்து அதனை நாடாளுமன்றத்தில் நிறைவேற்றி வர்த்தமானி அறிவித்தலின் மூலம் பிரகடனப்படுத்தப்பட்டு, 1998 ஆம் ஆண்டு ஜனவரி மாதம் 01 ஆம் திகதி தொடக்கம் நாடு முழுவதும் அமுல்படுத்தப்பட்டு வருகின்றமை யாவரும் அறிந்த விடயமாகும்.



இதன்படி, ஒவ்வொரு பிள்ளைக்கும் கல்விக்கான சந்தர்ப்பத்தை ஏற்படுத்திக் கொடுப்பது சகல பெற்றோர்களினதும் பாதுகாவலர்களினதும் தலையாய கடமையாகும். இக்கடமையை உதாசீனம் செய்வோர் சட்டப்படி குற்றவாளிகளே. இருப்பினும், நாட்டில் மேற்குறிப்பிட்ட 5-14 வயதிற்குட்பட்ட பல ஆயிரக்கணக்கான பிள்ளைகள் அடிப்படைக் கல்வியைப் பெறாது வீடுகளிலும் வயல், கடற்கரை, தொழில் நிறுவனங்களிலும் வேலைகளில் ஈடுபடுத்தப்பட்டு வருகின்றமை மிகவும் பரிதாபத்திற்குரிய விடயமாகும்.

நாட்டில் இவ்வாறான பிள்ளைகளை இனங்கண்டு அவர்களை பாடசாலைகளில் சேர்ப்பதற்கு இருவகையான குழுக்கள் நாடுபூராகவும் நிறுவப்பட்டுள்ளன.

**1. பிள்ளைகளை பாடசாலைக்கு வரவழைக்கும் குழு:** இது கிராமசேவையாளர் மட்டத்தில் காணப்படும். இதில் உரிய பிரதேசத்துப் பாடசாலைகளின் அதிபர்கள், கிராம உத்தியோகத்தர், சமுர்த்தி உத்தியோகத்தர், பாடசாலை அபிவிருத்தி அமைப்பின் பிரதிநிதி போன்றோர் காணப்படுவர்.

**2. பிள்ளைகளை கட்டாயமாகப் பாடசாலைக்குச் சமூகமளிப்பதைப் பரிசீலனை செய்யும் குழுக்கள்:** இது பிரதேச செயலாளர் பிரிவில் இயங்கும். இக்குழுவில் உரிய கோட்டக்கல்வி அதிகாரி,சிறுவர் பாதுகாப்பு உத்தியோகத்தர், உதவிப் பொலிஸ் அத்தியட்சகர், சமூகத் தலைவர்களில் ஒருவர் போன்றோர் அங்கத்தவர்களாகக் காணப்படுவர். இவர்கள் ஊடாக, பாடசாலைக்கு மாணவர்களை வரவழைப்பதற்கும் கட்டாயக் கல்வியை வழங்குவதற்கும் இந்த அங்கத்தவர்களுக்கு உதவுதல் ஒரு சமுதாயக் கடமையாகும்.



இவ்வாறான குழுக்கள் உரிய முறையில் இயங்கிய போதிலும், சில மாணவர்கள் தமது கல்வியை இடைநடுவிலும் விட்டுவிடுகின்றனர். தற்போது, கிராம மட்டத்திலான சிறுவர் உரிமைகள் கண்காணிப்பு, பாதுகாப்புக்குழுக்கள் சில பிரதேசங்களில் இயங்கினாலும் அவர்களது கண்காணிப்பையும் மீறி சில பெற்றோர்கள் தங்களது பிள்ளைகளை தொழிலில் ஈடுபடுத்தவே முனைகின்றனர்.

பின்வரும் அடிப்படை அம்சங்களின் பிரகாரம் பிள்ளைகளுக்கு கட்டாயக் கல்விக்கான சந்தர்ப்பத்தை வழங்குவதற்கு நாம் ஒவ்வொருவரும் தயாராகுதல் வேண்டும்.

1. கிராம உத்தியோகத்தர் பிரிவில் வசிக்கும் இவ்வயதுடைய பிள்ளைகளில் பாடசாலைக்குச் செல்லாதவர்களை இணங்காணல்.

2. அவர்கள் பாடசாலைக்குச் செல்லாதிருப்பதற்கான காரணங்களைக் கண்டறிதல்.

3. கல்வியின் முக்கியத்துவம் பற்றி அவர்களது பெற்றோர் அல்லது அவர்களை பராமரிப்பவர்களுக்கு அறிவுறுத்தல்களை வழங்குதல். அதற்காக வேண்டி கிராம மட்டத்தில் ஒன்றுகூடக் கூடிய சந்தர்ப்பங்களை ஏற்படுத்தல்.

4. அவர்களுக்குப் பொருத்தமானவாறு கல்விக்கான சந்தர்ப்பத்தை ஏற்படுத்திக் கொடுத்தல்.

5. தேவையான சந்தர்ப்பங்களில் உதவி பெற்றுக்கொள்ளக்கூடிய நபர்கள் மற்றும் அமைப்புக்கள் என்பனவற்றுடன் தொடர்புகளை ஏற்படுத்திக் கொள்ளல்.

6. கல்வி வழங்கும் பாடசாலை மற்றும் நிறுவனமொன்றில் சேர்ப்பதற்கு அவசியமானவையாகக் காணப்படும் ஆவணங்கள், சுற்றுநிருபங்கள் போன்றன பற்றிய அறிவுறுத்தல்களை வழங்குதல்.

அத்துடன், கல்வியைப் பெற்றுக்கொள்வது என்பது ஒவ்வொரு பிள்ளையினதும் உரிமையாகும். பிறப்பத்தாட்சிப் பத்திரம் இன்மை, உடல் குறைபாடுகள், பாடசாலை செல்லும் வயதைத் தாண்டியிருத்தல், தொழிலில் ஈடுபட்டிருத்தல் போன்றவை கல்வி கற்பதற்கான தடைகள் அல்ல என்பதை நாம் ஒவ்வொருவரும் அறிந்து கொள்ளல் அவசியமானதாகும்.

எனவே, இவ்வாறான பிள்ளைகளுக்கு கல்விக்கான சந்தர்ப்பங்களை பின்வரும் நடவடிக்கைகள் மூலமாக ஏற்படுத்த முனையலாம்.

1. பாடசாலை ஒன்றிற்கு அனுப்புவதன் ஊடாக,

2. முறைசாராக் கல்வி எழுத்தறிவு வகுப்புக்கு அனுப்புவதன் மூலம்.

3. விசேட கல்விப் பிரிவுடன் தொடர்புபடுத்துவதன் மூலமாக.

4. மதவழிபாட்டு நிலையப் பாடநெறியொன்றுடன் தொடர்புபடுத்துவதன் மூலம்.

5. பொருளாதாரக் கஷ்டங்களால் கல்விக்கான சந்தர்ப்பத்தை இழக்கும் பிள்ளைகளுக்கு ஒழுங்கு முறைக்கேற்ப உங்களால் இயன்ற உதவிகளை வழங்குதல் போன்ற நடவடிக்கைகள் மூலமாக இச்சந்தர்ப்பங்களை ஏற்படுத்துவது சாலச்சிறந்தது.




## கற்பதற்கான உரிமை என்பது...

- வாசிப்பதற்கும் எழுதுவதற்குமான உரிமை.
- கேள்வி கேட்பதற்கும் அதனை விளங்குவதற்குமான உரிமை.
- ஆக்கங்களை உள்ளத்தால் படைப்பதற்கும் ஆய்வுகளை மேற்கொள்வதற்குமான உரிமை.
- தமது உலகம் தொடர்பாக வாசிப்பதற்கும் அதனை வரலாறாக எழுதுவதற்குமான உரிமை.
- கல்வி வளங்களுக்குள் பிரவேசிப்பதற்கான உரிமை.
- தனிநபரினதும் ஒரு கூட்டமைப்பினதும் திறமைகளை வளர்ப்பதற்கான உரிமை.

இவ்வாறான பல உரிமைகள் இருந்தபோதிலும் மாணவர்களின் வரவை அதிகரிப்பதற்கு உணவு, உடை, புத்தகம் போன்றவற்றை அரசு மாணவர்களுக்கு வழங்குகிறது. கல்வியூடாக, நாட்டின் நற்பிரஜைகளாக அவர்கள் வரவேண்டும் என்பதே இதன் முக்கிய நோக்கமாகும். சிறார்களின் அறிவை வளர்ப்பது நம் அனைவருக்கும் உள்ள கடமையும் பொறுப்புமாகும் என்பதை அனைவரும் அறிந்திருத்தல் அவசியமாகும்.

-(ஊ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# பிரபஞ்ச நட்சத்திரங்கள்

பிரபஞ்சத்தில் சுமார் நூறு கோடிக்கும் மேற்பட்ட எண்ணிக்கையிலான நட்சத்திரங்கள் இருப்பதாகக் கூறப்படுகின்றது. இவற்றில் சில நட்சத்திரங்களின் வயது சுமார் 1500 கோடி ஆண்டுகள். பெரும்பாலான நட்சத்திரங்கள் 10 லட்சம் முதல் ஆயிரம் கோடி ஆண்டுகள் வரையான ஆயுளை உடையவை. நட்சத்திரங்களில் ஹைட்ரஜன் 75 சதவீதம், ஹீலியம் 22 சதவீதம் என்ற அளவிலும் ஒக்சிஜன், நியோன், காபன், நைட்ரஜன் போன்ற வாயுக்களும் அடங்கியிருப்பதாகக் கூறப்படுகின்றது.



இவற்றில் சில சூரியனின் 20 இல் ஒரு பங்கு நிறை முதல், சூரியனைப் போல் 100 மடங்கு நிறை வரை கொண்டிருக்கின்றன. மிக அருகில் உள்ள நட்சத்திரம் (சூரியனைத் தவிர்த்து) 'அல்பா சென்டரி' எனப்படுகின்றது. இது 4.3 ஒளி ஆண்டுகள் தொலைவில் உள்ளது.

வெகு தொலைவில் உள்ள நட்சத்திரம், 'டேனப்' என்பதாகும். இது ஆயிரத்து 600 ஒளி ஆண்டுகள் தொலைவில் அமைந்துள்ளது.


பிரகாசமான நட்சத்திரம் (சூரியனைத் தவிர்த்து) சீரியஸ் ஆகும். பெரிய நட்சத்திரம் ஏறத்தாழ 1.6 பில்லியன் கிலோமீற்றர் விட்டம் கொண்டது. சிறிய நட்சத்திரமாக நியூட்ரன் நட்சத்திரங்கள் காணப்படுகின்றன. அவை சுமார் 20 கிலோமீற்றர் விட்டம் கொண்டவை.

நீலம், வெள்ளை, மஞ்சள் அல்லது சிவப்பு ஆகிய நிறங்களில் நட்சத்திரங்கள் காணப்படும். நட்சத்திரத்தின் மேற்பகுதியில் உள்ள வெப்ப அளவின் அடிப்படையில் இந்த நிறங்களைப் பெறும். நீல நட்சத்திரங்களின் மேற்பகுதி வெப்பநிலை 28 ஆயிரம் பாகை செல்சியஸ் ஆகவும், சிவப்பு நட்சத்திரங்களின் மேற்பகுதி வெப்பநிலை 2 ஆயிரத்து 800 பாகை செல்சியஸ் ஆகவும் இருக்கும் என்று அளவிடப்பட்டுள்ளது. அத்துடன், அவற்றின் உட்பகுதி வெப்பநிலை சுமார் 11 லட்சம் பாகை செல்சியஸ் எனக் கூறப்படுகின்றது.

# விண்வெளிச் சுற்றுலாவுக்கான மற்றுமொரு விண்வெளி ஓடம்


சுற்றுலாப்பயணம் என்றால் பொதுவாக அது நாடு விட்டு நாடு,கண்டம் விட்டுக் கண்டம் செல்வதாகவே அமைந்திருந்தது. ஆனால், தற்போது பூமியிலிருந்து விண்வெளிக்கே சுற்றுலாப்பயணம் செய்யும் காலம் ஆரம்பமாகவுள்ளது. அந்த சுற்றுலாப் பயணங்களை






ஏற்பாடு செய்வதில் பல்வேறு தனியார் நிறுவனங்கள் போட்டி போட்டு வருகின்றன. அந்தவகையில், இந்த விண்வெளிச் சுற்றுலாவில் கலந்துகொள்ள சுற்றுலாப் பயணிகளும் முன்பதிவு செய்துள்ளனர். விண்வெளிச் சுற்றுலாவுக்காக ஈடுபடுத்தப்படவுள்ள ஓடங்களின் பட்டியலில் ஒன்றுதான் 'skylon' ஓடம் பிரித்தானிய வடிவமைப்பாளர்களே இந்த முயற்சியில் ஈடுபட்டுள்ளனர். இன்னும் 10 வருடகாலத்தில் பூமியிலிருந்து விண்வெளிக்குச் செல்லக்கூடியதாக இது வடிவமைக்கப்பட இருக்கின்றது.





கிட்டத்தட்ட 24 பயணிகளை ஏற்றிக்கொண்டு ஒலியைவிட 5 மடங்கு வேகத்தில் பயணிக்கக்கூடியதாக இது வடிவமைக்கப்படுவதுடன், இந்த விண்வெளி ஓடம் சுமார் 270 அடிகள் உடையதாகவும் புவி மேற்பரப்பின் மேல் 18 மைல்கள் செல்லக்கூடியதாகவும் வடிவமைக்கப்பட்டு வருகின்றது. அத்துடன், இந்த ஓடமொன்றை வடிவமைக்க சுமார் 700 மில்லியன் பவுண்கள் தேவைப்படுவதாகவும் கூறப்படுகின்றது.

இந்த ஓடத்தில் இரண்டு எஞ்சின்கள் உள்ளன. அவை வெளிப்புறத்திலிருந்து ஐதரசனையும் ஒக்சிஜனையும் உறிஞ்சி சக்தியைப் பெற்றுக் கொள்ளும் திறன் வாய்ந்ததாக இருக்கும் என்றும் தெரிவிக்கப்படுகின்றது.

# விண்வெளி வரை முன்னேறிய ரொக்கெட்டின் வரலாறு


விண்வெளிக்குச் சென்று ஆராய்ச்சிப் பணிகளைத் தொடர்வதற்கு ரொக்கெட்களின் உதவி அவசியமாகின்றது. ஆரம்ப காலத்தில் மிகச் சிறியளவு நீளத்தில் அமைந்திருந்த ரொக்கெட்கள் இன்று அளவில் பிரமாண்டமானவையாகக் காணப்படுகின்றன. இன்றளவில் மிகச் சிறியது எனக் கூறப்படும் ரொக்கெட்கள் குறைந்தது 100 அடி நீளத்தில் இருக்கும்.

ரொக்கெட்களை 'நவீன காலக் கண்டுபிடிப்பு' என்று நாம் கருதினால் அது தவறான கருத்தாகவே அமையும். ஏனெனில், ரொக்கெட்களின் ஆரம்பகாலம் கி.பி.1232 ஆம் ஆண்டுவரை பின்நோக்கிச் செல்கின்றது. மேலும், அன்றைய காலத்தில் ரொக்கெட்கள் போர் நடவடிக்கைகளுக்காக மட்டுமே பயன்படுத்தப்பட்டன. அதன்படி, இன்றைய கால ரொக்கெட்களை 'தொழில்நுட்ப முன்னேற்றம் பொருந்திய ரொக்கெட்கள்' எனக் கூறலாம்.

எவ்வாறாயினும், கி.பி.1232 ஆம் ஆண்டிலேயே முதன் முதலாக மொங்கோலியர்களுக்கு எதிரான போரில் சீனர்கள், ரொக்கெட்டுகளை ஆயுதங்களாகப் பயன்படுத்தியதாக வரலாற்று அறிஞர்கள் தெரிவிக்கின்றனர்.

இந்தியாவில், கி.பி.1792 ஆம் ஆண்டில் பிரிட்டிஷ் அரசு, ஸ்ரீரங்கத்தை முற்றுகை இட்டபோது, அப்போது மைசூரை ஆண்ட சுல்தானின் படைகள், பிரிட்டிஷ் அரசுக்கு எதிராக ரொக்கெட்டுகளைப் பயன்படுத்தின. அத்துடன், 19 ஆம் நூற்றாண்டின் மத்திய பகுதி வரை ஐரோப்பிய நாடுகளின் படைகள் ஆயுதமாக, ரொக்கெட்டுகளைப் பயன்படுத்தி உள்ளன.


மொங்கோலியர்களுக்கு எதிராக சீனர்களின் ரொக்கெட் தாக்குதல்


V-2 ரொக்கெட்

ஆனால், அன்றைய ரொக்கெட்டுகள் அளவில் சிறியவை; தொழில்நுட்பத்திலும் திறனிலும் குறைந்த ஆற்றல் உடையவையாகவே இருந்தன. இரண்டாம் உலகப்போர் நடைபெற்ற காலத்தில் 1944 ஆம் ஆண்டு செப்டெம்பர் மாதம் V-2 எனப்படும் ரொக்கெட்டை ஜேர்மனி முதன் முதலாகப் பயன்படுத்தியது. எனினும், இவை திப்பு சுல்தான் காலத்து ரொக்கெட்டில் இருந்து முற்றிலும் வேறுபட்டவையாகத் திகழ்ந்தன. சுல்தான் காலத்து ரொக்கெட்டுகளில் 'கரிப்பொடி' என்று சொல்லப்படும் வெடிமருந்துப் பொருள் பயன்படுத்தப்பட்டது. V-2 ரொக்கெட் குண்டுகளோ, திரவ எரிபொருளைப் பயன்படுத்தும் ரொக்கெட் என்ஜின்களைக் கொண்டவை.

இவ்வாறெல்லாம் வெறும் போர் நடவடிக்கைகளுக்காக மட்டும் பயன்படுத்தப்பட்ட ரொக்கெட்கள், பிற்காலத்தில் பல்வேறு தொழில்நுட்ப முன்னேற்றங்களை அடைந்தன. அதன்படி, இன்று விண்வெளிக்கு செய்மதிகளை எடுத்துச் சென்று நிலைநிறுத்தவும் விண்ணோடங்களை தாங்கிச் செல்லவும் என ரொக்கெட்கள் பயன்படுத்தப்படும் அளவுக்கு அவை முன்னேற்றமடைந்துள்ளன.




# பரிசுப் போட்டியில் வெற்றி பெற்றவர்கள்

(கடந்த வாரத் தொடர்ச்சி.....)

**டீ மக்ஸ் (Tea Mugs) வெற்றியீட்டியோர்:**




38. சு.லெ.பா.நஸ்ஹெறா, 222/2, பழைய வீதி, காத்தான்குடி-01.
39. எம்.ஏ.ஜே.எம்.ஆசிம், முஹம்மதியா வீதி, பிறைந்துரைச்சேனை.
40. லூ.லக்ஷனாமேரியன், உரும்பிராய் கிழக்கு, உரும்பிராய்.
41. ப.கோசலா, சில்லாலை, பண்டத்தரிப்பு.
42. எம்.எச்.எஃப்.ஹஸ்னா, 17/2, கல்லோவிட்ட, கன்னத்தோட்டை.
43. தஸ்லிமா ஹரீட், 89/3, உகுரஸ்ஸபிடிய, கடுகஸ்தொட.
44. என்.ஷலோமி, மடுக்கரை, இல-A/69, நானட்டான், மன்னார்.
45. அபிராமி இந்திரகுமாரன், சுழிபுரம் கிழக்கு, சுழிபுரம், யாழ்ப்பாணம்.
46. ஏ.எல்.ஷியாமா, 12/15, தரலந்த வீதி, மாத்தளை.
47. செ.பாத்திமா சுஜைதா, 202A, மீராநகர் வீதி, நிந்தவூர்-11.
48. ஏ.எம்.அஹ்னஃப், 40A, முஸ்லிம் பாடசாலை வீதி, பெரிய நீலாவணை-02.
49. ஐ.எம்.ரினாஸ், 501, பள்ளிவாயல் வீதி, மாவடிச்சேனை-05, வாழைச்சேனை.
50. எம்.ஏ.எஃப்.சஸ்னா, A01 அஹஸ்வெவ, ஹபுகஸ்தலாவ.
51. அஸாம் ஸுல்பிகார், 293/3A, அம்பகஹவத்த, நாவின்ன, உலுவிடிகே, காலி.
52. கே.சுதர்சன்,130/1, 1 ஆம் ஒழுங்கை, குட்செட் வீதி, தோணிக்கல், வவுனியா.
53. முஹமட் முஜாஹித், 271/B/4, அம்பகஸ்தன்ன வீதி, இலுக்வத்த, கடுகன்னாவ.
54. ஏ.எம்.எம்.சிறாஜ், 15B, யஹலதென்ன, கண்டி.
55. எஸ்.டி.எம்.ஷாபிதீன், 40, மே வீதி, ஹம்பாந்தோட்டை.
56. பத்மநாதன் ஜெரேமியா, 'துவாரகை', பெரியகல்லாறு, கல்லாறு.
57. எம்.ஜே.அப்துல் பாஸித், 477/1, தக்கியா வீதி, தழுவகொடுவ, கொச்சிக்கடை.
58. ஹம்தா பானு லியாவுடீன்,
    33-A, முஸ்லிம் பள்ளி ஒழுங்கை, நாவல வீதி, ராஜகிரிய.
59. எம்.ஏ.பீ.வஸீம் அக்ரம், 68, உடையார் ஒழுங்கை, புத்தளம்.
60. ஜே.எம்.அர்சாத், புதிய சந்தை வீதி, ஓட்டமாவடி-01.
61. மொகமட் ஸிஹான்,
    71/8, தேசிய வீடமைப்பு, மஹலியத்தை, பதுளுபிடிய, பதுளை.
62. ஏ.எஸ்.எஸ்.ஃபாத்திமா, 114, தஸ்னீம் மன்ஸில், வெயாங்கல்ல, அகலவத்தை.
63. எம்.எம்.ஃபாத்திமா, 57, அகுரஸ்ஸ வீதி, வெலிகம.
64. எம்.என்.உமைமா, 148, மல்கமந்தெனிய, அலவதுகொட.
65. எச்.ஏ.எஃப்.ஜமீலா, 299,C முன்வதுகொட, தந்துர.
66. ஏ.மாதங்கி, 227, 2 ஆம் குறுக்குத் தெரு, வவுனியா.
67. ஃபஸ்மினா ஃபாருக், 103 மீகஹாமுல்ல, அடுலுகம, பண்டாரகம.
68. எம்.எச்.எஃப்.ஷாகிரா, 6A, ஸ்ரீ ஜினா மாவத்தை, கெசெல்வத்த, பாணந்துறை.
69. பு.விஜோஜன், தனிப்பனைக் குடியேற்றம், வல்வெட்டித்துறை.
70. ஏ.ஏ.ஆய்ஷா, 56/2, ஹுரிமலுவ, றம்புக்கன.
71. அபுல்கலாம் முஸ்தாக், இல-147, கல்பிட்டி வீதி, திகழி, ஏத்தாளை.
72 எம்.ஆர்.எம்.பாஸித், 257/4, பழைய வீதி, மஹாகொட, பேருவளை.
73. கே.ஏ.எஃப்.அஃப்ரா, 77/12, லோடஸ் வீதி, தர்கா நகர்.
74. ச.ஹ.நுஸ்கா, 195, முஸ்தபா பீசி வீதி, அட்டாளைச்சேனை-15.



(மிகுதி அடுத்த வாரம்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# சமூகத்து
# நமக்கு சமூக

**ஒருநாள் காட்டில் வீசிய கடும் காற்றால் ஒரு மரத்தின் உச்சிக்கிளையிலிருந்த கிளிக் கூட்டிலிருந்து இரண்டு குஞ்சுகள் வேறு வேறு பக்கங்களில் விழுந்தன. அவற்றில் ஒன்று ஒரு முனிவரின் ஆசிரமத்துக்கு அருகிலும், மற்றையது கள்வர் குகைக்கருகிலும் விழுந்தன. பிற்காலத்தில் ஆசிரமத்தில் விழுந்த கிளி வளர்ந்து நல்ல வார்த்தைகளைப் பேசவும் கட்டுப்பாட்டோடு வாழவும் பழகிக்கொண்டது. கள்வர் குகையில் விழுந்த கிளியோ தீய வார்த்தைகளைப் பேசவும், முறையற்ற விதத்தில் நடக்கவும் பழகிக்கொண்டது**



மிருகம் பறவை அல்லது மனிதன் என எந்த உயிரினமானாலும் சமூக சூழலுக்கேற்பவே அவற்றின் வாழ்வு முறைகளும் அமைகின்றன. மனிதர்களாகிய நாம் தனியாக வேறுபட்டு வாழ முடியாது. குடும்பம் எனும் ரீதியிலேயே முதலில் நாம் இதில் சம்பந்தப்படுகிறோம். பின்னர் பாடசாலை, கிராமம், நகரம் என்றெல்லாம் அனுபவங்களைப் பெறுகிறோம். இதன்படி, சூழலையும் அதன் செயற்பாடுகளையும் உணர்ந்து அதன்படி நடக்க வேண்டிய விதத்தைக் கற்றுக் கொள்கிறோம்.

## குடும்பம் என்றால் என்ன?

பொதுவாக் தாய்,தந்தை, பிள்ளைகள் ஆகியோர் இணைந்து அன்புடன் வாழும் அமைப்பே குடும்பம் எனலாம். நமது சமூகத்தில் இருவகைக் குடும்பங்களைக் காணலாம். அவையாவன; தாய், தந்தை, பிள்ளைகள் ஆகியோரைப் பிரதானமாகக் கொண்ட குடும்பம் மற்றும் அவர்களோடு பாட்டி, பாட்டன், மாமன், மாமி ஆகியோரும் சேர்ந்த பெருங் குடும்பம் என்பதாகும்.

இந்த இரண்டு குடும்ப அமைப்புகளையும் விட பலவீனமான குடும்ப அமைப்பொன்றும் உண்டு. அதாவது, பெற்றோரை இழந்த பிள்ளைகள், வேறு பராமரிப்பாளர்களின்கீழ் வாழும் குடும்பம் என்பதே அது. சமூகத்திலும் இத்தகைய பிள்ளைகளை நாம் காணலாம். இவர்கள் பெற்றோரை இழந்திருப்பினும், அவர்கள் மூலம் கிடைக்க வேண்டிய அன்பும் அரவணைப்பும் புத்திமதியும் வேறு நபர்களால் இப்பிள்ளைகளுக்குக் கிடைப்பதென்பது விசேஷ அம்சமாகும்.

## குடும்பம் எவ்வாறு நமக்கு முக்கியத்துவமாகின்றது?

சமூகத்திலுள்ள குணநலன்களைத் தெரிந்து அவற்றை வாழ்வு முறையோடு தொடர்புபடுத்த நமக்கு முதலில் எமது குடும்பமே பயிற்றுவிக்கின்றது. ஒரு மிருகத்துக்கு சப்தமிடவும் உண்ணவும் ஓடிப்பாயவும் இயல்பாகவே முடியும். எனினும், மனிதனோ சமூகத்துக்கு ஏற்றவாறும் குடும்ப சூழலினாலும் தனது நடைமுறைகளை நிர்ணயித்துக் கொள்கின்றான்.

அது மாத்திரமல்ல, குழுவாகச் சேர்ந்து நெருங்கிய ஒத்துழைப்போடு தொழிற்படவும் சில விடயங்களில் பேச்சுவார்த்தை நடத்தி பொது இணக்கப்பாட்டுக்கு வரவும் நாம் குடும்பத்தின் மூலமே அடிப்படை பயிற்சிகளைப் பெற்றுக்கொள் கிறோம்.



அத்தோடு, சிறு வயதில், பிள்ளைகளுக்குத் தேவையான அரவணைப்பையும் எதிர்கால நலன்களையும் குடும்பத்தின் மூலமே பெற முடியும். அத்துடன், தமது பெற்றோரை முன்மாதிரியாகக் கொண்டு சமூக நடவடிக்கைகளில் முன்னேறிச் செல்லும் பிள்ளைகளின் ஒழுக்க மேம்பாடானது சிறுபராயத்திலேயே அவர்களுக்கு வழங்கப்பட்டதாகும்.

## பாடசாலை

முதலில் குடும்பத்திலிருந்தே பயிற்றுவிக்கப்படும் பிள்ளைகள்



இரண்டாவதாக சமூக வாழ்வுக்கெனப் பயிற்சி பெறும் இடம் பாடசாலையாகும். அங்கு அதிபர் உட்பட ஆசிரியர்கள் பல்வேறுபட்ட குண இயல்புகளை உடைய மாணவர்கள் ஆகியோரின் கூட்டுறவு ஏற்படுகிறது. அந்தவகையில் பாடசாலைகளின் மூலம் உரிய பரீட்சைப் பெறுபேறுகளையும் சுய ஆளுமைகளையும் பெற்றுக்கொள்ளலாம். ஆகையால் பாடசாலையானது நமது சமூகத் தேவைகளையும் சிந்தனைத் தேவைகளையும் சுய தேவைகளையும் வளர்த்தெடுக்கும் ஓர் இடம் எனலாம்.

## பாடசாலை எப்படி நமக்கு முக்கியத்துவமாகின்றது?

பாடசாலை செல்லும் பிள்ளைகள் அங்கே தமது திறமைகளை வளர்ப்பதோடு கணிதம், வரலாறு, அறிவியல் ஆகியவற்றில் புலமையையும் பெறுகின்றன. அங்கே ஆசிரியர்களும் பிள்ளைகளும் குழுவினராகச் செயற்பட, ஒருவருக்கொருவர் அச்சப்படும் பிள்ளைகளும் கூட தைரியம் கொள்கின்றனர். ஆக, பிள்ளைகள் எதிர்காலத்துக்கு ஏற்றவாறு வாழ பாடசாலையே பயிற்றுவிக்கின்றது. அங்கே தைரியமாகச் செயற்பட்டோரே சமூகத்தில் முன்னிலை வகிக்கின்றனர்.

இங்கு திவ்யா நன்கு கற்கக்கூடிய மாணவி. பாடசாலையில் சரித்திர பாடத்தில் தேர்ச்சி பெற்றிருந்தாள். மேனகா அவளது நல்ல நண்பியாவாள். எனவே, திவ்யா இடைவேளை வந்தால் மேனகாவிடம் ஓடிப்போவாள். மேனகாவுக்கும்கூட திவ்யாவைக் காணாமலிருக்க முடியாதிருந்தது. காரணம் திவ்யா நடித்துக்கூறும் கதையைக் கேட்க மேனகாவுக்கிருந்த ஆர்வமேயாகும். இதுவே, அவர்களின் நெருங்கிய நட்புக்குக் காரணமாக இருந்தது. திவ்யாவுக்கு இத்தகைய அழகிய கதைகளை அவளது பாட்டியே சொல்லிக் கொடுத்திருந்தாள். இவ்வாறு மேனகாவுக்குக் கதைகளைக் கூற அவளது குடும்பத்தில் எவரும் இருக்கவில்லை. அதனால், நல்லதொரு நண்பியைப் பெற்றதாக எண்ணிய மேனகா பல கதைகளை அவளிடம் கேட்டறிந்தாள். அத்துடன், திவ்யா மற்றவருடன் நட்புறவுடன் செயலாற்றக்கூடிய மாணவியாவாள். அவள் தனது அண்ணனின் மூலமே இவற்றைக் கற்றுக் கொண்டாள். தனது வீட்டுக்கு வரும் விருந்தாளிகளுக்கு விருந்தளிப்பதையும் அவர்களுக்கு உபசாரம் செய்வதையும் அண்ணா வழக்கமாகக் கொண்டிருந்தார். இதை திவ்யா பார்த்திருந்தாள். அண்ணா இப்பழக்கத்தைக் குடும்ப உறவினர்களிடமிருந்தே பெற்றிருந்தார்.



திவ்யா போன்ற நற்குணமுள்ள நண்பியோடு பழக மேனகாவால் இயன்றபோதும் மேனகாவின் அண்ணனுக்கு அத்தகைய வாய்ப்பு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# க்கு நாமும் மூகம் தேவை



கிடைக்கவில்லை. இதன் காரணமாக பாடசாலை அதிபரால் மேனகாவின் பெற்றோர் பாடசாலைக்கு அழைக்கப்பட்டிருந்தார்கள். காரணம் மேனகாவின் அண்ணனின் நடவடிக்கைகள் தொடர்பாக எடுத்துக்கூறுவதற்கேயாகும். அந்தவகையில் திவ்யா மற்றும் மேனகா ஆகியோரின் விடயத்தில் பல படிப்பினைகள் எமக்குக் கிடைக்கின்றன.

மேனகாவின் அண்ணனுடைய நண்பர்களைப் போன்ற நல்லவர்போல் வேடமணிந்த தீயவர்கள் நமது மத்தியிலும் இருக்கலாம். அதுபோல் திவ்யா போன்ற உண்மை நண்பியும் இருக்கலாம். நமது குடும்பத்துக்குள் மட்டுமல்ல பாடசாலையிலும் கூட இத்தகையோர் இருக்கலாம். அவர்கள் யாரெனத் தெரிவு செய்து பழகுவதில் மிகுந்த அவதானம் தேவைப்படுகின்றது.



## சமூகத்தைப் பற்றி அறிந்துகொள்வோம்

பலர் இணைந்த அமைப்பு சமூகம் எனப்படுகிறது. இதில் சமூகத் தொடர்பு முறைகள் நிகழ்கின்றன. சமூகத்தில் நான்கு பிரதான அடையாளங்களை நாம் காணலாம். அவையாவன;

- **நிரந்தர நிலத் தொகுதி அமைதல்.**
- **இடைவிடாது அந்த இனத்தின் பெருக்கம் நிகழுதல்.**
- **சுதந்திர உணர்வோடு அப்பிரஜைகள் வாழுதல்.**
- **பழக்க வழக்க கலாசாரம் குணநலன்களுக்கேற்ப வாழுதல் .**

பல குடும்பங்களின் இணைப்பாலேயே சமூகம் உருவாகிறது. அந்தவகையில் ஏதோ ஒரு குடும்பத்தின் அங்கத்தவராகவே மனிதர்கள் வாழ்கின்றார்கள். அவர்கள் வெவ்வேறு மதங்களை அனுஷ்டிக்கிறார்கள். அவ்வாறே பல்வேறு மொழிகளையும் பேசுகிறார்கள். பலவகை ஆடைகளை அணிகிறார்கள். பல்வேறுபட்ட உணவு வகைகளை உண்கிறார்கள். அதனால்தான் சமூகத்தில் பல சமூக அமைப்புகள் காணப்படுகின்றன.



## சமூகத்தின் முக்கியத்துவம்

சமூகமென்பது பாரிய சனத்தொகையினரோடு ஒத்துழைத்துக் கொடுத்து வாங்கும் அமைப்பாகும். பாடசாலை வாழ்வை முடித்து தொழில்புரிய ஆரம்பித்த பின் நாம் பலதரப்பினரதும் நட்புக்கு ஆளாவோம். அவர்கள் ஒத்த வயதினராக இல்லாதிருக்கலாம். அதுபோல், பல்லினத்தவர்களாகவும் இருக்கலாம்.

அத்துடன், நம்மோடு பழகுவோரின் அபிப்பிராயங்களையும் அவர்கள் தொழில்புரியும் இடங்களில் வகிக்கும் உத்தியோகங்களையும் ஆராய்ந்து அவற்றுக்கென வழங்கவேண்டிய சமூகப் பெறுமானத்தையும் மதிப்பையும் வழங்க வேண்டும். வீட்டிலோ, கிராமத்திலோ, நகரத்திலோ ஒருவருக்கொருவர் பழகும்போது தமக்கிடையில் அன்னியோன்யமாவது இயல்பாகும். அதுபோல், கிராமத்தில் நகரத்தில் பல்வேறு சமூக அமைப்புகளில் இணைந்து செயற்படுவோரையும் காணுகிறோம். உதாரணமாக, சில குடும்பங்களில் தாயும் தந்தையும் மகளிர் சங்கம், விளையாட்டு சங்கம் போன்றவற்றில் உறுப்பினர்களாகவும் உயர் பதவி வகிப்போராகவும் திகழ்வதைக் காணலாம். அவர்களை முன்மாதிரிகளாகக் காணும் பிள்ளைகள் இளவயதிலேயே வாலிபர் சங்கம் சிறுவர் மன்றம் போன்றவற்றில் தலைமைத்துவத்தைப் பெற்று செயற்படுவார்கள். இத்தகைய பிள்ளைகள் எதிர்காலத்தில் சமூகத்துக்கு முன்னால், பயமோ, வெட்கமோ இன்றி செயலாற்ற முடியும்.

இவ்வாறான சமூக சேவைகளில் ஈடுபடாவிட்டால் நம்மால் நெருங்கிய ஒத்துழைப்புகளையோ, புரிந்துணர்வுகளையோ பெற்றுக்கொள்ள முடியாது.

அத்துடன், பலரும் இணைந்தே சமூகத்தில் பல்வேறு சேவைகள் வழங்கப்படுவதால் சமூகம் என்பது எமக்கு மிகவும் அவசியமாகிறது. எனினும், சமூக விடயங்களில் நாம் விழிப்போடும் இருக்க வேண்டும். ஏனெனில், சமூகச் சீரழிவை ஏற்படுத்துவோரும் சமூகத்துக்குள் காணப்படலாம்.

பொது இடங்கள் கலாசாரங்களை நாசமாக்கி சமூகத்தைச் சீரழிப்போரும் அச் செயற்பாட்டுக்கு ஒத்தாசை புரிவோரும் உள்ளனர். அதனால், முழு சமுதாயமும் அழிவடையலாம். இவ்வாறான விரோதிகளை நாம் உஷாராக இருப்பதன்மூலம் இனம் கண்டுகொள்வதுடன். அதற்கேற்ப எதிர் நடவடிக்கைகளையும் மேற்கொள்ளலாம்.

குறிப்பாக இணைந்து செயலாற்றுவதன் மூலமே எந்த சவாலுக்கும் முகம் கொடுத்து வெற்றிபெறலாம். இதன்மூலம் சமூகத்தையும் அதன் கட்டுக் . கோப்பையும் இதன் பெறுமானத்தையும் கலாசாரத்தையும் உரிய முறையில் பாதுகாக்காத்துக்கொள்ள முடியும்.

**ஏ.ஜே.எம்.நிழாம்**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




தலைநகரின் ஒரு பகுதி

ஜனாதிபதி

# சீஷெல்ஸ்

**அரசு:** ஒரு சட்ட சபையைக்கொண்ட பல கட்சிக் குடியரசு.
**சுதந்திரம்:** பிரித்தானியாவிடமிருந்து, 29 ஜூன் 1976.
**தேசிய பெயர்:** ரிபப்ளிக் டெஸ் சீஷெல்ஸ் (Republic of Seychelles-சீஷெல்ஸ் குடியரசு).
**ஜனாதிபதி** (2004): ஜேம்ஸ் மைக்கல்.

## புவியியல்

'சுற்றுலாப் பயணிகளின் சொர்க்கம்' என வர்ணிக்கப்படும் சீஷெல்ஸ் நாடானது, ஏறக்குறைய 100 தீவுகளாகச் சிதறிக் கிடக்கும் ஒரு தீவுத்தொகுதியாகும். இந்து சமுத்திரத்தின் மேற்குப் பகுதியில் மடகஸ்கார் தீவுக்கு வடகிழக்கே இந்நாடு அமைந்துள்ளது. முக்கிய தீவான மாஹே 142 ச.கி.மீற்றர் பரப்பளவினைக் கொண்டது. மற்றொரு முக்கிய தீவான ப்ரஸ்லின் 38 ச.கி.மீற்றர் பரப்பளவைக் கொண்டது.

**மொத்தப் பரப்பு:** 176 ச.மைல் (456 ச.கி.மீற்றர்);
**நிலப்பரப்பு:** 270 ச.கி.மீ (104 ச.மைல்).
**நிலப்பிரிவுகள்:** 23 நிர்வாக மாவட்டங்கள்.





தேசிய இலச்சினை



விக்டோரியா துறைமுகம்

**தலைநகரமும் பெரிய நகரமும்:** விக்டோரியா.
**உயர் மலைச்சிகரம்:** மோர்னி சீஷெலோய்ஸ் (905 மீற்றர்);
**தாழ் மையம்:** இந்து சமுத்திரம்.
**மக்கள் தொகை:** 88,340. **நாணயம்:** சீஷெல்ஸ் ரூபாய்.
**மொழிகள்:** செசெல்வா கிரியோல் 92%, ஆங்கிலம் 5%, பிரெஞ்ச் (அனைத்தும் உத்தியோகபூர்வ மொழிகள்).
**இனக்குழுவினர்கள்:** பிரெஞ்ச் கலப்பின மக்கள், ஆபிரிக்கர், இந்தியர், சீனர் மற்றும் அரேபியர்.
**சமயங்கள்:** ரோமன் கத்தோலிக்கம் 83%, அங்லிக்கன் 6%, ஏழாம் நாள் அட்வென்டிஸ்ட் 1%, ஏனைய கிறிஸ்தவம் 3%, இந்து 2%, இஸ்லாம் 1%, மதமற்றோர் 1%.
**எழுத்தறிவு** (2002): 91.8%. **இணையத்தளக் குறியீடு:** .sc
**தொலைபேசிக் குறியீட்டு இலக்கம்:** 248.
**தேசிய கீதம்**

Sesel ou menm nou sel patri.
Kot nou viv dan larmoni.
Lazwa, lanmour ek lape.
Nou remersye Bondye....என ஆரம்பமாகின்றது.

## வரலாறு

1609 இல் பிரித்தானிய கிழக்கிந்திய வர்த்தகசங்கம் இத்தீவுத் தொகுதிக்கு வருகை தரும் வரை இங்கு ஒரு முறையான குடியேற்றம் எதுவும் அமைக்கப்பட்டிருக்கவில்லை. மாறாக, இத்தீவுகள் கடற்கொள்ளையர்களின் சொர்க்கமாக அவர்களின் கட்டுப்பாட்டின்கீழ் இருந்தது. 1756 இல் பிரான்ஸினால் உரிமை கோரப்பட்ட இத்தீவுகள், மொரீஷியஸின் ஒரு பகுதியாக நிர்வகிக்கப்பட்டது. 1814 இல் மீண்டும் பிரித்தானியர் வசமாகியது. 1976 ஆம் ஆண்டு ஜூன் 29 ஆம் திகதி சுதந்திரமடைந்தது. முதலாவது அதிபராக ஜேம்ஸ் மென்கம் தெரிவு செய்யப்பட்டார். ஆனால், 1977 இல் இவர் அப்போதைய பிரதமர் பிரான்ஸ் அல்பர்ட் ரெனேயால் பதவி கவிழ்க்கப்பட்டார். தொடர்ந்து 1977 இல் பதவியேற்ற பிரான்ஸ் அல்பர்ட் ரெனே 2004 ஆம் ஆண்டில் தனது 27 வருடகால ஆட்சியின் பின் பதவி துறந்தார். 1977 முதல் தொடர்ந்து 27 வருட காலங்கள் உப ஜனாதிபதியாக இருந்த ஜேம்ஸ் மைக்கல், அல்பர்ட் ரெனே பதவி துறந்தபின் ஜனாதிபதியாகப் பதவி ஏற்றார். 2006 ஜூலை மாதம் நடைபெற்ற ஜனாதிபதித் தேர்தலில் ஜேம்ஸ் 53.7% வாக்குகள் பெற்று வெற்றியடைந்து மீண்டும் ஜனாதிபதியாகத் தெரிவு செய்யப்பட்டார்.




என்சி சோர்ஸ் டி ஆர்ஜன்ட் கடற்கரை




## காலநிலை

பூமத்திய ரேகைக்கு மிக அண்மையில் சற்று தெற்கே அமைந்துள்ள சீஷெல்ஸ் தீவுத்தொகுதி வெப்பமும் ஈரலிப்பும் நிறைந்த காலநிலையை வருடம் முழுவதும் கொண்டுள்ளது. உயர் வெப்பநிலையாக 78-83 பாகை காணப்படும். தென்கீழ் பருவக்காற்று காலமாகிய மே இறுதி முதல் செப்டெம்பர் வரை வெப்பம் குறைந்து லேசான குளிர்ச்சி ஏற்படும். வடமேற்குப் பருவக்காற்றுக் காலமாகிய மார்ச் முதல் மே வரை சற்று வெப்பநிலை நிலவும்.




## கலாசாரம்

சீஷெல்ஸ் மக்களின் கலாசாரத்தில் ஒவ்வொரு குடும்பத்திலும் தாய்மார்களின் பங்களிப்பும் செல்வாக்கும் அதிகமாகும். குறிப்பாக, வீட்டு பராமரிப்பிலும் பிள்ளைகளின் பராமரிப்பிலும் அவர்களின் ஈடுபாடு அதிகமாகும். குடும்பப் பொருளாதாரம் பெருமளவில் ஆண்களின் கைகளிலேயே தங்கியுள்ளது. ஏனைய குடும்ப விடயங்களில் ஆண்களின் பங்களிப்புப் மிகக்குறைவு.

## தொடர்பாடல்

**தொலைபேசிகள்** (2006): பிரதான தொலைபேசிப் பாவனையாளர்கள்: 20,700; செல்லிடத் தொலைபேசிகள்: 70,300, **வானொலி ஒலிபரப்பு நிலையங்கள்** (2001): AM 1, FM 1, SW 2. **தொலைக்காட்சி ஒளிபரப்பு நிலையங்கள்** (1997): 2. **இணையத்தள வழங்குனர்கள்:** 187; இணையத்தளப் பாவனையாளர்கள்: 29,000.

## போக்குவரத்து


**பெருந்தெருக்கள்** (2003): மொத்தம் 458 கி.மீற்றர் (இதில் செப்பனிடப்பட்டவை 440 கி.மீ; செப்பனிடப்படாதவை 18 கி.மீற்றர்).
**துறையும் துறைமுகமும்:** விக்டோரியா.
**விமான நிலையங்கள்** (2007): 15.

## பொருளாதாரம்

**விவசாயம்** (பயிர்ச்செய்கை நிலம் 2%) **மற்றும் விலங்கு வேளாண்மை:** தென்னை, கறுவா, வெனிலா, வற்றாளை, மரவள்ளி, வாழை, கோழிப்பண்ணைகள். **பிரதான கைத்தொழில்கள்:** மீன்பிடித் தொழில், உல்லாசப் பயணத்துறை, தெங்கு மற்றும் வெனிலா உற்பத்திப் பொருட்கள், படகு கட்டும் தொழில். **இயற்கை வளங்கள்:** மீன், கொப்பரா, கறுவா, மரங்கள். **ஏற்றுமதிகள்** (2009): விலைமதிப்புள்ள பிரம்பு வகைகள், குளிரூட்டப்பட்ட மீன், கறுவா, கொப்பரா, பெற்றோலிய உற்பத்திகள். **இறக்குமதிகள்** (2009): இயந்திரங்களும் இயந்திர உதிரிப்பாகங்களும், உணவுப்பொருட்கள், பெற்றோலிய உற்பத்திகள், ரசாயனப் பொருட்கள். **முக்கிய வர்த்தகப் பங்காளிகள்** (2004): ஐக்கிய ராச்சியம், பிரான்ஸ், ஸ்பெய்ன், ஜப்பான், இத்தாலி, ஜேர்மனி, சவூதி அரேபியா, சிங்கப்பூர், தென் ஆபிரிக்கா.

## பிரசித்தி பெற்ற இடங்கள் சில....

❋ விக்டோரியா மணிக்கூட்டுக் கோபுரம் ❋ இயற்கை வரலாற்று நூதனசாலை ❋ என்சி சோர்ஸ் டி ஆர்ஜன்ட் கடற்கரை ❋ மோர்ன் சீஷெலோய்ஸ் தேசிய பூங்கா ❋ வலீ டி மாய் உலக மரபுரிமைத்தலம் ❋ ப்ரஸ்லின் சமுத்திரப் பண்ணை ❋ மெரைன் தேசிய பூங்கா ❋ பறவைகள் தீவு.





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 'மொண்ட்கொமரி' பஸ் ஒத்துழையாமை இயக்கமும் மாட்டின் லூதர் கிங்கும்



'அமெரிக்காவே நீ வழிதவறிவிட்டாய்! உன்னுடைய இரண்டுகோடி கறுப்புச் சகோதரர்களை வழிதெரியாமல் தடுமாறச் செய்துவிட்டாய். ஆனால், ஒன்றை மட்டும் நினைவில் வைத்துக்கொள். உலகில் அனைத்து மனிதர்களும் ஆண்டவனால் சமமாகத்தான் படைக்கப்பட்டிருக்கின்றார்கள். இதை நீ உணர்ந்து கொண்டால் வழிதவற வேண்டிய அவசியமில்லை'




நீக்ரோக்களின் முடிசூடா மன்னனாக விளங்கிய மாட்டின் லூதர் கிங் அவர்களின் சொற்பொழிவுகளில் அடிக்கடி இடம்பெறும் வாக்கியங்கள் இவை.

1929 ஆம் ஆண்டு அமெரிக்காவின் ஜோர்ஜியா மாநிலத்திலுள்ள அட்லாண்டா நகரில் ஒரு பாதிரியாருக்கும் பள்ளி ஆசிரியைக்கும் மகனாகப் பிறந்தவர் மாட்டின் லூதர் கிங். தம் இளவயதில் நீக்ரோ சிறுவர்கள் சேர்ந்து விளையாடிக் கொண்டிருந்த பொழுது, அவர்களுடன் சேர்ந்து விளையாட வந்த ஒரு வெள்ளை இனச் சிறுவனை அவனது தாய், 'கருப்பர்களுடன் நீ விளையாடக்கூடாது' என்று கூறி அழைத்துச் சென்ற நிகழ்ச்சியானது, இனவெறிக்கொடுமை பற்றி கிங்கிற்கு இளவயதிலேயே தெரிந்துகொள்ளும் சந்தர்ப்பத்தை ஏற்படுத்தியது.

ஆறே வயதான கிங், இச்சம்பவம் பற்றித் தன் தந்தையான பாதிரியாரிடம் முறையிட்டபோது, இனவெறிக் கொடுமை பற்றி அவர் மேலும் விளக்கம் அளித்தார். கிறிஸ்தவ மதத்தில் மாபெரும் புரட்சியை ஏற்படுத்திய மாட்டின் லூதர் என்பவரைப் போல் நீ பெரியவனானதும் சமுதாயத்தில் ஒரு புரட்சியை, ஒரு மாற்றத்தை ஏற்படுத்த வேண்டுமென்று அவர் கேட்டுக்கொண்டார். அன்றே மைக்கல் லூதர் கிங் என்ற தனது பெயரை அவர் மாட்டின் லூதர் கிங் என்று மாற்றி வைத்துக்கொண்டார்.

தன்னைப் போலவே, தனது மகனும் ஒரு பாதிரியாராக வரவேண்டுமென்று கிங்கின் தந்தை விரும்பினாலும் கிங் அதனை விரும்பவில்லை. இதனால், கிங் மூர்ஹவுஸ் கல்லூரியில் தனது ஆரம்பக் கல்வியைத் தொடர்ந்து கற்றபின், பொஸ்டன் சர்வகலாசாலையில் படித்துத்தேறி, 'டாக்டர்' பட்டத்தைப் பெற்றுக்கொண்டார். கிங் கல்லூரியில் கற்கும்போதே, காரெஸ்காட் மேரியன் என்ற நீக்ரோப் பெண்ணை மணந்து கொண்டார்.



1955 ஆம் அண்டின் இறுதிப் பகுதியில் நடைபெற்ற மற்றொரு சம்பவம் அவரின் வாழ்க்கைப் போக்கையே மாற்றியமைக்கக் காரணமாக இருந்தது. ஒரு நீக்ரோ பெண் பஸ்ஸில் உட்கார்ந்து பயணம் செய்து கொண்டிருந்தபோது, ஒரு வெள்ளையின அமெரிக்கரும் அதே பஸ்ஸில் நின்று கொண்டு பயணம் செய்து கொண்டிருந்தார். இதைக்கண்ட சாரதி நின்றுகொண்டு பயணம் செய்யும் அந்த வெள்ளையின அமெரிக்கருக்கு உட்கார்ந்து பயணம் செய்ய இடமளிக்குமாறு நீக்ரோப் பெண்ணைக் கட்டாயப்படுத்தினார். இதற்கு அந்தப் பெண் இணங்க மறுக்கவே, அந்தப் பெண்ணை பஸ்ஸிலிருந்தே இறக்கிவிட்டனர்.



இந்தச் சம்பவமே கிங்கின் மனதை வெதும்பச் செய்தது. அன்றுதான் 'மொண்டகொமரி பஸ்' ஒத்துழையாமை இயக்கம் ஏற்பட்டது. நகரில் வாழும் சுமார் 50,000 நீக்ரோ இன மக்கள், வெள்ளையர்கள் ஓட்டும் பஸ்களில் பயணம் செய்வதை நிறுத்தினர். இவ்வொத்துழையாமை 381 நாட்கள் தொடர்ந்து நிகழ்ந்தது. இதுவே, உலகப் புகழ்பெற்ற 'மொண்டகொமரி பஸ் ஒத்துழையாமை' இயக்கமாகும்.




கிங்கின் செல்வாக்கை உயர்த்தி நாளடைவில் அப்போதிருந்த சுமார் இரண்டு கோடி நீக்ரோக்களின் தலைவராக அவரை ஆக்கக் காரணமாக இருந்ததும் இந்நிகழ்ச்சிதான். கிங் எதையும் தாங்கும் இதயம் கொண்டவர், தான்கொண்ட கொள்கையில் தளரா உறுதி கொண்டிருந்தார். பலாத்கார முறைகளை அடியோடு வெறுத்து, அஹிம்சை முறைகளைப் பின்பற்றினார். தனது இனமக்களின் உரிமைக்காகவும் சுதந்திரத்திற்காகவும் போராடி அவற்றில் அதிக வெற்றிகளைக் கண்டார். தம் இனத்தவர்களும் மற்றவர்களைப் போலவே சுதந்திரமாக உலகில் நடமாடப் பாடுபட்டார்.

கிங் எதையும் தாங்கும் இதயம் கொண்டவர். தான்கொண்ட கொள்கையில் தளரா உறுதி கொண்டிருந்தார். பலாத்கார முறைகளை அடியோடு வெறுத்து, அஹிம்சை முறைகளைப் பின்பற்றினார். தனது இனமக்களின் உரிமைக்காகவும் சுதந்திரத்திற்காகவும் போராடி அவற்றில் அதிக வெற்றிகளைக் கண்டார். தம் இனத்தவர்களும் மற்றவர்களைப் போலவே சுதந்திரமாக உலகில் நடமாடப் பாடுபட்டார்

கிங் சொற்பொழிவாற்றுவதில் மிகவும் வல்லவர். கேட்பவர்களின் இதயங்களைத் தன்னகத்தே ஈர்த்துக்கொள்ளும் தன்மை அவரது சொற்பொழிவுக்குண்டு. 1958 ஆம் ஆண்டில் மொண்ட்கொமரி நகரில் சொற்பொழிவாற்றிவிட்டு, தனது அபிமானிகளின் 'ஆட்டோகிராப்'களில் கையெழுத்திட்டுக்கொண்டிருந்தபோது, எங்கிருந்தோ வந்த கத்தியொன்று அவரது நெஞ்சைத் தாக்கியது. பின்னரே அது ஒரு சித்தப்பிரமை பிடித்த பெண்ணால் வீசப்பட்ட கத்தியென்று தெரியவந்தது. இதனால் அவர் படுகாயம் அடைய நேர்ந்தது.

செம்மைத்துளியான்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வினாத்தாள் - II (கடந்த வாரத் தொடர்ச்சி)

பெயர்: ................................................ நேரம்: 1மணி 15 நிமிடங்கள்

33. துவிச்சக்கர வண்டிக்கு அனுமதிப் பத்திரம் பெறுவதற்குச் செல்ல வேண்டிய இடம் எது?
    (i) பொலிஸ் நிலையம் (ii) பிரதேசசபை
    (iii) சுங்கத் திணைக்களம் (iv) சமுர்த்தி அலுவலகம்

34. நுகர்வுக்கான வர்த்தகப் பொருட்களின் தரத்தினை உறுதிப்படுத்தும் இலங்கையின் இலச்சினை எது?
    (i) SOS (ii) ISO (iii) SLS (iv) ISBN

35. பித்தளைப் பாத்திரங்களை துப்புரவாக்கி மினுக்குவதற்குப் பயன்படுத்தும் பொருள் எது?
    (i) தேங்காய்ப்பூ (ii) சுட்ட உமி (iii) பழப்புளி (iv) விம்

36. மயக்கமடைந்த ஒருவருக்கு உடனடியாகச் செய்யக்கூடியது;
    (i) நோயாளிக்கு நீர் பருக்குவதற்கு முயற்சித்தல்.
    (ii) நோயாளிக்கு நன்கு சுவாசிக்கக்கூடிய சூழ்நிலையை உருவாக்குதல்.
    (iii) கை மருந்து போடுதல்.
    (iv) நோயாளியைச் சுற்றி மாணவர்கள் கூட்டமாக நிற்றல்.

37. வட்டத்தினுள்ளே காணப்படும் இலக்கங்களை மட்டும் பயன்படுத்தி விடை தருக.




(i) ஆக்கக்கூடிய மிகப் பெரிய எண்குறி யாது? ................................


(ii) ஆக்கக்கூடிய மிகச் சிறிய எண்குறி யாது? ................................


38. எண் 9435 இல்......
    (i) இலக்கம் 4 குறிக்கும் இடப் பெறுமானம் யாது?................................
    (ii) இலக்கம் 9 குறிக்கும் இடப் பெறுமானம் யாது?................................

39. 2639 உடன் 709 ஐக் கூட்டுக. கூட்டுத்தொகை யாது?................................

40. 9006 இலிருந்து 450 ஐக் கழிக்க. வரும் வித்தியாசம் யாது?................................

41. 
நிறம் தீட்டாத பகுதியை பின்னமாக எழுதுக.
................................


42. 
இவ்வுரு ஒரு சமபக்க முக்கோணி ஆகும்.
இதன் சமச்சீர்க் கோடுகளை வரைக.


43. 


பென்சிலின் நீளம் யாது?................................

44. ஒரு பிள்ளைக்கு 4 புத்தகங்கள் வீதம் 206 பிள்ளைகளுக்குக் கொடுப்பதற்குத் தேவையான புத்தகங்களின் எண்ணிக்கையைக் காண்க.

45. 612 தோடம்பழங்கள் மூன்று பெட்டிகளில் சமனாக அடுக்கப்பட்டன. ஒரு பெட்டியில் உள்ள தோடம்பழங்களின் எண்ணிக்கை யாது?................................

46. 
இவ்வுரு ஒரு சதுரமுகி. அதன்;
    (i) உச்சிகளின் எண்ணிக்கை யாது?................................
    (ii) விளிம்புகளின் எண்ணிக்கை யாது?................................

47. 
இவ்வுருவின் பரப்பளவு எத்தனை கட்டங்கள்?
................................

✱ வெற்றிடங்களில் வரவேண்டிய பெறுமதிகளை எழுதி அட்டவணையைப் பூர்த்தி செய்க.

| | பொருட்கள் | பொருட்களின் விலை | கொடுத்த பணம் | மீதிப் பணம் |
|---|---|---|---|---|
| | பேனா | ரூபாய் 14.50 | ரூபாய் 20.00 | ரூபாய் 5.50 |
| 48. | பென்சில் | ரூபாய் 5.50 | ரூபாய் 10.00 | ரூபாய்........ |
| 49. | அடிமட்டம் | ரூபாய் 35.00 | ரூபாய்........... | ரூபாய் 5.00 |
| 50. | பயிற்சிப் புத்தகம் | ரூபாய்................ | ரூபாய் 50.00 | ரூபாய் 15.00 |




✱ பின்வரும் படத்தை அவதானித்து நிகழ்வை ஆறு வாக்கியங்களில் நிகழ்காலத்தில் எழுதுக. ஒவ்வொரு வாக்கியத்திலும் குறைந்த பட்சம் ஐந்து சொற்களேனும் இடம்பெற வேண்டும். அவ்வாக்கியங்களில் எழுவாய், பயனிலைத் தொடர்புகள் சரியாக இருக்க வேண்டும்.



1. ................................................................
................................................................
2. ................................................................
................................................................
3. ................................................................
................................................................
4. ................................................................
................................................................
5. ................................................................
................................................................
6. ................................................................
................................................................


## வினாத்தாள் - II இன் விடைகள்

*(ஜனவரி 19, 26 ஆம் திகதிகளில் பிரசுரமானவை)*

01. (i) மழைக்காட்சி (ii) வானம்
    (iii) "ஓ ஓ" என்ற சத்தத்துடன் (iv) மரங்கள் அசைந்து ஆடின.
    (v) வீடு+ கூரை (vi) கூரைத்தகடுகள் காற்றில் பறக்கின்றன.
02. (i) பரிசோதனை (ii) சீருடைத் துணிகள்
03. (i) பெரியவரே! உங்களுக்கு என்ன வேண்டும்?
    (ii) கடற்கரையில் சிறிய கற்கள், ஊரிகள், சிப்பிகள் ஆகியவற்றைச் சேகரித்தேன்.
04. (i) மயில் (ii) ஆடியது (iii) நீல (iv) அழகிய
05. தொலைக்காட்சியில் நமக்குப் பயனுள்ள நிகழ்ச்சிகளை மட்டுமே பார்க்க வேண்டும்.
06. (i) இளமைக் காலமே கல்வி கற்க சிறந்தது.
    (ii) ஒருவரது உள்ளத்தின் சிந்தனை முகத்தில் தென்படும்.
07. (i) Black board (ii) Classroom (iii) Post Office
08. (i) புத்தாண்டு வாழ்த்துக்கள்.
    (ii) தயவு செய்து அமைதியாக இரு. (iii) நான் புத்தகம் வாசிக்கிறேன்.
09. (i) எனக்குத் தண்ணீர் கொஞ்சம் தாருங்கள்.
    (ii) புகையிரத நிலையத்திற்குப் போவது எப்படி?

| | | | | |
|---|---|---|---|---|
| 10. (ii) | 11. (iii) | 12. (iii) | 13. (i) | 14. (iv) |
| 15. (iv) | 16. (ii) | 17. (iii) | 18. (ii) | 19. (ii) |
| 20. (i) | 21. (iii) | 22. (iii) | 23. (iv) | 24. (iii) |
| 25. (iii) | 26. (ii) | 27. (iv) | 28. (iii) | 29. (iv) |
| 30. (i) | 31. (iii) | 32. (iii) | 33. (ii) | 34. (iii) |
| 35. (iii) | 36. (ii) | 37. (i) 8720 | (ii) 2078 | |

38. (i) நூறுகள் (ii) 9000 39. (i) 3348 40. (i) 8556 41. 6/8

42. 
43. 5 cm 44. 824 45. 204
46. (i) 8 (ii) 12 47. 9 கட்டங்கள் 48. 4.50
49. 40.00
50. 35.00

✱ எழுவாய், பயனிலையுடன் பொருத்தமான ஆறு வாக்கியங்கள்.

✱ ஒவ்வொரு வாக்கியமும் ஐந்து சொற்களுக்குக் குறையாமல் இருத்தல் வேண்டும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


# ஆரோக்கியமாக வாழ

# சரியான முறைகளைப் பின்பற்றுங்கள்

நாம் அன்றாடம் நடத்தல், உட்காருதல், நித்திரை செய்தல் போன்ற பல்வேறு செயற்பாடுகளில் ஈடுபடுகின்றோம். இவை குறித்து நாம் அதிக அக்கறை காட்டுவதில்லை. ஆனால், இந்த அனைத்து செயற்பாடுகளின் போதும் உடலினை சரியான முறையில் செயற்படுத்த வேண்டும் எனக் கூறப்படுகின்றது. ஏனெனில், எமது உடல் ஓர் அமைப்பின் அடிப்படையில் உருவாக்கப்பட்டுள்ளதால் தவறான நடைமுறைகளைத் தொடர்ந்து கடைப்பிடிப்பதன் ஊடாக, உடலின் அமைப்பு முறை மாறிப் பல பிரச்சினைகள் உருவாகக்கூடும். அது உடல் ஆரோக்கியத்தையும் பாதிக்கலாம்



## சரியான முறையில் நிற்றல்



சரியாக நிற்கும்போது எப்பொழுதும் உடலை சமநிலையில் வைத்துக்கொள்ள வேண்டும். உடல் நிறை இரண்டு பாதங்களாலும் சமமாகத் தாங்கி நிற்குமாறு இருக்க வேண்டும். ஒருபுறத்திற்கு மாத்திரம் உடல்நிறையை சுமத்தியவாறு நிற்பதனால் முழங்கால் மூட்டு பாதிப்படையக்கூடும்.

## முறையான நடை

நடக்கும்போது, சரியான முறையினைக் கடைப்பிடித்தல் வேண்டும். நடத்தல் உடல் சமநிலையுடன் தொடர்பானதாகும். நடக்கும்போது, உடலை நேராக வைத்துக்கொள்ள வேண்டும். ஒரு பொருளைச் சுமந்துகொண்டு நடக்கும்போது, அந்தப் பொருளின் நிறை இரு கைகளுக்கும் சமமாகப் பகிர்ந்து செல்லக்கூடியவாறு இருத்தல் வேண்டும். ஒரு கையில் மட்டும் நிறையைத் தூக்கிச்செல்வது சரீரத்தின் சமநிலையில் பாதிப்பை ஏற்படுத்தும்.

## உடலின் நெகிழ்வுத் தன்மை

சரியான உடற் செயற்பாட்டிற்கு உடல் நெகிழ்வுத் தன்மை கொண்டதாக இருக்க வேண்டும். இதற்கு உடற்பயிற்சிகளில் ஈடுபடுவது அவசியமாகும். உடல் நெகிழ்வுத் தன்மையைக் கொண்டிருப்பின் உடலானது சுறுசுறுப்பாகவும் ஆரோக்கியமாகவும் இருக்கும். எனவே, நாளாந்தம் அரை மணித்தியாலமேனும் உடல் களைப்படையும் வரை விளையாட்டுகளில் அல்லது உடற்பயிற்சிகளில் ஈடுபடுவது மிக அவசியமானதாகும்.

## சரியான முறையில் பாரம் தூக்குதல்

நிறையைத் தூக்கும்போது, உடலை முன்னால் வளைத்துத் தூக்குவது தவறானதாகும். தூக்கும் பொருள் எப்பொழுதும் உடலை அண்மித்ததாக இருக்க வேண்டும். எனவே, முழங்கால் மற்றும் தொடைப்பகுதி மடியும்படி குனிந்து இரு கைகளாலும் நிறையைத் தூக்குவதே சரியான முறையாகும்.



அவ்வாறே, உயரமான இடத்தில் இருக்கும் பொருளைத் தூக்கும்போது, அதனை விரல் நுனிகளால் தூக்கக்கூடாது. உயரத்திற்கு ஏற்றவாறு சமமாக நின்றவாறே அப்பொருளைத் தூக்க வேண்டும்.

## சரியான முறையில் நித்திரை செய்தல்

மெத்தையில் தூங்குவதையே அனைவரும் விரும்புவர். எனினும், இதனால் சிலருக்கு முதுகுவலி,



கழுத்துவலி என்பன ஏற்படக்கூடும். எனவே, சமமான-சற்றுக் கடினமான மெத்தையில் நித்திரை செய்வது ஆரோக்கியமான, சுகமான நித்திரைக்கு வழிவகுக்கும். நித்திரை செய்யும் கட்டில் அதிக உயரமாக இருக்கக்கூடாது. இலகுவாக ஏறி இறங்கக்கூடியதாக அது அமைய வேண்டும். தனியொருவர் நித்திரை செய்யக்கூடிய கட்டில் 6 அடி நீளமும் $3^{1/2}$ அடி அகலத்தையும் கொண்டிருக்க வேண்டும். தமது உயரத்திற்கு ஏற்றதாக நீளமான கட்டில் இல்லாவிடின், உடல் உபாதைகள் ஏற்படக்கூடும். அத்துடன், இருபுறங்களிலும் அதிக பஞ்சும் நடுவில் குறைவான பஞ்சும் கொண்ட தலையணையைப் பயன்படுத்துவது சிறந்தது.

பல தலையணைகளை அடுக்கி வைத்துப் படுப்பதும் கழுத்தில் உபாதைகளைத் தோற்றுவிக்கும். அவ்வாறே, நீண்ட நேரம் ஒரே பக்கம் திரும்பி நித்திரை செய்வதும் சுளுக்கினை ஏற்படுத்தும். கழுத்தில் உள்ள Sternomastoid மற்றும் Trapezius ஆகிய தசைநார்கள் இழுபடுவதன் காரணமாகவே சுளுக்கு ஏற்படுகின்றது. இதன்போது, இந்த தசை நார்கள் நீண்ட நேரம் அழுத்தப்படுவதனால் கழுத்தில் உபாதைகள் தோன்றுகின்றன.

கழுத்தில் சுளுக்குப் பிடிப்பு ஏற்பட்டவுடன் சிலர் மிக வேகமாகக் கழுத்தினை இரு மருங்கிலும் அசைக்க முற்படுவர். இதனால், வலி அதிகரிக்கக்கூடும். இதன்போது பிடிப்பு ஏற்பட்ட தசைநாரில் அழுத்தத்தைக் குறைப்பதற்கான வழிமுறைகளைப் பின்பற்றுதல் இதற்குச் சிறந்த நிவாரணமாகும். அதாவது, தலையின் சுமை கழுத்து தசைநார்களுக்கு அழுத்தத்தைக் கொடுக்காதவாறு தலையணை மீது தலையை வைத்துக் கொள்ள வேண்டும். சுளுக்கு ஏற்பட்ட முதல் இரண்டு தினங்களுக்கும் கழுத்தில் ஐஸ் கட்டிகளால் ஒத்தடம் கொடுப்பது சிறந்தது. மூன்று நாட்களுக்கு மேல் சுளுக்கு இருப்பின் மருத்துவரை நாடவும்.

## புத்தகப் பையை சுமந்து செல்லல்


புத்தகப் பையை ஒரு பக்கத் தோளில் மட்டும் காவிச் செல்வது நன்றன்று. இவ்வாறு நீண்ட காலத்திற்கு தொடர்ச்சியாக செய்வதனால் முதுகுப் பகுதியில் உபாதைகள் ஏற்படக்கூடும். தற்போது 'ஸ்கோலியோசிஸ்' எனும் உபாதை பாடசாலை செல்லும் பிள்ளைகள் மத்தியில் அதிகளவில் காணப்படுகின்றது. முள்ளந்தண்டு ஒருபுறம் வளைந்து செல்வதே இந்த நோயின் பிரதான அறிகுறியாகும். எடைகூடிய புத்தகப் பையினை ஒருபுறத் தோளில் மட்டும் சுமந்து செல்வதே இந்நோய் ஏற்படுவதற்கான காரணமாகும். ஆகவே, சமமான அளவில் இரு தோள்களுக்கும் நிறை பகிரப்படும் முறையிலேயே புத்தகப் பை சுமக்கப்படல் வேண்டும் என்று மருத்துவர்கள் தெரிவிக்கின்றனர்.

## சரியான முறையில் நாற்காலியில் அமர்தல்

சரியான முறையில் அமர்வதற்கு நாற்காலி சரியான உயரத்தில் இருக்க வேண்டும். அமர்ந்தவுடன் முழங்கால்கள் சமமாக மடிக்கப்பட்டு பாதங்கள் சரியான அளவில் தரையில் படுதல் வேண்டும். அமரும்போது முதுகு, இடுப்பு பகுதிகள் நேராக சமநிலையில் இருக்க வேண்டும் (இங்கு பின்புறத்தின் 2/3 பகுதி நாற்காலியில் இருத்தல் வேண்டும்). நாற்காலியிலிருந்து எழும்பும்போது, நாற்காலியின் முனைக்குச் சென்று முதுகுப் பகுதியினை நேராக வைத்துக்கொண்டு எழும்ப வேண்டும்.

## நாற்காலியில் அமர்ந்து கற்றலில் ஈடுபடல்

நாற்காலியில் தமக்கு ஏற்றவிதத்தில் அமர்ந்திருந்து கற்றல் நடவடிக்கைகளில் ஈடுபடுவது பிள்ளைகளின் பழக்கமாக இருக்கின்றது. எனினும், படிக்கும்போது நாற்காலியில் சரியான முறையில் அமர்ந்துதான் பாடங்களைப் படிக்க வேண்டும்.



புத்தகங்களை வாசிக்கும்போதும் எழுதும்போதும் தலையைக் குனிந்து கொண்டிருக்கக்கூடாது. மாறாக, புத்தகத்தினை மேசையின்மீது வைத்துக்கொண்டு கண் மட்டத்திற்கு ஏற்ப வாசிப்பதே சரியான முறையாகும். படுத்துக்கொண்டோ, சாய்வு நாற்காலியில் அமர்ந்துகொண்டோ படிப்பது தவறான செயலாகும். முதுகினை வளைக்காமல் நேராக அமர்ந்துகொள்வதற்கு ஏற்றவாறு மேசையும் நாற்காலியும் அமைய வேண்டும்.


-(இ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


லியனாடோ டா வின்சி


மார்கஸ் சிசரோ


பொகாஷியோ


டேவிட் சிலை


ஜோன் மில்டன்


நிகலஸ் கொபர்னிகஸ்


திமித்ரியஸ்


ஃப்ரென்சிஸ் பேகன்


மைக்கல் எஞ்ஜலோ


மொன்டேன்

# மத்திய காலத்தின்

மத்திய காலப்பகுதியின் இறுதியும் நவீன காலப்பகுதியின் ஆரம்பம் குறித்தும் இதுவரை உறுதியான கணிப்புகள் இல்லை. பெரும்பாலான வரலாற்று அறிஞர்கள் இந்த இரண்டு காலப்பகுதிக்கும் இடையிலான காலகட்டத்தினை 'மறுமலர்ச்சிக் காலம்' என்கின்றனர். எனினும், மத்திய கால, இருண்ட காலப்பகுதியின் பின்னர் ஒரு மலர்ச்சி நிலை ஏற்பட்டது. அதுவே, மறுமலர்ச்சிக் காலமாகும்




ரோம் நகர கட்டடக்கலை

இக்காலப்பகுதிக்கு மறுமலர்ச்சிக் காலம் என்று கூற பல காரணங்கள் உள்ளன. அவற்றில் பிரதானமானவை; கிரேக்க-ரோமானிய காலத்தில் விஞ்ஞான விடயங்கள் குறித்தான ஆர்வமும் கலை-இலக்கியத்துறைகளில் மலர்ச்சி ஏற்பட்டமையும் ஐரோப்பாவின் மறுமலர்ச்சியானது அறிவுத்திறனை அடிப்படையாகக் கொண்டிருந்தமையும் ஆகும். இத்தாலியில் ஆரம்பமான இந்த நிலை, ஐரோப்பா முழுதும் 14 ஆம் நூற்றாண்டு முதல் 16 ஆம் நூற்றாண்டு வரையிலான காலப் பகுதியில் பரவியது. பண்டைய கிரேக்க-ரோமானிய இலக்கியங்கள் பரவலாக வாசித்தறியப்பட்டமையே அக்காலப்பகுதியில் கலைகள் மற்றும் இதர துறைகளில் மறுமலர்ச்சி ஏற்படக் காரணமாக அமைந்தது. மறுமலர்ச்சிக் காலப்பகுதியில் அறிஞர்களும் கலைஞர்களும் தம்மை அறியாமலேயே மனிதர்களின் வாழ்க்கைத் தரத்தினை உயர்த்தக் காரணமாகினர். ஐரோப்பிய மக்கள் தத்தமது வாழ்க்கை குறித்து தர்க்கரீதியாக சிந்தித்து, புதிய முறையில் செயற்படுவதற்கான சந்தர்ப்பமாக இது அமைந்தது.




## மறுமலர்ச்சியின் வளர்ச்சிக்கு ஏதுவான விடயங்கள்

1453 இல் ஒட்டோமன் துருக்கியர்கள் கொன்ஸ்தாந்திநோபல் நகரைக் கைப்பற்றினர். இது பிற்காலத்தில் இடம்பெற்ற பல நிகழ்வுகளுக்கு அடித்தளமாக அமைந்தது. இந்த சம்பவத்தினால் அச்சமடைந்த கொன்ஸ்தாந்திநோபலில் இருந்த கிரேக்க அறிஞர்கள் தம்வசம் இருந்த முக்கிய கிரேக்க-ரோமானிய இலக்கியப் படைப்புகளை எடுத்தபடியே மேற்கு ஐரோப்பிய நாடுகளில் தஞ்மடைந்தனர். இதற்கு இவர்களுக்கு இத்தாலியில் இருந்து பெருமளவு அனுசரணையாளர்களும் கிடைத்தனர். இத்தாலி பிரபுக்களும் செல்வந்தர்களும் நீண்ட காலமாக ஐரோப்பாவின் இதர நாடுகளுடன் மேற்கொண்டு வந்த வெற்றிகரமான வர்த்தக செயற்பாடுகளினால் பெற்ற இலாபத்தின் காரணமாகக் கிடைத்த பணம் இதில் பெருமளவில் செல்வாக்குச் செலுத்தியது.

அத்துடன், கிறிஸ்தவ தேவாலயங்களில் காணப்பட்ட பலவீனங்கள் காரணமாக, புதிதாக அறிவுத்திறனை தேடிச் செல்லும் உத்வேகமும் இக்காலத்திலேயே ஏற்பட்டது. இந்த நிலைமையின்கீழ் கொன்ஸ்தாந்திநோபலில் இருந்து வந்த அறிஞர்களுக்கு உதவ பெருமளவான வணிகர்கள் மற்றும் வங்கி உரிமையாளர்கள், செல்வந்தர்கள் மற்றும் மதபோதகர்கள் சிலரும் முன்வந்தனர். பின்னர், அச்சு இயந்திரம் உருவாக்கப்பட்டதையடுத்து இந்த அறிவுத்திறன் மறுமலர்ச்சி துரிதகதியில் முன்னேற்றம் கண்டது.

## இசை

மத்திய காலப்பகுதியில் மதத் தேவைகளை நிறைவேற்றவே இசை பயன்பட்டது. எனினும், மறுமலர்ச்சிக் காலத்தில் லௌகீக விடயத்திற்காகவே இசை பயன்பட்டது. பியானோ, வயலின் புல்லாங்குழல் போன்ற இசைக்கருவிகளின் அறிமுகத்தினால் பாட்டுப் பாடுதலும் இசைக்கருவிகள் இசைப்பதும் பிரபல்யம் பெற்றன. 16 ஆம் நூற்றாண்டில் ஐரோப்பாவின் பிரபல்யம் பெற்ற பாடல் ஆசிரியராக இத்தாலி இனத்தவரான பெலஸ்ட்ரினா (1525-1594) திகழ்ந்தார். நூற்றுக்கணக்கான கீதங்களை இயற்றியுள்ள அவர், பிற்காலத்தில் இசையின் தந்தை என்றும் கருதப்படுகின்றார். அதன் பின்னர், ஐரோப்பானில் ஒபெரா (பாடல் நாடகம்) காலம் உருவானது.



## மறுமலர்ச்சிக் கால அறிஞர்கள்

மறுமலர்ச்சிக் காலப்பகுதி அறிஞர்கள் மத விடயங்களில் ஆர்வம் காட்டுவதை விட, லௌகீக விடயங்களிலேயே அதிக ஆர்வம் காட்டினர். இதனால், அவர்கள் மானுடவியலாளர்கள் என்று அறியப்பட்டனர். லௌகீக விடயங்களைப் பரப்புவதற்காக அவர்கள் தேசிய மொழியினையே பயன்படுத்தினர். இதனால், சாதாரண மக்கள் மத்தியில் பழக்கப்பட்ட மொழி இலக்கிய மொழியாக மாற்றம் பெற்றது. அன்றைய காலப்பகுதியில் இத்தாலியில் இருந்த அறிஞர்கள் மத்தியில் டான்டே (1265-1321), பெட்ராக் (1307-1474) மற்றும் பொகாஷியோ (1313-1375) ஆகியோர் முக்கியமானவர்கள்.

## மறுமலர்ச்சிக் கால கலைகள்

மறுமலர்ச்சிக் காலப்பகுதியில் கலைத் துறையின் புகழ்பூத்த நகராக ஃப்ளோரன்ஸ் நகரம் திகழ்ந்தது. இதன் பெருமைகள் அனைத்தும் பிரபல 'மெடிசா' குடும்பத்தினையே சேரும். அவர்கள் கலைப்படைப்புகளைப் படைக்கவென பிரபல கலைஞர்கள் பலரை ஈடுபடுத்தியிருந்தனர். அவர்கள் மத்தியில் லியனாடோ டா வின்சி (1452-1519), மைக்கல் எஞ்சலோ (1475-1564), ரபாயல் (1483-1520) ஆகியோர் முக்கியமானவர்களாவர்.

**பெனீசியன் குருகுலம் (1477-1576):**

மறுமலர்ச்சிக் காலத்தில் கலைஞர்களுக்கான புதிய குருகுலம் ஒன்றை வெனிசில் அமைக்க நடவடிக்கைகள் எடுக்கப்பட்டன. அங்கிருந்த பிரபல ஓவியக் கலைஞரான டிடியன் என்பவர் இப்பணிகளை முன்னெடுப்பதில் முக்கிய இடத்தினை வகித்தார்.

**கட்டடக் கலை:**

மறுமலர்ச்சிக்


சென்.பீற்றர் தேவாலயம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


டேன்


எல்க்ரேகோ


ஷேக்ஸ்பியர்


மெடிசி


ஸ்பென்சர்


இராஸ்மஸ்


கெலிலியோ கெலிலி


பெட்ராக்


ப்ரென்கொய் டிபெலைஸ்


டான்டே

# பின் மறுமலர்ச்சி


நெப்போலியனைக் குறிக்கும் ஓவியம்

ஃப்ளோரன்ஸ் நகர்

காலத்தில் இத்தாலி கட்டடக் கலைஞர்கள் 'கொதிக்' கலையை நிராகரித்தனர். மாறாக, பண்டைய கிரேக்க மற்றும் ரோமானிய கட்டடக்கலை நுட்பங்களையே அவர்கள் பின்பற்றினர். உயர்ந்த கோபுரங்கள், பெரிய அரைக் கோளகூடங்கள் என்பன மறுமலர்ச்சிக் கால கட்டக் கலையில் காணக்கூடிய சிறந்த நிர்மாணங்களாகும். ரோமில் உள்ள சென்.பீற்றர் தேவாலயம் மறுமலர்ச்சிக்கால கட்டடக் கலை வெளிப்பாடுகளை சிறப்புற எடுத்துக் காட்டுகின்றது. வெனிசின் சென்.மார்க் மற்றும் லண்டன் சென்.போல் ஆகிய தேவாலயங்கள் ரோமின் சென்.பீற்றர் தேவாலயத்தினைப் பின்பற்றியே நிர்மாணிக்கப்பட்டுள்ளது. மறுமலர்ச்சிக் காலத்தின் கட்டட நிர்மாணங்களில் தேவாலயங்களைத் தவிர, வேறு கட்டடங்களும் அரச மாளிகைகளும் நிர்மாணிக்கப்பட்டன.

## மறுமலர்ச்சிக் காலத்தின் பிரதான நிகழ்வுகள்

* **1420-26:** கட்டடக்கலை நிபுணரான பிலிப்போ புருனெலிசி என்பவரால் கட்டடக் கலையின் நுட்பங்கள் மாற்றப்பட்டு அதன் வளர்ச்சிக்குப் பங்களிப்பு செய்யப்பட்டது.
* **1430-5:** டேவிட் எனும் சிற்பக் கலைஞரினால் டொனெடெலோ எனும் சிற்ப நிர்மாண முறைக்கேற்ப மிகப்பெரிய நிர்வாண சிலை உருவாக்கப்பட்டது. இது ரோமானியப் பேரரசுக் காலத்தில் நிகழ்ந்தது.
* **1480-85:** சென்ட்ரோ பொட்டிசெலி எனும் சிற்பக் கலைஞரினால் 'நீனசின் பிறப்பு' ஓவியமாக வரையப்பட்டது.
* **1497:** லியனாடோ டா வின்சியால் 'இறுதி இராப்போசனம்' என்ற ஓவியம் வரையப்பட்டது.
* **1501:** பெட்ராசியால் அச்சடிக்கப்பட்ட முதலாவது இசை நூல் வெனிசில் வெளியிடப்பட்டது.
* **1501-4:** மைக்கல் எஞ்ஜலோவால் டேவிட் சிலை வடிவமைக்கப்பட்டது.
* **1502:** லியனாடோ டா வின்சியால் 'மொனாலிசா' எனும் ஓவியம் வரையப்பட்டது.
* **1505:** கட்டடக்கலை நிபுணர் டொனொடோ பிரமன்டே என்பவரால் ரோம் சென்.பீற்றர் தேவாலயத்தின் கட்டட நிர்மாணப்பணிகள் ஆரம்பிக்கப்பட்டன. அதன் பணிகள் 1655 இல் நிறைவு பெற்றன.
* **1508:** ஓவியக் கலைஞர் ரபாயலினால் வத்திக்கானில் உள்ள பாப்பரசரின் வாசஸ்தலத்தினை அலங்காரம் செய்யும் பணிகள் ஆரம்பிக்கப்பட்டன.
* **1508-12:** மைக்கல் எஞ்ஜலோவினால் சிஸ்டைன் தேவாலயத்தின் அலங்கார வேலைப்பாடுகள் ஆரம்பிக்கப்பட்டன.
* **1509:** இராஸ்மஸ் எனும் எழுத்தாளரினால் 'இன்பிரஸ் ஒவ்பேலி' எனும் தலைப்பிலான தேவாலயத்தினை விமர்சனத்திற்குட்படுத்திய நூல் படைக்கப்பட்டது.
* **1510:** டைட்டன் வெரொனிஸ் மற்றும் டின்டொரேட்டோ ஆகிய ஓவியக்கலைஞர்களின் உழைப்பினால் வெனிசில் கலை மறுமலர்ச்சி உச்சநிலையை அடைந்தது.
* **1532:** நிகொலோ மாக்கியவெல்லியின் 'இளவரசன்' எனும் நூல் வெளியானது. ஆட்சியாளர்கள் அரசாங்கத்தினை எப்படி நடத்த வேண்டும் என்பது குறித்தான விபரங்கள் அதில் உள்ளன.
* **1543:** வானியல் அறிஞர் கொப்பர்நிகஸால் புவி மற்றும் ஏனைய கோள்கள் சூரியனை வலம் வருவதாகக் கூறப்பட்டது.
* **1552:** கட்டடக்கலைஞர் ப்ளடியோவினால் வெனிசின் றொடுன்டா எனும் மாளிகையின் நிர்மாணப் பணிகள் ஆரம்பிக்கப்பட்டன.
* **1573:** கலிலியோ கலிலியினால் வெப்பநிலை அளவீட்டுமானி வடிவமைக்கப்பட்டது.
* **1608:** கலிலியோவினால் தொலைக்காட்டி நிர்மாணிக்கப்பட்டது.



## வட ஐரோப்பாவின் மறுமலர்ச்சி

இத்தாலியில் ஆரம்பமான மறுமலர்ச்சி மற்றும் மனிதாபிமான இயக்கம் 15 ஆம் நூற்றாண்டில் பிரித்தானியாவிலிருந்து ஆரம்பித்து, எலிசபெத் ராணியின் அரசகாலத்தில் முன்னேற்றத்தின் உச்சத்தை அடைந்தது. அங்கு இருந்த பிரபல எழுத்தாளர்களுக்கிடையில் 'கின்டபரி கதை' எனும் நூலை எழுதிய ஜெப்ரி வோசர், யுட்டோபியா என்ற நூலை எழுதிய தோமஸ் மூவர், பிரான்சிஸ் பேக்கின், எட்மண்ட் ஸ்பென்சர், கிறிஸ்டோபர் மலோச் மற்றும் பென் ஜோன்சன் ஆகியோர் முதலிடத்தினைப் பெற்றனர். மறுமலர்ச்சிக்காலத்தில் ஆங்கில இலக்கியத்துறையில் முதலிடத்தினை வகித்த எழுத்தாளர்களாக ஷேக்ஸ்பியர் மற்றும் ஜோன் மில்டன் ஆகியோர் திகழ்ந்தனர்.

அன்றைய மறுமலர்ச்சி பிரான்சிலும் செல்வாக்குச் செலுத்தியது. பிரான்சிய இலக்கியத்தினை வளர்த்தவர்களில் முன்னோடியாக டொன்டேன் (1533-1592) திகழ்ந்தார். பிரன்கோசிஸ் ரிபெலசிஸ் (1494-1553) நகைச்சுவை நூல்களைப் படைத்தார். ஜோன் கெல்வின், மதச் சீர்திருத்தம் தொடர்பான நூல்களையும் தர்க்க ரீதியிலான ஆக்கங்களையும் பிரசுரித்தார்.

அத்துடன், மறுமலர்ச்சிக்காலத்தில் ஸ்பெய்னில் வசித்த சர்வென்டஸ் திறமையான எழுத்தாளராக விளங்கினார். லோப் டி வேகா, ஸ்பெய்ன் நாடகத் துறையின் முன்னோடியாக பிரபலம் பெற்றுள்ளார். க்லெரன்டன் மேலும் ஒரு சிறந்த கவிஞராவார். மேலும், எல்க்றோசோ, வேலாக்மேஸ் மற்றும் முகில்லோ போன்றோர் ஓவியத்துறையில் முன்னோடிகளாகத் திகழ்ந்தனர்.

டெசிடேரியஸ் இராஸ்மஸ் (1465-1536) மறுமலர்ச்சிக்காலத்தில் ஒல்லாந்தில் வசித்த சிரேஷ்ட மானுடவியலாளரும் அறிஞரும் எழுத்தாளருமாவார். அவர் மதபோதகராகவும் பயிற்சி பெற்றிருந்ததோடு, தேவாலயத்தின் ஊழல், மோசடிகளைக் கண்டு அவற்றை விமர்சிக்கவும் தயங்கவில்லை. ரெம்பிரான்ட் (1606-1669) மறுமலர்ச்சிக் காலத்தில் இருந்த பிரசித்தி பெற்ற ஒல்லாந்து நாட்டு ஓவியராவார். 'த நைட் வொச்' அவரின் மிகவும் பிரபலம் பெற்ற ஓவியமாகும். தவிர, ஜேன் வெர்மியர் மற்றும் பிரான்ஸ் ஹல்ஸ் போன்ற பிரபல ஓவியர்களும் இங்கு இருந்தனர். மறுமலர்ச்சியானது இத்தாலியில் இருந்து வட ஐரோப்பாவுக்கு பரவியபோது, ஜேர்மனி அதில் அகப்பட்டுக்கொண்ட முக்கிய நாடாகும். -(இ)


ஒட்டோமன் துருக்கியர்களின் கொன்ஸ்தாந்திநோபல் ஆக்கிரமிப்பை சித்தரிக்கும் ஓவியம்


லியனாடோ டா வின்சியின் ஓவியமொன்று


கிரேக்க அறிஞர்கள் ஐரோப்பாவுக்கு இடம்பெயர்வதை சித்தரிக்கும் ஓவியம்




மொனாலிஸா ஓவியம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




# புரட்சி சதுக்கம்

உலகின் மிகப் பெரிய சதுக்கங்களில் கியூபாவின் புரட்சி சதுக்கம் முக்கியமானதாகும். சுமார் 72 சதுர கி.மீ.பரப்பளவில் இது பரந்து கிடக்கின்றது. ஆரம்பத்தில் 'மக்கள் சதுக்கம்' என்ற பெயரில் கட்ட ஆரம்பிக்கப்பட்ட இந்த சதுக்கம், கியூபாவின் புரட்சி முடிந்த பின்னரே முழுமையாகக் கட்டி முடிக்கப்பட்டது.இதனால், 'புரட்சி சதுக்கம்' எனப் பெயரிடப்பட்டது. ஜோஸ் மார்ட்டியின் சிலை மற்றும் சேகுவேராவின் உருவம் ஆகியவை இங்குள்ளன. அதிபர் அலுவலகமும் அரசாங்கக் கட்டடங்களும் தேசிய நூலகமும் இவ்வளாகத்தில் உள்ளமை குறிப்பிடத்தக்கது.

மு.கலாபிரகாஷினி,
பது/தமிழ் மகளிர் மகா வித்.,
பதுளை.

# ஆசிரியர்களை மதிப்போம்

மாதா, பிதா, குரு, தெய்வமென வரிசைப்படுத்தும்போது, தெய்வத்திற்கு முன்னதாக குருவை கூறியிருக்கின்றார்கள். அந்தவகையில், நாம் ஆசிரியர்களை கனம்பண்ணுதல் வேண்டும். அவர்களிடம் இருந்து நல்ல அறிவுரைகளைப் பெற்றிட வேண்டும். நமது முன்னோர் ஆசிரியர்களைக் கனம் பண்ணினர். அவர்களின் வழிகாட்டலின்மூலம் வளமான வாழ்வைப்பெற்றனர். இன்று நம்மவர் பலர் ஆசிரியர்களைக் கனம் பண்ணப் பின்னிற்கின்றனர். இந்நிலை நிச்சயமாக மாற வேண்டும்.



ஆசிரியர்களின் ஆசிமொழிகள் நமது வாழ்வை உயர்த்திட உதவும் என்பதை உணர்ந்து அவர்களை நாடி அவர்களது ஆசிமொழிகளைப் பெறவேண்டும். மாணவர்களாகிய நாம் இதனை உணரவேண்டும். அன்னை தரும் அன்னத்தை உண்டபின் மீண்டும் பசி எடுக்கின்றது. தந்தை தரும் பொருட்செல்வமும் நாளடைவில் அழிந்து போகின்றது. ஆனால், ஆசிரியர் தரும் அறிவுச் செல்வம் என்றுமே அழியாது நம்மைத் தொடருகின்றது.

அந்தவகையில், தெய்வத்திற்குச் சமமாக மதிக்கப்படும் ஆசிரியர்களை எந்தநாளிலும் மதித்து வருவோமாக.

**எம்.எஃப்.
சுமையா
விஹாரமஹாதேவி
மகளிர் கல்லூரி.,
கண்டி.**

# தாயின் மதியூகம்



ஒரு விவசாயியிடம் பதினேழு குதிரைகள் இருந்தன. அவரது மனைவி உட்பட,மூன்று மகன்களும் வயலில் பாடுபட்டு வேலை செய்தனர். இதனால், விவசாயம் நன்றாக நடக்க, மகிழ்ச்சியாக வாழ்ந்து வந்தார்கள். காலம் சென்றது. விவசாயிக்கு வயதானதால் அடிக்கடி உடல் நலம் குன்றியது. இதனால், அவர் தன் அன்பிற்குரிய குதிரைகளைப் பங்கு பிரித்து உயில் எழுதி வைத்து விட்டு இறந்து போனார். இறுதிச் சடங்குகளும் முடிந்தன. இறுதிச் சடங்குக்கு வந்தவர்கள் அனைவரும் தத்தமது வீடுகளுக்குச் சென்ற பின் பிள்ளைகள் தங்கள் தந்தை எழுதிய உயிலை எடுத்துப் படித்துப் பார்த்தார்கள். உயிலில் இப்படி எழுதப்பட்டிருந்தது.... ''என் அன்பிற்குரிய பதினேழு குதிரைகளையும் நான் என் பிள்ளைகளுக்குத் தருகின்றேன். மூத்த மகனுக்குப் பாதி, இரண்டாவது மகனுக்கு மூன்றில் ஒன்று, மூன்றாவது மகனுக்கு ஒன்பதில் ஒன்று. இப்படிப் பிரித்து என் மகன்கள் குதிரைகளை எடுத்துக்கொள்ள வேண்டும்.''

உயிலை வாசித்துப் பார்த்த விவசாயியின் புதல்வர்கள் மிகவும் குழம்பிப் போனார்கள். குதிரைகளை இந்த வகையில் எப்படிப் பிரிக்க முடியும்? முடியாத காரியத்தை எமது தந்தை எழுதி வைத்துவிட்டாரே! பதினேழை இரண்டாலோ, மூன்றாலோ, ஒன்பதாலோ பிரிக்க முடியாது. குதிரைகளை வெட்டிப் பிரிக்கவும் முடியாது. பின்னர் எப்படிப் பங்கு பிரிப்பது? உதாரணமாக, பதினேழின் பாதி எட்டரை. அரைக்குதிரையை எப்படிக் கொடுப்பது? அவர்கள் யோசித்தார்கள். எவ்வளவோ முயற்சி செய்து பார்த்தார்கள். வழி எதுவும் தெரியாமல் மிகவும் துன்பம் அடைந்தார்கள்.

ஆனால், அவர்களின் தாயாருக்கு அவர்களை விடவும் கணக்கு நன்கு புரியும். ''நான் இப்போது இதற்கு ஒரு வழி சொல்கிறேன். சற்றுப் பொறுமையாக இருங்கள்'' என்று தன் பிள்ளைகளுக்கு ஆறுதல் சொன்ன தாயார், சற்றுத் தொலைவில் உள்ள உறவினர்களிடம் சென்று ஒரு வெள்ளைக் குதிரையைக் கடன் வாங்கி வந்தார்கள். கடன் வாங்கி வந்த குதிரையை ஏனைய குதிரைகளுடன் சேர்த்துக் கட்டினார். ''இனி உங்கள் தந்தையார் கொடுத்த குதிரைகளைப் பிரித்து எடுத்துக் கொள்ளுங்கள்'' என்றார் தாயார்.

பிள்ளைகள் மகிழ்ச்சி அடைந்தார்கள். தந்தை கூறியபடியே அவர்கள் குதிரைகளைச் சரியாகப் பிரித்து எடுத்து மகிழ்ச்சியுடன் வாழ்ந்தார்கள். எப்படி அவர்கள் குதிரைகளைப் பிரித்துக் கொண்டார்கள்? ஏன் அவர்களின் தாயார் உறவினர்களிடம் இருந்து ஒரு குதிரையை கடன் வாங்கினார்? இதன் பின்னால் உள்ள கணக்கு என்ன?. இரவல் பெற்ற குதிரையை எப்படித் திருப்பிக் கொடுத்தனர் என்று யோசிக்கிறீர்களா?

**இப்படித்தான் பிரித்துக் கொண்டனர்:**

தாயார் இரவல் பெற்ற குதிரையை, பதினேழு குதிரைகளுடன் சேர்த்துக் கட்டினார். இப்போது குதிரைகள் பதினெட்டு. அதில் பாதியான (இரண்டிலொன்று) 9 குதிரைகளை மூத்தவன் எடுத்துக் கொண்டான். அடுத்ததாக, மூன்றில் ஒன்றான 6 குதிரைகளை இரண்டாவது மகன் எடுத்துக் கொண்டான். பின்னர் , ஒன்பதில் ஒன்றான 2 குதிரைகளை மூன்றாவது மகன் எடுத்துக் கொண்டான். அப்படியென்றால், மொத்தம் 9+6+2=17 குதிரைகளைப் பிள்ளைகள் எடுத்துக் கொண்டார்கள். மீதமுள்ள ஒரு குதிரைதான் இரவல் பெற்ற குதிரை.அது வாங்கியவர்களிடமே ஒப்படைக்கப்பட்டது.

*எச்.எம்.அஸ்லம்,
மட்/ஓட்டமாவடி தே.பா., ஓட்டமாவடி.*

# கணிதத்தின் வளர்ச்சி

நாகரிகம் மிக்க நாடுகளில்தான் முதன் முதலில் கணிதம் வளர்ச்சி பெற்றது. பண்டைய நாகரிகத்தில் சிறந்த நாடுகளான இந்தியா, சீனா, கிரேக்கம், எகிப்து, அரேபியா, பெபிலோனியா எ[illegible]ன கணித வரலாற்றில் முக்கியத்துவம் மிக்கவை. ஆரியபட்டா, பிரம்ம குப்தர், ராமானுஜம், பாஸ்கரர், ஆர்க்கிமிடீஸ், மகாவீரர், பைதகரஸ், ஜோஷான் லீட்டேன், வில்லியம் ஒட்ரெட், ஜோஷான் ஷென்ரிச், மைகேல் ஸ்டிபல், பிளெஸ் பாஸ்கல் போன்ற கணித அறிஞர்கள் பலர் கணித வளர்ச்சிக்கு உதவினர்.



வடிவக் கணிதத்தில் முக்கிய இடம் வகிப்பது எகிப்து. யூக்ளிட் என்ற கிரேக்க கணித அறிஞரே வடிவக் கணித எழுச்சிக்கு வித்திட்டவராவார். பண்டைய ரோமாபுரியும் கணித வளர்ச்சிக்குச் சிறந்த பங்களிப்பைச் செய்தது. இவ்வாறு தான் கணிதம் மக்கள் மத்தியில் படிப்படியாக வேரூன்றத் தொடங்கியது.

எஃப். ஆய்மா

# விளையாட்டின் முக்கியத்துவம்

''ஓடி விளையாடு பாப்பா, நீ ஓய்ந்திருக்கலாகாது பாப்பா'' என பாரதியார் பாடியுள்ளார். விளையாட்டின் முக்கியத்துவம் பற்றி இரண்டே அடிகளில் நமக்கு அறிவுறுத்துகிறார் பாரதியார்.

படிப்பதும் வேலை செய்வதும் மட்டுமே மானிடர் தொழில்கள் அல்ல. தவிர, பிறர் பாராட்டும் வண்ணம் திடமான தேகத்தையும் தன்னம்பிக்கையையும் கொண்டிருத்தல் அவசியமாகும். அதனை விளையாட்டு நமக்கு அளிக்கிறது. விளையாட்டின் மூலம் நமது உடலில் இருந்து வியர்வை வெளியேறுகின்றது. அதனால், உடல் அழகு பெறுகிறது.இந்த அழகானது பிறரைக் கவரச் செய்யும் அதேவேளை, நோயற்றவர்களாகவும் சுகதேகிகளாகவும் நம்மை வாழச் செய்கிறது.

ஒவ்வொரு நாளும் சிறிது நேரம் விளையாடுவதன் மூலம் உடல் உறுதி பெறுகின்றது. நோய்களைத் தாங்கவும் எதிர்க்கவும் சக்தி பிறக்கின்றது. அத்துடன் வெற்றி, தோல்வி என்பனவற்றைத் தாங்கும் மனப்பக்குவத்தையும் விளையாட்டு நமக்களிக்கிறது. போட்டியும் பொறாமையும் நீங்கி நல்ல மனப்பாங்கையும் வளர்க்கின்றது.



ஒரு நல்ல விளையாட்டு வீரனை உலகமே போற்றுகிறது. இன்று உதைபந்தாட்டம், கிரிக்கெட், கூடைப்பந்தாட்டம், ஓட்டம் போன்ற விளையாட்டுக்கள் மக்கள் மத்தியில் பிரபலம் பெற்று விட்டதை அவதானிக்கக் கூடியதாக உள்ளது. எனவே, நாமும் விளையாட்டின் முக்கியத்துவத்தை உணர்ந்து விளையாட்டுக்களில் ஈடுபட்டால் நாளை வீட்டுக்கும் நாட்டுக்கும் நற்புகழ் சேர்க்கும் பிரஜைகளாக உருவாகலாம்.

ரமீனா ரவுப்,
கே/மாவ/கொ[illegible] மு.வித்., ஹெம்மாதகம.



# நட்சத்திரப் பூக்கள்



சின்னச் சின்ன பூக்களாம்
சிங்காரப் பூக்களாம்
வானில் மலரும் பூக்களாம்
வாடி உதிர்வது இல்லையாம்!

கொட்டிக் கவிழ்ந்த பூக்களாம்
கொள்ளை அழகுப் பூக்களாம்
பார்த்துப் பார்த்து ரசிக்கலாம்
பறிக்க எவரும் இல்லையாம்!

இரவும் நிலவும் கூடியே
ஈன்றெடுத்த பூக்களாம்
வெண்மை நிறப் பூக்களாம்
[illegible]ால் எல்லாம் மாயமாம்!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பாடசாலைக் கல்வியில் வாசிப்பின் முக்கியத்துவம்





'வாசிப்பு மனிதனைப் பூரணப்படுத்துகின்றது' என்பர். உண்மையில் மொழியின் அடிப்படைக் கூறுகளான 'செவிமடுத்தல், பேச்சு, வாசிப்பு,எழுத்து. ஆகியன மொழித்திறன்களை உள்ளடக்கியனவாகவே காணப்படுகின்றன. 1997ஆம் ஆண்டிற்குப் பின்னர் நமது பாடசாலைக் கல்வித்திட்டத்தில் அறிமுகப்படுத்தப்பட்ட கல்விச் சீர்திருத்தங்களின் மூலம் எதிர்பார்க்கப்படும் தேசிய குறிக்கோள்களை அடைந்து கொள்வதற்காக, சில அடிப்படைத் தேர்ச்சிகளை மையப்படுத்தி பாடசாலைக் கல்வித் திட்டம் வகுக்கப்பட்டுள்ளது.

அந்தவகையில், முதலாவதாக 'தொடர்பாடல் தேர்ச்சிகள் மூலமாக எழுத்தறிவு, எண்ணறிவு, சித்திர அறிவு, தகவல் தொழில்நுட்பத் தகைமை என்பன நான்கு வகை துணைத் தொகுதிகளாக வகுக்கப்பட்டுள்ளன. இவற்றில் கவனமாகச் செவிமடுத்தல், தெளிவாகப் பேசுதல், கருத்தறிய வாசித்தல், சரியாகவும் செம்மையாகவும் எழுதுதல், பயன்தரும் வகையிலான கருத்துப் பரிமாற்றம் என்பன முக்கியத்துவம் பெற்றுள்ளமையை அவதானிக்கலாம். எனவேதான், கல்வித்துறையில் குறிப்பாக, ஆரம்பக் கல்விப் புலத்தில் வாசிப்பின் முக்கியத்துவத்தை உணர்த்தும் 'மௌனவாசித்தல், உரத்து வாசித்தல்' என்பன சொற்களைக் கற்றல் அல்லது-கற்பித்தல் முறைமைகள் முக்கியத்துவம் பெற்று விளங்குகின்றன எனலாம்.

ஆரம்ப வகுப்பில் கற்கும் ஒரு மாணவனுக்கு ஆசிரியர் குறிப்பாக தாய்மொழிப் பாடத்தை நன்கு விளங்கக்கூடியவாறு கற்பித்தல் வேண்டும். இங்கு பாடத்திற்கான விடயக்கூறுகளைத் தெளிவாகப் புரிந்து கற்றல்-கற்பித்தல் செயற்பாடுகள் என்பது மிக முக்கியத்துவம் மிக்கதாகக் கருதப்படுகின்றன. மொழிரீதியாக ஆரம்பப்பிரிவு வகுப்புக்களில் எதிர்பார்க்கப்படும் தேர்ச்சிகளில் பின்வரும் விடயங்கள் வாசிப்பில் முக்கியத்துவம் பெற்றுள்ளதாக கருதப்படுகின்றன. அதாவது, கவிதை, பாடல், கதை கேட்டும் வாசித்தும் அறிதல் பிழையின்றி உச்சரித்து உரத்து வாசித்தல், செவிமடுத்தல், பேச்சு, வாசிப்பு, எழுத்து, வாசித்தபின் கிரகித்து வெளிப்படுத்தல்,ரசனையுடன் வாசித்தல் என மாணவர்களின் நலன் கருதியதான இவ்வகையான தேர்ச்சிகள் ஆசிரியர்களால் முன்கொண்டு செல்லப்பட வேண்டுமென எதிர்பார்க்கப்படுகின்றது.




நமது நாட்டில் அனேகமாக, தாய்மொழிக் கல்வியானது நீண்ட காலமாகவே, பாலர் வகுப்பு முதல் பல்கலைக்கழகம் வரை போதிக்கப்பட்டு வருவதுடன் சகல பாடங்களும் தாய்மொழியில்தான் கற்பிக்கப்பட்டு வருகின்றன. இருப்பினும் தாய்மொழி கற்றல் அல்லது திறனில் சில மாணவர்கள் பரீட்சைகளின்போது வெளிப்படுத்தும் திறமையானது பூச்சியமட்டத்தில் காணப்படுவது மிகவும் கவலை அளிப்பதாகவே உள்ளது. இதற்கு பல காரணங்கள் கூறப்பட்டாலும், ஆரம்ப வகுப்புகளின்போது, கற்பித்தல் முறையில் உள்ள குறைபாடுகள் ,மற்றும் நவீனத்துவம் மிக்கதான தொழில்நுட்ப ரீதியிலான கற்றல், மற்றும் கற்பித்தலை விடுத்து, காலத்திற்குதவாத பாரம்பரிய முறைகளைக் கையாள்வதன் பயனாகவே வாசிப்பு, எழுத்து போன்ற திறன்களில் இருள் சூழ்ந்த தன்மை தொடர்வதாக ஆய்வாளர்கள் கூறுகின்றனர்.

எனவே, ஆரம்ப வகுப்புக்களில் மாணவர்கள் விரைவாக வாசிக்கும் நிலையை ஏற்படுத்துவதற்கான பல்வேறு பிரயத்தனங்கள் மேற்கொள்ளப்பட வேண்டும். அந்தவகையில், பாடசாலைகளில் நடைபெறும். பல்வேறு புறக்கீர்த்தி நடவடிக்கைகளில் மாணவர்களை ஈடுபடுத்தல் சிறப்பானதாக அமையும். காலை ஆராதனையின்போது, நற்சிந்தனை வாசித்தல், அன்றைய செய்திகளை வாசித்தல், மாணவர் மன்றங்களில் மாணவர்களைப் பேசவும், வாசிக்கவும் ஊக்குவித்தல் என்பன தொடர்பான சந்தர்ப்பங்களை அனைத்து மாணவர்களுக்கும் வழங்கும்போது, இந்த மாணவர்கள் எதிர்காலத்தில் சிறந்த பேச்சாளர்களாகவும் அறிவிப்பாளர்களாகவும் சமுதாயத்தை நல்வழி நடத்துபவர்களாகவும் திகழ்வார்கள்.

அத்துடன், மொழித்திறன்களை மேம்படுத்துவதில் வீடும் வீட்டுச் சூழலும் மிக முக்கிய காரணங்களாக அமைகின்றன.

மொழியைக் கற்பிக்கும் அணுகுமுறைகளில் கீழ்பிரிவு மாணவர்களுக்கு ஆசிரியர் கதைகூறல், பாடுதல், நடித்தல், பாவனை செய்து காட்டுதல், வாசித்தல், பேசுதல், உரையாடுதல், பரிமாறுதல், எழுதுதல், வரைதல், விளக்கங்கள் கூறுதல் போன்றவற்றை உள்ளடக்கிய செயற்பாடுகள் மற்றும் விளையாட்டுக்களிலும் அவர்களை ஈடுபடுத்துவதன் மூலம் மொழித்திறனை மேம்படுத்த உதவலாம். வாசிப்பு என்பது எழுத்தில் உள்ளவற்றை கண்களால் பார்த்து, வாயால் உச்சரித்து பொருளை உணர்த்துவது என்று கூறுவர். வாசித்தலில் சொற்களை இனங்காணுதல், உச்சரித்தல், பொருள் உணர்தல் ஆகிய மூன்று கூறுகள் உள்ளடங்குவதுடன், அவை மாணவர்களிடையே பல்வேறு திறன்களை விருத்தி செய்யவும் உதவுகின்றன எனலாம்.



சிந்தனைகள் சிறப்பாக அமைந்திட, சிறந்த அறிவை வளர்த்திட, விடயத்தின் பொருள் அறிந்து அதன்படி வாசித்தல் என்பது மிகுந்த துணைபுரிகின்றது. வாசிப்புத் திறனை மேம்படுத்தக் குறிப்பாக, ஆரம்பப் பிரிவு மாணவர்கள் மாத்திரமன்றி இடைநிலை மாணவர்களுக்கும் பெரிய எழுத்துக்களுடன்கூடிய சிறிய கதைப்புத்தகங்கள், கவிதை, கட்டுரை போன்ற நூல்கள் வழித்துணையாக அமைகின்றன. எனவே தான், எந்தவொரு விடயமானாலும், கேட்ட மாத்திரத்தில் அவற்றை அறிந்து செயற்படும் தன்மையுள்ள மாணவர்கள் வாசிப்பில் திறமையுள்ளவர்களாக காணப்படுகின்றனர். அவர்கள் பல்வேறு நூல்களை வாசித்தறிந்து அவற்றின் பொருள் உணர்ந்து கொள்வதிலும் நாட்டம்மிக்கவர்களாகவே இருப்பர். ஆகவே, வாசிப்பின் மூலம் முழுமைபெற்ற கல்வியறிவைப் பெறலாம் என்பது திண்ணம்.


**எஸ்.எல்.மன்சூர் (கல்விமாணி)**

## சாதனையாளர்:

# குருதி ஓட்டம் பற்றி முதலில் ஆராய்ந்த விஞ்ஞானி கேலன்



(கி.பி.130-கி.பி.201)



உலகில் முதன்முதலாக மனிதனின் குருதிச் சுற்றோட்டம் பற்றி ஆராய்ந்தவர் விஞ்ஞானி கேலன் ஆவார். இவர், கி.பி.130 ஆம் ஆண்டு கிரேக்க நாட்டில் உள்ள பெர்கமம் எனும் ஊரில் பிறந்தார். இவர், மனிதனை ஒத்த மனிதக் குரங்குகளின் உடற்கூறுகளை அறுத்து ஆய்வு செய்ததன் மூலம் தமது முடிவுகளை வெளியிட்டார். ஒரு நோயாளியின் உடல் நிலையை நாடித்துடிப்பின் வேகத்தைக் கொண்டு அனுமானித்து விடலாம் என்பதை தமது ஆய்வுகளின் மூலம் அறிந்து கொண்டார்.

அத்துடன், தமது பெற்றோர்களின் சாயலைவிட அவர்களின் தாத்தா, பாட்டி போன்ற முன்னோர்களின் சாயலையே குழந்தைகள் பெரிதும் ஒத்திருக்கும் என்ற உண்மையை கேலன் ஆதாரத்துடன் வெளிப்படுத்தினார். நரம்புகள் அனைத்தும் முள்ளந்தண்டின் வழியாகவோ, நேராகவோ, மூளையுடன் தொடர்புகொண்டுள்ளன என்பதைக் கண்டறிந்து அது குறித்த தெளிவான விளக்கத்தையும் கேலன் வழங்கினார்.

உடற்கூற்றியல் குறித்து அதிகமான ஆய்வுக் கட்டுரைகளையும் நூல்களையும் இவர் வெளியிட்டார் .எனினும், இவரின் ஆராய்வின் முடிவுகளை சிலர் மறுத்துரைத்தனர். அந்திரியய், வெல்யங் எனும் பெல்ஜிய மருத்துவர்களும் கேலனின் கொள்கைகளை கடுமையாக மறுத்தனர். எனினும், கேலன் மனம் தளரவில்லை. தொடர்ந்தும் போராடினார். இறுதியில் வெற்றியும் பெற்றார். அரிய பல சாதனைகள் புரிந்த கேலன், கி.பி. 201ஆம் ஆண்டில் இவ்வுலக வாழ்வை நீத்தார்.

**ஆர். ஜே.**




படத்தை இங்கே ஒட்டவும்

விஜய்

மாணவர் கழகம்

விஜய் மாணவர் கழகத்தில் இணைய விரும்புகின்றீர்களா? அப்படியாயின் அருகேயுள்ள கூப்பனை நிரப்பி உங்களின் புகைப்படத்துடன் ஒட்டி அனுப்பி வையுங்கள்

பெயர்:....................................

முகவரி:....................................

....................................

பாடசாலை:....................................

வகுப்பு:....................................

திகதி: ....................................

ஏற்கனவே அனுப்பியவர்கள் மீண்டும் அனுப்புவதை தவிர்க்கவும்

அனுப்ப வேண்டிய முகவரி :

'விஜய்'

மாணவர் கழகம்

த.பெ.எண் 2087

கொழும்பு


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



கென்கல்லையைச் சேர்ந்த விஜயகுமார்-பாக்கியவதி தம்பதியரின் செல்வப் புதல்வி வொனிசா, 29.01.2011 அன்று தனது ஆறாவது பிறந்தநாளைக் கொண்டாடவுள்ளார். இவரை, பெற்றோர் மற்றும் உறவினர்கள் அனைவரும் இறைவன் அருளால் சகல சௌபாக்கியங்களும் பெற்று, பல்லாண்டு வாழ வாழ்த்துகின்றனர்.

(தகவல்: சகோதரி கோகிலா)



நிதுள்ளகஹப்பிட்டிய அல்- தஹ்றா பாலர் பாடசாலையில் அண்மையில் இடம்பெற்ற 'சிறுவர் சந்தை' யில் மாணவர்கள் பொருள் விற்பனையில் ஈடுபட்டிருப்பதைப் படத்தில் காணலாம்.







கொழும்பு மாவட்ட முஸ்லிம் பாடசாலைகளுக்கிடையே நடைபெற்ற கராட்டே போட்டியில் 'காட்டா' பிரிவில் முதலாம் இடத்தைப் பெற்ற எம்.ஸஜாத், இரண்டாம் இடத்தைப் பெற்ற எம்.அம்ஜத், மூன்றாம் இடத்தைப் பெற்ற எம்.ரிம்சான், எம்.முபஷ்ஷிர் ஆகிய மாணவர்கள் பிரதம அதிதி மற்றும் பொறுப்பாசிரியர் நஸார் சென்சே ஆகியோருடன் காணப்படுகின்றனர்.






ஹஸ்னா லரீப், தரம்-11$^{T}$,
பாலர் யேசு கன்னியர் மடம்,
இரத்தினபுரி.



எஃப்.சஹானா, தரம்-8$^{B}$,
அல்-ஹிதாயா ம.வித்., கொழும்பு-10.



எம்.தில்சாத்,
தரம்-11, மனாருல் உலூம் ம.வித்.,
கம்பிரிகஸ்வெவ.




த.ஜனார்த், தரம்-9,
சென்.ஜோன்ஸ் கல்., யாழ்ப்பாணம்.





ஐ.சஸ்னா, தரம்-6$^{A}$,
மதவாக்குளம் மு.ம.வித்.,
மதவாக்குளம்.



ஆர்.சௌமியா, தரம்-2$^{B}$,
மடிகே மிதியால வித்.,
பண்டாரகொஸ்வத்த.



த.தனுஜா, தரம்-4$^{A}$,
மகாஜனாக் கல்., தெல்லிப்பளை.




இன்பா அனீஸ், தரம்-11,
ஸாஹிரா மு.ம.வித்., வெலிகம.

வி.மதுஷதயாளினி,
தரம்-3, வடிவாம்பிகா த.வித்.,
முன்னேஸ்வரம்.



ப.ஷமிந்தன், தரம்-7$^{A}$,
புதுக்குளம் ம.வித்., வவுனியா.



ஏ.ஜே.மௌபியா, தரம்-5$^{B}$,
அப்துல் மஜீத் வித்.,
திருகோணமலை.




எம்.அன்பாஸ்,
தரம்-3$^{A}$, மடுள்போவ மு.ம.வித்.,
ஹெம்மாதகம.


# மூக்கு, வாசனையை எவ்வாறு அறிகின்றது?

மூக்கு சுவாசிப்பதற்கு உதவும் அதேவேளை, பொருட்களின் வாசனைகளை அறிந்து கொள்வதற்கும் உதவுகின்றது. நமது மூக்கு இரு எலும்புகளின் சேர்க்கையாகும். மூக்கிலுள்ள இரண்டு எலும்புகளும் ஒன்றாகச் சேர்ந்து ஒரு பாலம் போன்ற அமைப்பை ஏற்படுத்துகின்றன. இவ்விரு எலும்புகளுக்கிடையில் செங்குத்தாக நீளவாக்கில் ஒரு குருத்தெலும்பு அமைந்துள்ளது. இது நாசித் துவாரத்தை இரு பெரும் துளைகளாகப் பிரிக்கின்றது.

இவ்விரு மூக்குத் துளையின் இறுதியிலும் முகர்ச்சி நரம்பு முனைகள் இணைந்துள்ளன. இம்முனைகளில் நரம்பு செல்கள் இணைந்துள்ளன. இச்செல்களின் உதவியால் பொருட்களின் வாசனையை அறிய முடிகின்றது. இச்செல்களை 'வாசனையை உணரும் செல்கள்' (Receptors) என அழைக்கின்றனர். இச்செல்கள் நாம் ஒரு பொருளை முகரும்போது, அப்பொருளின் வாசனை இப்பகுதியை அடைந்து செல்களைத் தூண்டுகின்றது. இறுதியாக, இத்தூண்டுதல் மூளையிலுள்ள வாசனையை அறியும் மையத்தை அடைகின்றது. அதன் பின்னரே நாம் குறிப்பிட்ட பொருளின் வாசனையைத் தெரிந்துகொள்கிறோம்.






மனிதனின் மூக்கில் ஏழு விதமான வாசனைகளை அறியக்கூடிய நரம்புச் செல்கள் உள்ளன. அவையாவன; பூக்கள் (Flower), எரிதல் (Burning), மது (Alcohol), பழங்கள் (Fruits), பெப்பர்மின்ட் (Peppermint), புளித்த வாசனை (Musty), காரநெடி (Pungent Smell) என்பனவாகும். நமக்கு சளி பிடித்தவுடன் சளியானது இச்செல்களின் மேல் ஒரு படலம் போன்று படிந்து விடுகின்றது. ஆகையால், அத்தகைய சந்தர்ப்பங்களில் நம்மால் வாசனையை உணர முடிவதில்லை. அத்துடன், ஏனைய பிராணிகளைவிட, மனிதன் குறைந்த அளவு வாசனைகளையே அறியும் தன்மையைக் கொண்டிருக்கின்றான். மிருகங்களில் நாய்தான் வாசனையை அறியும் விடயத்தில் மிகச் சிறப்பானதொரு இடத்தில் இருக்கின்றது.

(அ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உயர்ந்த உள்ளம்

நளனும் குசேலனும் நண்பர்கள். ஒரே ஊரில் வசிப்பவர்கள். ஒரே வகுப்பில் படிப்பவர்கள். இருவரும் ஓர் ஆற்றைக் கடந்து அக்கரைக்குச் செல்ல வேண்டியிருந்தது.

அன்று ஆற்றில் அளவுக்கு அதிகமாகத் தண்ணீர் வந்துகொண்டிருந்தது. எனவே, இருவரும் படகில் ஏறி ஆற்றைக் கடக்க முற்பட்டனர். நடு ஆற்றைக் கடந்து கொண்டிருக்கும் போது, எதிர்பாராமல் அதிகளவு நீரோட்டம் ஏற்பட, படகு தடுமாறியது. இதனால், குசேலனும் நளனும் தவறி ஆற்றுக்குள் விழுந்துவிட்டனர்.அவர்கள் இருவருக்குமே நீச்சல் தெரியாது.

"குசேலா... என்னைக் காப்பாற்று" என்று கத்தினான் நளன்.

"எனக்கு நீச்சல் தெரியாதே... தைரியத்தைக் கைவிடாதே. உனக்குத் தெரிந்த மாதிரிக் கையையும் காலையும் ஆட்டு" என்று கத்தியபடி வெள்ளம் போன திசையில் சென்றுகொண்டிருந்தான் குசேலன்.

குசேலனை வெள்ளம் ஆழமான பகுதிக்கு இழுத்துச் செல்வதைக் கண்டு, முதலில் அவனைக் காப்பாற்ற முயன்றார் படகோட்டி.

"முதலில் என்னைக் காப்பாற்று. நான் வசதியான குடும்பத்தில் பிறந்தவன். நிறையச் சொத்துகள் எல்லாம் உண்டு. அவன் பரம ஏழை. என்னைக் காப்பாற்றினால் என் அப்பாவிடம் அதிக பணம் வாங்கித்தருவேன்" என்று ஓலமிட்டான் நளன்.

"அண்ணா,என் உயிர் நண்பன் நளனை முதலில் காப்பாற்றுங்கள். அவன் வீட்டுக்குச் செல்லப்பிள்ளை"என்று தன் உயிரைப் பற்றிக் கவலைப்படாமல், நளனுக்காகக் கெஞ்சினான் குசேலன்.

அப்போது, கரையில் இருந்த ஒருவர், சிறுவர்கள் வெள்ளத்தில் தத்தளிப்பதைப் பார்த்து அவர்களைக் காப்பாற்றுவதற்காக ஆற்றுக்குள் குதித்தார் அவர்களை நோக்கி நீந்தி வந்தார். அவரும் படகோட்டியும் ஆளுக்கு ஒருவராக நளனையும் குசேலனையும் மீட்டுக் கரைக்குக் கொண்டுவந்தனர்.

"என் நண்பன் நளனைக் காப்பாற்றியதுக்கு ரொம்ப நன்றி என்று படகோட்டிக்கு நன்றி சொன்ன குசேலன், "நளா, உனக்கு ஒண்ணும் ஆகலையே?" என்று அவனைக் கட்டிப் பிடித்தபடியே பாசத்தோடு தேம்பினான்.



அப்போது படகோட்டி "குசேலா, உன் உயிரை விட நளாவின் உயிரைக் காப்பாற்றவே நீ முயற்சி செய்தாய். ஆனால், இவன் தன் உயிரைக் காப்பாற்றும்படி கத்தினான். அதுவும் உன் உயிரைவிட, அவன் உயிர்தான் முக்கியம் என்றும்சொன்னான். 'உண்மையான நண்பனை ஆபத்துநேரும்போது அறியலாம்' என்று சொல்வார்கள். இனி இவன் நட்பு உனக்குத் தேவையா?" என்று கேட்டார்.

நளன், தன் கேவலமான குணத்தை எண்ணி வெட்கப்பட்டான். தன் செயலுக்காக வருந்தி குசேலனிடம் கண்ணீர் மல்க மன்னிப்புக் கேட்டான்.

"நளா,நீ உயிர் பயத்தில் இப்படி நடந்து கொண்டாய். நான் இதைப் பெரிதாக எடுக்கவில்லை" என்று அவனுக்கு ஆறுதல் கூறினான் குசேலன்.

"இப்பவும் என் தவறுக்கு நீ நியாயம் கற்பிக்கிறது உன் உயர்ந்த குணத்தைக் காட்டுகிறது. இனி எந்தக் காலத்திலும் இப்படி சுயநலத்தோடு நடந்துக்க மாட்டேன், என்றான் நளன்.

"நேரமாச்சு, வா போகலாம்" என்று நளனின் தோளில் கையைப் போட்டுக் கொண்டு அழைத்துச் சென்றான் குசேலன்.




அரியாலையூர் சி.சிவதாசன்

# கிராமத்திற்கு வந்த இரு இளைஞர்கள்

பேயின் அக்கிரமச் செயல் பேயோட்டியையே பலி கொண்டுள்ளது என்றால் அதைத் தடுப்பதற்கு யார் இனி முன் வருவார். கிழக்கு வானம் வெளுத்தது. பறவைகள் சந்தோஷமிகுதியால் தம் இருப்பிடங்களை விட்டுப் பறந்து செல்ல ஆரம்பித்தன. இரவு வேப்பமரத்தடிப் பகுதியில் அவலக் குரல்கள் கேட்டதை அக்கிராம மக்களில் சிலர் அறிவார்கள். அதனால், அவர்கள் வேப்ப மரத்தடியை நோக்கி மிகுந்த தயக்கத்துடன் சென்று பார்த்தனர். அங்கே அவர்கள் கண்ட காட்சி அவர்களின் இரத்தத்தையே உறைய வைத்தது. மிகக் கொடூரமான முறையில் மாந்திரீகர் பெரியதம்பியும் அவரோடு வந்த உதவியாளரும் இறந்து கிடந்தனர். அவர்கள் வந்த மாட்டு வண்டி அருகில் நின்றது. ஆனால், மாடுகளை அங்கு காணவில்லை. இது என்ன கொடுமை....?

பேயோட்டி பெரியதம்பியும் அவருடன் வந்தவரும் இறந்த செய்தி காட்டுத் தீ போல் கிராமம் எங்கும் பரவியது. இது பயங்கரமான பேய்தான். பெரியதம்பியரால்கூட வேப்பமரத்துப் பேயை ஒன்றும் செய்ய முடியவில்லையென்றால் எவ்வாறு இந்தப் பேயிடம் இருந்து கிராமத்தவர்களைக் காப்பாற்றுவது?.



இவ்வாறு துன்ப துயரங்களால் அவர்கள் வேதனைப்பட்டுக்கொண்டிருக்கையில் வேப்பங்கேணிக் கிராமத்துக்கு இரு இளைஞர்கள் வந்தார்கள்.

அவர்கள் வேறு யாருமல்ல; அந்தக் கிராமத்தின் பெரிய பணக்காரரும் கிராமத் தலைவருமான மாணிக்கம்பிள்ளையின் மகனும் மருமகனும்தான். பரம்பரைப் பணக்காரரான மாணிக்கம்பிள்ளை தனது மகனைப் படிப்பிக்க பட்டணத்துப் பாடசாலை ஒன்றிற்கு அனுப்பி வைத்திருந்தார். பட்டணத்தில் வாழும் அவரது தங்கையின் வீட்டிலேயே மகனைத் தங்க வைத்திருந்தார். பாடசாலை விடுமுறைக் காலமாதலால் அவரின் மகன் வித்தியாபரன் தன் தந்தையின் சகோதரி மகன் திருக்குமாருடன் கிராமத்துக்கு வந்திருந்தான்.அவர்களுக்கு அந்த அழகிய கிராமத்தின் இயற்கை வனப்புகள் நன்கு பிடித்திருந்தன. வயல்கள் பயிர்ச் செய்யும் காலத்தில் பச்சைப் பசேலெனக் காணப்படுவதும், வேப்பங்கேணிக்குப் பக்கத்தில் காணப்படும் காளியம்மனின் பயங்கரத் தோற்றமும் பாரிய வேப்பமரச் சூழலும் மக்கள் பயணிக்கும் மாட்டு வண்டில்களும் வடிவங்களும் மண் பாதைகளும் அமைதியான சூழலில் வாழ்க்கை நடத்தும் அக்கிராமமக்களின் வாழ்க்கையும் அங்கு காணப்படும் ஆலயங்களின் அழகிய தோற்றமும் அவர்களை வெகுவாகக் கவர்ந்திருந்தன. அதனால், விடுமுறைக் காலங்களில் வேப்பங்கேணிக் கிராமத்துக்கு அவர்கள் வரத் தவறுவதில்லை.

பட்டணத்திலிருந்து பலமைல் தொலைவில் இருக்கும் கிராமத்தை நோக்கி படகிலும் பின்னர் வில்லுவண்டியிலும் வந்து இறங்கிய அவர்களுக்கு பிரயாணக் களைப்பு இருந்த போதும், வேப்பங்கேணிக் கிராமத்தை வந்தடைந்ததும், இருந்த களைப்பெல்லாம் நீங்கிப் புது உற்சாகம் பிறந்தது. அவர்களைக் கண்டதும் மாமன் மாணிக்கம்பிள்ளை ஆரத்தழுவி அன்பு முத்தமிட்டு வரவேற்றார். இருந்தபோதும் வேப்பங்கேணிக் கிராமத்தில் பேயின் அட்டகாசம் நிகழும் இந்தத் தருணத்தில் மகனும் மருமகனும் வந்தது அவருக்கு உள்ளூரக் கவலையையும் பீதியையும் ஏற்படுத்தியது. திருக்குமாருக்கோ, வித்தியாபரனுக்கோ வேப்பமரத்தடிப் பேய் பற்றி எதுவும் தெரியாது.

மகன் வித்தியாபரன், மருமகன் திருக்குமார் இருவரின் வருகையால் வீடு கலகலப்பாக இருப்பதை மாணிக்கம்பிள்ளை உணராமல் இல்லை. மாணிக்கம்பிள்ளையின் மனைவி சகல வசதிகளையும் நல்ல உணவினையும் இருவருக்கும் வழங்கினாள். வேப்பங்கேணிக் கிராமத்தில் வசதிகள் பல கொண்ட மாடி வீடு மாணிக்கம் பிள்ளையின் வீடுதான். அந்த வீடு மாணிக்கம் பிள்ளையின் தந்தையாரால் கட்டப்பட்டது. பழைய காலத்து வீடாக இருந்தாலும் மாணிக்கம் பிள்ளை அதில் நவீன வசதிகளை ஏற்படுத்தி வைத்திருந்தார். மேல் மாடியில் மகன் வித்தியாபரனுக்கு ஒதுக்கப்பட்ட அறையிலேயே திருக்குமாரும் தங்கியிருந்தான். கதிரவன் மேற்கு வான்பரப்பை நோக்கிச் சென்று கொண்டிருந்தான். இளைஞர்கள் இருவரும் காற்று வசதிக்காக யன்னல்களைத் திறந்துவிட்டு நித்திரையில் ஆழ்ந்தனர். ஊரே அமைதியாக அடங்கி இருந்தது. அந்தவேளையில், வேப்பமரத்தை நோக்கி அந்த உருவம் விரைந்து வந்தது. மரத்தின் மீது அது தாவி ஏறியது. உச்சிக் கிளையை அடைந்த அது, தனது வழமையான வேலையைக் காட்ட ஆரம்பித்தது. (தொடரும்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




## ආයුබෝවන்
## ஆயுபோவன்
## வணக்கம்

இன்றைய பாடத்தில் அந்தரே பற்றி ஒரு சிறு கட்டுரையைத் தருகின்றோம்.

### අන්දරේ

ඉස්සර කාලයේ ලංකාවේ කවටයෙක් සිටියේය. ඔහුගේ නම අන්දරේය. අන්දරේ හොඳ කවටකම් කරයි. ඒනිසා රජතුමා සහ බිසව අන්දරේට බොහෝ කැමතිය. ඔහු නිතර රජ මාලිගාවට යයි. එහි දී ඔහු හොඳ කවටකම් කරයි.

### அந்தரே

இஸ்ஸர காலயே லங்காவே கவட்டயெக் சிடியேய. ஒஹுகே நம அந்தரேய. அந்தரே ஹொந்த கவட்டகம் கறய். ஏனிஸா ரஜதுமா சஹ பிஸவ அந்தரேட பொஹோ கெமதிய. ஒஹு நிதற ரஜ மாளிகாவட யய். எஹி தீ ஒஹு ஹொந்த கவட்டகம் கறய்.

### அந்தரே

முற்காலத்தில் இலங்கையில் ஒரு விகடன் இருந்தான். அவனுடைய பெயர் அந்தரே. அந்தரே நல்ல குறும்புகளைச் செய்வான். அதனால், அரசனும் அரசியும் அவனைப் பெரிதும் விம்புவர். அவன் அடிக்கடி அரண்மனைக்குப் போவான். அங்கே அவன் நல்ல குறும்புகளைச் செய்வான்.

#### பயிற்சி

**இடைவெளிகளை நிரப்புக**

1. ඉස්සර කාලයේ ........................................................ කවටයෙක් සිටියේය.
2. රජතුමා සහ බිසව.................................................... බොහෝ කැමතිය.
3. ඔහු හොඳ ....................................................................කරයි.

✱ **மற்றுமொரு சிறு கட்டுரையை நோக்குவோம்.**

### කාලයේ අගය

කාලය රන් හා සමානය. එමනිසා අපි කාලය අපතේ යැවීම හොඳ නැත. අපි උදේ පාන්දරින් අවදි වෙමු. ගෙවල් දොරවල් අතුපතු ගා පිරිසිදු කරමු. අපි වේලාසනින් මුහුණකට සෝදා ගනිමු. අපේ දිනචරියාව කඩිනමින් කර ගනිමු. දිනපතා කළ යුතු වැඩ එදිනම කර අවසන් කර ගනිමු.

### காலயே அகய

காலய ரன் ஹா சமானய. எமநிஸா அப காலய அபதே யெவீம ஹொந்த நெத. அபி உதே பாந்தரின் அவதிவெமு. கெவல் தொரவல் அதுபது கா பிரிசிது கறமு. வேலாசனின் மூன க(ட்)ட சோதா கனிமு. அபே தினச்சரியாவ கடினமின் கற கனிமு. தினபதா களயுது வெட எதினம கற அவசன் கறமு.

### காலத்தின் அருமை

காலம் பொன் போன்றது. ஆகையால், நாம் காலத்தை வீணாகக் கழிப்பது நன்றன்று. நாங்கள் அதிகாலையிலேயே துயில் எழுவோம். வீட்டைக் கூட்டித் துப்புரவு செய்வோம். நாங்கள் காலையிலேயே கை,கால், முகம் கழுவுவோம். எமது தினசரிக் கடமைகளை சுறுசுறுப் பாகச் செய்வோம். அன்றாட வேலைகளை அன்றே செய்து முடிப்போம்.

#### பயிற்சி

**சிங்களத்தில் மொழிபெயர்க்க.**

1. காலையிலேயே துயில் எழும்புவோம்.
..........................................................
2. அன்றாட வேலைகளை அன்றே செய்து முடிப்போம்.
..........................................................






**இறந்தகால தனி வாக்கியங்களில் (Past Simple Tense) காணப்படுகின்ற, செய்வினை (Active Voice) வாக்கியங்களை, செயற்பாட்டு வினை (Passive Voice) வாக்கியங்களாக மாற்றியமைக்கும் உதாரணங்களுடன் மேலும் இங்கே பயில்வோம்.**

(அ) அந்தக் காவற்காரன் திருடனைப் பிடித்தான்.
The watchman caught the thief.
(இறந்தகால தனி வாக்கியம்-செய்வினை)
(Active Voice of the Past Simple Tense)

(ஆ) அந்தத் திருடன் காவற்காரனால் பிடிக்கப்பட்டான்.
The thief was caught by the watchman.
(இறந்தகால தனி வாக்கியம்- செயற்பாட்டு வினை)
(Passive Voice of the Past Simple Tense)

**குறிப்பு:** மேற்படி வாக்கியங்களில் இடம்பெற்றுள்ள வினைச்சொற்களுக்குத் தரப்பட்டுள்ள அர்த்தங்களை மீண்டும் இங்கே அவதானிப்போம்.

✱ caught -பிடித்தான். (தனி வினைச்சொல்)
✱ was caught -பிடிக்கப்பட்டான். (கூட்டு வினைச்சொல்)

(இ) அந்த நாய் சுண்டெலியைத் துரத்தியது.
The dog chased the mouse.
(இறந்தகால தனி வாக்கியம்- செய்வினை)
(Active Voice of the Past Simple Tense)

(ஈ) அந்த சுண்டெலி நாயால் துரத்தப்பட்டது.
The mouse was chased by the dog.
(இறந்தகால தனி வாக்கியம்- செயற்பாட்டு வினை)
(Passive Voice of the Past Simple Tense)

(உ) சக்திமிக்க ஓர் எஞ்சின் ரயிலை இழுத்துச் சென்றது.
A powerful engine pulled the train.
(இறந்தகால தனி வாக்கியம்-செய்வினை)
(Active Voice of the Past Simple Tense)

(ஊ) அந்த ரயில் சக்தி மிக்க ஓர் எஞ்சினால் இழுத்துச் செல்லப்பட்டது.
The train was pulled by a powerful engine.
(இறந்தகால தனி வாக்கியம்- செயற்பாட்டு வினை)
(Passive Voice of the Past Simple Tense)

(எ) ரஞ்ஜினி இரவு உணவைச் சமைத்தாள்.
Ranjini cooked the dinner.
(இறந்தகால தனி வாக்கியம்- செயற்பாட்டு வினை)
(Active Voice of the Past Simple Tense)

(ஏ) இரவு உணவு ரஞ்ஜினியால் சமைக்கப்பட்டது.
The dinner was cooked by Ranjini.
(இறந்தகால தனி வாக்கியம்- செயற்பாட்டு வினை)
(Passive Voice of the Past Simple Tense)

(ஐ) அந்தக் கள்வன் சைக்கிள் ஒன்றைத் திருடினான்.
The thief stole a bicycle.
(இறந்தகால தனி வாக்கியம்- செய்வினை)
(Active Voice of the Past Simple Tense)


(ஒ) சைக்கிள் ஒன்று அந்தக் கள்வனால் திருடப்பட்டது.
A bicycle was stolen by the thief.
(இறந்தகால தனி வாக்கியம்- செயற்பாட்டு வினை)
(Passive Voice of the Past Simple Tense)

(தொடரும்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தெரிந்து கொள்வோம்

✱ பபிலோனிய நாகரிகம் நிலவிய நாடுகள் இன்று என்ன பெயர்களால் அழைக்கப்படுகின்றன?



**முன்னர் பாரசீகம் என அழைக்கப்பட்டது. இன்று ஈரான், ஈராக் நாடுகள் என அழைக்கப்படுகின்றது**

✱ ரொட்டி சுடும்போது, ஏன் சில இடங்களில் கறுப்பாகி விடுகின்றது?



**சில இடங்களில் 'காபன்' படிவதால் கறுப்பாகி விடுகின்றது**

✱ ஆசியாவின் 'குயில்' என அழைக்கப்படுபவர் யார்?

**லதா மங்கேஸ்கர்**

✱ இடைவெப்ப வலயப் புல்வெளிகள் பொருளாதார முக்கியத்துவம் பெற்றவை. இவை 5 கண்டங்களிலும் 5 பெயர்களால் அழைக்கப்படுகின்றன. அவை என்ன பெயர்களால் அழைக்கப்படுகின்றன?

| | | |
|---|---|---|
| அவுஸ்திரேலியா | - | டவுன்ஸ் |
| ஆபிரிக்கா | - | வெல்ட் |
| ஆசியா | - | ஸ்டெப்பீஸ் |
| தென் அமெரிக்கா | - | பம்பாஸ் |
| வட அமெரிக்கா | - | பிரயரீஸ் |



✱ பௌத்த சமயத்தைப் போதித்த 'சித்தார்த்தர்' எங்கே பிறந்தார்?



**கபிலவஸ்து எனும் இடத்தில் பிறந்தார்.**



✱ இலங்கை நாடாளுமன்றம் தியவன்ன ஓயவில் அமைந்துள்ளது.இக் கட்டடத்திற்கு வர்ணம் பூசி ஓவியங்கள் வரைந்தவர் யார்?

**மஞ்சு சிரி**


✱ AK 47 துப்பாக்கியின் படம் ஒரு நாட்டுத் தேசிய கொடியில் காணப்படுகின்றது. அது எந்த நாடு?



**கொங்கோ**

# இந்தியாவில் ஆளும் கட்சி சரிவு நிலையில்





இந்தியாவில் ஆளும் காங்கிரஸ் கட்சியின் மீது மக்கள் வைத்துள்ள அபிமானம் வீழ்ச்சி நிலையில் இருப்பதாக இந்தியாவின் 'இந்தியா டுடே' சஞ்சிகை தெரிவித்துள்ளது. மக்கள் மத்தியில் நடத்திய கருத்துக் கணிப் பின்படியே, இந்த உண்மை தெரிய வந்திருப்பதாகவும் அந்த சஞ்சிகை மேலும் தெரிவித்துள்ளது.

பொதுநலவாய விளையாட்டுப் போட்டிகளில் நடந்த ஊழல், பாதுகாப்புத்துறை சம்பந்தமான ஊழல் போன்ற காரணங்களினாலேயே ஆளும் கட்சியின் புகழ் சரிந்திருப்பதாகவும் கைத்தொலைபேசி அனுமதிப்பத்திரம் வழங்குதலில் இந்தியாவுக்கு பெருமளவு வருமான இழப்பு ஏற்பட்டமை, சுட்டிக்காட்டப்படுகின்றது.

இந்த ஊழல்களைக் காரணம் காட்டி பிரதான எதிர்க்கட்சியான பாரதீய ஜனதாக் கட்சி நாடாளுமன்ற அமர்வுகளைப் பகிஷ்கரித்து வருகின்றமையால் அன்றாட நாடாளுமன்ற நடவடிக்கைகளும் பெருமளவில் செயலிழந்து போயுள்ளன.

இத்தகைய நிலையில் நாட்டில் திடீர் தேர்தலொன்று நடைபெற்றால் தற்போதுள்ள ஆசனங்களிலிருந்து 40 ஆசனங்களை காங்கிரஸ் இழக்க வேண்டியிருக்கும் என்றும் குறிப்பிடப்படுகின்றது.

# ஈரான் ஜனாதிபதியின் கார் ஏல விற்பனையில்



ஈரான் ஜனாதிபதி மஹ்மூத் அஹமட் நிஜாத் 1977 ஆம் ஆண்டளவில் பாவித்த 504 பேர்ஜோ ரக கார் ஏலத்தில் விற்பனை செய்யப்படவுள்ளதாக செய்திகள் தெரிவிக்கின்றன.

மேற்படி ஏலவிற்பனையானது சர்வதேச ஏலச் சந்தைக்கு கொண்டு வரப்படவுள்ளமையால் அதன் ஆரம்ப விலை ஒரு மில்லியன் அ.டொலராக நிர்ணயிக்கப்பட்டுள்ளது.அநேகமாக, இந்த ஏல விற்பனையானது அரேபிய நாடொன்றில் நடைபெறும் என்று ஈரானின் தேசிய பத்திரிகையான ஐ.ஆர்.என்.ஏ.செய்தி வெளியிட்டது.

வெளிநாட்டவர்களும் இந்த ஏல விற்பனையில் கலந்துகொள்ள வாய்ப்புள்ளமையால் www.ahmadinejad-car.com என்ற முகவரியில் இதற்கென பிரத்தியேகமான இணையத்தளமொன்றும் ஏற்படுத்தப்பட்டுள்ளது.

வசிப்பிடம் இன்றி வறுமைகோட்டின் கீழ் வாழுகின்ற மக்களுக்கு 60,000 வீடுகளை அமைத்துக் கொடுப்பதற்கு தேவையான நிதி வளத்தைப் பெறுவதற்காகவே, இவ்வாறு ஜனாதிபதி நிஜாத்தின் கார் ஏலத்தில் விடப்படுவதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.




# டியுனேஸியா நாட்டின் ஜனாதிபதி தலைமறைவு



டியுனேஸியா நாட்டின் ஜனாதிபதியாக 23 வருடங்கள் பதவி வகித்து வந்த பென்அலி, மக்களின் எதிர்ப்பின் காரணமாக, நாட்டிலிருந்து தப்பியோடியுள்ளதாக செய்திகள் தெரிவிக்கின்றன.

வீதியோரத்தில் வியாபாரம் செய்து வந்த பட்டதாரியொருவரை அவ்விடத்தில் வியாபாரம் செய்ய விடாமல் அப்புறப்படுத்த பொலிஸார் முயற்சித்ததையடுத்து அவர் தனக்குத்தானே தீ மூட்டி மரணமடைந்தார்.

இதனை அடுத்தே மக்கள் அரசாங்கத்திற்கு எதிராக கோஷங்களை எழுப்பி ஆர்ப்பாட்டங் களை நடத்தத் தொடங்கினர். இதில் 50 இற்கும் மேற்பட்டவர்கள் கொல்லப்பட்டனர்.

இதனையடுத்து ஆர்ப்பாட்டம் உக்கிரமடைந்ததையடுத்தே, ஜனாதிபதி பென் அலி தனது பதவியை ராஜினாமா செய்துவிட்டு நாட்டிலிருந்து ரகசியமாக வெளியேறியுள்ளார்.

இவரது வெளியேற்றத்தை அடுத்து சபாநாயகர் ஃபொயிட் மெபாஸா இடைக்கால ஜனாதிபதியாகப் பதவியேற்றுள்ளார். அத்துடன், ஜனநாயகத்தைக் காப்பாற்ற முன்வருமாறு அவர் எதிர்க்கட்சிகளுக்கு அழைப்பு ஒன்றையும் விடுத்துள்ளார்.

**அற்லஸ் கேள்வி - 292**

**கேள்வி:** ஏலத்தில் விற்கப்படவுள்ள ஈரான் ஜனாதிபதியின் கார் எந்த ரகத்தைச் சேர்ந்தது?

சரியான விடை..............................

**உங்கள் விடையுடன்- பெயர், முகவரி, வகுப்பு, பாடசாலை முகவரி, வீட்டு முகவரி, அருகிலுள்ள நகரம், மாவட்டம் முதலிய விபரங்களைத் தபாலட்டையில் மாத்திரம் எழுதி அனுப்ப மறவாதீர்கள்.**

**அனுப்ப வேண்டிய முகவரி:**

**அற்லஸ் வழியே**
**உலகைக் காண்போம், கேள்வி - 292,**
**விஜய், த.பெ.எண் 2037, கொழும்பு.**

**போட்டி இல - 290 இன் சரியான விடை: 9 (ஒன்பது)**

**பரிசு பெறுவோர்**

தி.நிகாஷன்,
மண்டான் கரணவாய் மேற்கு,
கரவெட்டி.

நந்தினி,
14, சாகர வீதி, பம்பலப்பிட்டி,
கொழும்பு-04.

எம்.ஏ.எம்.ரஹ்மி,
439/6, களுகமுவ, கெலிஓய, கண்டி.

# தெரிந்து கொள்வோம்

✱ மனிதனுக்கு அடுத்ததாக எந்த மிருகம் புத்திக் கூர்மையுடையது என அடையாளம் காணப்பட்டுள்ளது.?



**டொல்பின்**

✱ இலங்கையின் நிறைவேற்று அதிகாரம் கொண்ட முதலாவது ஜனாதிபதி J.R. ஜெயவர்தன ஆவார். இலங்கையில் பதவி வகித்த முதலாவது ஜனாதிபதியின் பெயர் என்ன?



**வில்லியம் கோபல்லாவ**

✱ முதலாவது உலகக் கிண்ண கிரிக்கெட் போட்டி எப்போது எங்கு நடைபெற்றது. அதில் எந்தநாடு வெற்றி பெற்றது?



**1975 இல் இங்கிலாந்தில். மேற்கிந்திய தீவுகள் அணி வெற்றிபெற்றது.**

✱ ஆபிரிக்கா நாட்டைச் சேர்ந்த பெண் அமைச்சர் ஒருவர் சுற்றுச் சூழல் துறைக்குச் செய்த சேவைக்காக 2004 இல் நோபல் பரிசு பெற்றார். அவர் பெயர் என்ன?



**கென்யா நாட்டைச் சேர்ந்த 'வங்கரி மாதாய்'**

✱ அணிசேரா நாடுகளின் முதல் மகாநாடு எப்போது எங்கு நடைபெற்றது?

**பெல்கிரேட்டில்**

✱ பணம் செலுத்தி விண்வெளிக்குச் சென்ற முதல் முஸ்லிம் பெண் பயணி யார்?



**அனோசி அன்சாரி. ஈரானில் பிறந்தவர். ஐக்கிய அமெரிக்காவில் வாழ்பவர்.**

✱ 'காஸ் மொன்ட்' என்றால் என்ன?

**இரகசிய விண்வெளி வீரர்களைக் குறிக்கும் சொல்.**

**தொகுப்பு:- உடுவை பரந்தாமன்**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இலங்கை-மே.இ.தீவுகள் ஒருநாள் போட்டிகள்



## 31 ஆம் திகதி ஆரம்பம்




இலங்கை-மேற்கிந்திய தீவுகள் அணிகளுக்கிடையே யான ஒருநாள் போட்டித் தொடர் இம்மாதம் 31 ஆம் திகதி ஆரம்பமா கும் என்று அறிவிக்கப் பட்டுள்ளது.

மூன்று போட்டிகளைக் கொண்ட இந்தத் தொடரின் முதலாவது போட்டி 31 ஆம் திகதி அம்பாந்தோட்டை சூரியவெவ மைதானத்திலும், 2 ஆம், 3 ஆம் போட்டிகள் முறையே நான்காம், ஆறாம் திகதிகளில் கொழும்பு ஆர்.பிரேமதாச அரங்கிலும் நடைபெறும்.

இப்போட்டிகள் கடந்த டிசம்பர் மாதம் நடைபெறுவதாக இருந்தது. எனினும், சீரற்ற காலநிலை காரணமாக, இப்போட் டிகள் திகதி நிர்ணயிக்கப்படாமல் ஒத்தி வைக்கப்பட்டிருந்தது. அதற்கமையவே, தற்போது எதிர்வரும் 31 ஆம் திகதி இப்போட்டிகள் நடைபெறவுள்ளன.



## வாஸின் ஓய்வு...?

இலங்கை அணியில் முன்னர் இன்றியமையாத பந்து வீச்சாளராக இருந்த சமிந்தவாஸ் உலகக்கிண்ண கிரிக்கெட் போட்டிகளின் பின்னர் ஓய்வு பெறுவது குறித்து தீர்மானிக்கவுள்ள தாக அறிவித்துள்ளார்.

2009 ஆம் ஆண்டில் டெஸ்ட் போட்டிகளிலி ருந்து ஓய்வு பெற்றிருந்த சமிந்தவாஸ், ஒருநாள் போட்டிகளிலிருந்து ஓய்வு பெற்றிருக்கவில்லை. உலகக் கிண்ணப் போட்டி களில் கலந்து கொள்ளும் ஆர்வத்துடனேயே ஒருநாள் போட்டிகளிலிருந்து அவர் ஓய்வு பெற்றிருக்கவில்லை.

எனினும், அவருக்கு சர்வதேச போட்டிகளில் கலந்துகொள்வதற்கு அதிகமான வாய்ப்புக்கள் கிடைக்கவில்லை என்பது மட்டுமன்றி, உலகக்கிண்ண போட்டிகளுக்கென தெரி வாகியுள்ள அணியிலும் அவர் இடம்பெறவில்லை. இத்தகைய பின்னணியி லேயே சமிந்தவாஸ் ஒருநாள் போட்டிகளிலிருந்து ஓய்வு பெறும் தீர்மானத் திற்கு வரவுள்ளார் என்று கூறப்படுகின்றது.

## கிரிஸ் கெய்ல் கவலையில்....

ஐ.பி.எல் அணிகளுக்கு போட்டி யாளர்களைத் தெரிவு செய்கின்ற ஏலத்தில் மேற்கிந்திய வீரர் கிரிஸ் கெய்ல் எவராலும் வாங்கப்ப டாமை குறித்து அவர் கவலை வெளியிட்டுள்ளார். தனது ஆட் டத்திறன் பற்றி அனைத்து ஐ.பி. எல் உரிமையாளர்களுக்கும் நன் றாகவே தெரியும். எனினும், அவர்கள் எவருமே தன்னை ஏலத்தில் பெறாதது ஏன் என்று தெரியவில்லை என்று குறிப்பிட் டுள்ளார்.

இதேவேளை, கிரிஸ் கெய்ல்லை ஐ.பி.எல் அணிகள் வாங்காமைக்கு வேறு காரணமும் கூறப்படுகின்றது.

அதாவது, ஐ.பி.எல் போட்டிகள் நடைபெறுகின்ற நாட்களில் மேற்கிந்திய தீவுகளில் தேசிய அணியில் விளையாட வேண் டியிருக்கும். எனவே, இத்தகைய நிலையில் ஐ.பீ.எல் போட்டிகளில் முழுமையாக அவரால் பங்குபெற முடியாத காரணத்தினாலேயே எந்தவொரு அணியும் அவரைத் தெரிவு செய்ய முன்வரவில்லை என்று கூறப்படுகின்றது.

## சூதாட்ட விசாரணை தீர்ப்பு பெப்: 5 இல்....







கிரிக்கெட் சூதாட்டத்தில் ஈடுபட்டதாக குற்றஞ்சாட்டப்பட்ட பாகிஸ்தான் அணியினர் மீதான விசாரணைகளின் தீர்ப்பு பெப்ரவரி 5 ஆம் திகதியே நடைபெறும் என்று அறிவிக்கப்பட் டுள்ளது.

மொஹமட் அமிர், மொஹமட் ஆசிப், சல்மன் பட் ஆகியோர் மீதே சூதாட்டக்குற்றச்சாட்டு சுமத்தப்பட்டு வழக்கு விசாரணைகள் நடைபெற்று வந்தன. இவர்கள் மீதான விசாரணை கள் நடைபெற்றபோது, மூன்று பேரும் வழக்கிற்கு சமூகம் தந்திருந்தனர். இதனையடுத்தே வழக்கு விசாரணைகள் முடிவடைந்ததை யடுத்து வழக்கின் தீர்ப்பு பெப்ரவரி 5 ஆம் திகதி வழங்கப்படும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

## ஜயசூரியவை சமன் செய்தார் சச்சின்




உலக அளவில் அதிக எண்ணிக்கையிலான ஒரு நாள் போட்டிகளில் கலந்துகொண்டவர் என்ற சாதனையையும் சச்சின் டென்டுல்கர் சமன் செய்துள்ளார்.

ஏற்கனவே இந்த சாதனைக்குரியவராக இருந்தவர் இலங்கை அணியின் சனத் ஜயசூரிய ஆவார். அவர் 444 ஒரு நாள் போட்டிகளில் கலந்துகொண் டுள்ளார். அவ்வாறே, கடந்த சில தினங்களுக்கு முன்னர் தென் ஆபிரிக்க- இந்திய அணிகளுக்கிடையே நடைபெற்ற ஒரு நாள் போட்டியில் பங்குபற்றியதன் மூலமே ஜயசூரியவின் சாதனையை டென்டுல்கர் சமன் செய்துள்ளார்.

இருப்பினும் இன்னுமொரு போட்டியில் பங்குபற்றியிருந்தால் சாதனையை முறியடித்தவர் என்ற பெரு மையை அவர் பெற்றிருப்பார். ஆனால், கையில் ஏற்பட்ட உபாதையின் காரணமாக, டென்டுல்கரை ஓய்வில் இருக்குமாறு மருத்துவர்கள் ஆலோசனை வழங்கியுள்ளமையால் அந்த வாய்ப்பு அவருக்கு தாமதப்பட்டுள்ளது.

## 'பாட்டா' வினா - உ வெற்றி பெற்றவர்கள்....

- ஏ.வத்சலா, 72/C3 கந்தவல வீதி, இரத்மலானை.
- ஹரினி முரளீதரன், 125/1B, எழுத்தூர், மன்னார்.
- அ.வாசவி, 620, நாவலர் வீதி, அரியாலை, யாழ்ப்பாணம்.
- ஏ.எம்.ஹுதைஃபா, 125, சன்கம, சீனக்குடா.
- எம்.எம்.மொஹமட், 45/6 கல்பொத்த, வெலிகம.
- இ.கரன், சுழிபுரம் மத்தி, சுழிபுரம், யாழ்ப்பாணம்.
- டி.டிவாகர், 47/32B, ராஜசிங்க மாவத்தை, அவிசாவளை.
- எம்.ஆர்.எம்.ரிகாஸ், N/7 சிரிபோபுர, அம்பாந்தோட்டை.
- கே.ஹாதிர் மொஹமட், 32, ராசகல்ல, பலாங்கொடை.
- என்.சஹ்னாஸ் பேகம், 12, ரேஸ்கோஸ் வீதி, பதுளை.

## ஐ.பி.எல். இல் 74 போட்டிகள்




இம்முறை நடைபெறவுள்ள ஐ.பி.எல்.போட்டிகளில் எல்லாமாக 74 போட்டிகள் நடைபெறும் என்று அறியவருகின்றது.

2008 ஆம் ஆண்டு ஆரம்பிக்கப்பட்ட ஐ.பி.எல்.போட்டியில் இறுதியாக எட்டு அணிகளே பங்குபற்றியிருந்தன. எனினும், இம்முறை கொச்சி அணியும், பூனே அணியும் புதிதாக ஐ.பி.எல்.பட்டியலில் சேர்க்கப்பட்டுள்ள மையால் மொத்தமாக பத்து அணிகளாக எண்ணிக்கை அதிகரிக்கப்பட்டுள்ள துடன் ஒட்டுமொத்தப் போட்டிகளின் எண்ணிக்கை 74 ஆக அதிகரித்துள்ளது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# கல்வி
## முகாமைத்துவம் - 39
### கற்றலுக்கான ஆலோசனைகள்




# மாணவர்களிடையே நல்லொழுக்கம்

**ஒழுக்கம் என்பது மனிதர்களுக்கு அத்தியாவசியப்படுகின்ற முதன்மைக்குரிய அம்சங்களில் ஒன்றாகும். அத்துடன், இது மாணவ சமுதாயத்திற்கு மிக மிக அவசியமானதுமாகும். நல்லொழுக்கம் மானத்தை மறைக்கும் ஆடை போன்றதாகும். நல்லொழுக்கமுடைய மாணவனையே சமுதாயம் விரும்புகின்றது. ஒரு மாணவரிடத்தில் கல்வியும் நல்லொழுக்கமும் இணையும் போது, அவருக்கு சமுதாயத்தில் சிறந்த அந்தஸ்து வழங்கப்படுகின்றது.**

பாடசாலையில் கல்வி கற்கும் மாணவர்கள் ஒழுக்கத்தில் சிறந்து விளங்க வேண்டும். இல்லையேல் அது அந்த மாணவருக்கு மட்டுமன்றி, அவரது பெற்றோருக்கும் அவர் கல்வி கற்கின்ற பாடசாலைக்கும் இழுக்கைப் பெற்றுக் கொடுத்துவிடும். ஒருவர் கற்ற கல்வியின் சிறப்பானது அவரிடம் காணப்படும் ஒழுக்கப் பண்பை அவதானித்தே அளவீடு செய்யப்படுகின்றது. அவ்வாறே, ஒரு மாணவரிடம் சிறந்த ஒழுக்கம் காணப்படவில்லையேல், அவர் கற்றுக்கொண்ட அறிவு பூச்சியமாகவே கொள்ளப்பட வேண்டும். ஆனால், இன்றைய மாணவ சமுதாயத்தை நோக்கினால் சிலர் ஒழுக்கநெறியிலிருந்து தவறும் தன்மையே காணப்படுகின்றது. இதற்கு என்ன காரணம்? என நோக்கினால், இவர்களை வழிநடத்தும் ஒரு சில பெற்றோர்களே காரணமாக இருக்கின்றனர் என்பது தெரிய வருகின்றது.

மனித வாழ்க்கையில் பல்வேறு பருவங்கள் வந்து போகின்றன. இப்பருவங்களில் கட்டிளம் பருவமான (Teenage) 13-19 வயது வரையான காலப் பகுதி மிகவும் குழப்பகரமான பருவமாகும். இந்த வயதுப் பிள்ளைகளிடம் பெற்றோர்கள் முன்னெச்சரிக்கையுடன் இருப்பார்களானால், இந்தப் பருவ மாணவர்கள் நெறிப்பிறழ்விற்கு ஆளாக மாட்டார்கள். இன்றைய காலத்தில் நாகரிக வளர்ச்சி எனும் பெயரில் பல்வேறு வகையில் துஷ்பிரயோகங்கள் இடம்பெறுகின்றன.

பாடசாலை நேரம் தவிர்ந்த ஏனைய வேளைகளில் மாணவர்கள் பல்வேறு தவறான வழிகளில் ஈடுபடுகின்றனர் என்றும் ஒழுக்கநெறி தவறியவர்களாக இனங் காணப்படும் சந்தர்ப்பத்தில் சமூகத்தில் அவர்களை குற்றவாளிகளாக நிரூபிக்கக் கூடியவாறான நிகழ்வுகளும் இன்று ஏராளமாகக் காணக்கூடியதாக இருக்கின்றன. ஒரு புறம் பெற்றோர்களே, இதற்கு முக்கிய பொறுப்புதாரிகளாக இருக்கின்றனர். அவர்களின் அக்கறையின்மையாலும் கவனக்குறைவினாலுமே பிள்ளைகள் இந்நிலைக்கு ஆளாகின்றனர். ஆகவே, பெற்றோர்களே! இந்நிலையை மாற்றியமைக்க வேண்டும். ஒவ்வொரு பெற்றோரும் தங்களது பிள்ளைகளின் கட்டிளம் பருவத்தினை அனுமானித்து-அவர்களது உணர்வுகளைப் புரிந்து அவர்களை சீரான வழியில் வழிநடத்த சிறந்த வழிகாட்டிகளாக இருக்க வேண்டும். அத்துடன், பிள்ளைகளைக் கண்காணித்து, அவர்களை நல்ல விடயங்களில் ஈடுபடுத்துவதற்கு உளவியல் ரீதியான அறிவு பெற்றோருக்கு அவசியம் இருக்க வேண்டும்.

மேலும், இன்றைய மாணவர்கள் நல்லொழுக்கம் உடைய வர்களாக விளங்க ஆசிரியர்களும் பெற்றோர்களும் உறுதுணையாக இருக்க வேண்டும். இது பெற்றோர்கள், ஆசிரியர்களது கடமையாக இருக்கும் அதேவேளை, தங்களது ஒழுக்கத்தைத் தாமே பேணுவது மாணவர்களது முக்கிய கடமையாகும். ஏனெனில், ஆசிரியர்களாலும் பெற்றோர்களாலும் ஒழுக்கம் கற்றுக் கொடுக்கப்படக் கூடியதே தவிர அதைச் செயற்பாட்டில் கொண்டுவருவது மாணவர்களது கடமையே. மாணவர்களே! கல்வியை கற்க வேண்டும். அதேபோல், அதனுடன் சேர்ந்து ஒழுக்கத்தையும் கற்றுச்செயற்பட வேண்டும். ஏனெனில், கல்வியானது ஒழுக்கத்துடன் இணையும்போதே, அது பூரணமான கல்வியாக அமைகின்றது.



எனவே, எத்தகைய சந்தர்ப்பத்திலும் கல்விக்காக ஒழுக்கத்தையோ, ஒழுக்கத்திற்காக கல்வியையோ துறத்தல் கூடாது. நவநாகரிக உலகில் கல்வியானது அபிவிருத்தியடைந்து வரும் அதேவேளை, அதனுடன் சேர்ந்து ஒழுக்கத்தையும் நிலைநாட்டுதல் ஒவ்வொரு மாணவரினதும் தலையாய கடமையாகும்.





(தொடரும்)

-எம்.ஏ.எஃப். சப்ரானா

# 2010, தரம் 5 புலமைப்பரிசில் பரீட்சையில் சித்தியடைந்தோர்



எம்.வஸீரா, 154 புள்ளிகளைப் பெற்றுள்ளார். இவர், க/தெநு/பாத்திமா பாலிகா மு.ம. வித்தியாலய மாணவியாவார்.



வத்தளை றோ.க.த.க. வித்தியாலயத்தில் கல்வி கற்கும் கே.தனுஷ்காந்த், 157 புள்ளிகளைப் பெற்றுள்ளார். இவர், கிருஷ்ணகுமார்-செந்தாமரை தம்பதியரின் புதல்வராவார்.



எஃப். அஸ்மா, 154 புள்ளிகளைப் பெற்றுள்ளார். இவர், க/தெநு/பாத்திமா பாலிகா மு.ம.வித்தியாலய மாணவியாவார்.



கா/தடல்ல அல்-முபாரக் வித்தியாலயத்தைச் சேர்ந்த சப்னா பானு, 155 புள்ளிகளைப் பெற்றுள்ளார். இவர், அஸ்வர்-நுஸ்ஹா தம்பதியரின் புதல்வியாவார்.



க/மொன்டிகிறிஸ்டோ இல. 1 தமிழ் வித்தியாலயத்தில் கல்வி கற்கும் ந.நிலுக்சி, 155 புள்ளிகளைப் பெற்றுள்ளார். இவர், பாலகிருஷ்ணன்-இராஜலெட்சுமி தம்பதியரின் புதல்வியாவார்.



சண்டிலிப்பாய் இந்துக் கல்லூரியில் கல்வி கற்கும் வ.டிலானி, 153 புள்ளிகளைப் பெற்றுள்ளார்.



களு/அல் பாஸியதுல் நஸ்ரியா மு.ம.வித்தியாலயத்தைச் சேர்ந்த எஃப். நப்லா, 162 புள்ளிகளைப் பெற்றுள்ளார். இவர், நிஸ்தார்-மின்னா தம்பதியரின் புதல்வியாவார்.



இரா.வதுசனா, 149 புள்ளிகளைப் பெற்றுள்ளார். இவர், சண்டிலிப்பாய் இந்துக் கல்லூரி மாணவியாவார்.



க/எனசல்கொல்லை மத்.கல்லூரி மாணவி எஃப். ருஸ்னா, 162 புள்ளிகளைப் பெற்றுள்ளார்.



த.சங்கவி, 148 புள்ளிகளைப் பெற்றுள்ளார். இவர், சண்டிலிப்பாய் இந்துக் கல்லூரி மாணவியாவார்.



வவுனியா த.ம.ம.வித்தியாலயத்தில் கல்வி கற்கும் சி.சுஜீவன், 151 புள்ளிகளைப் பெற்றுள்ளார். இவர், சிவபாதம்-தேன்மொழி தம்பதியரின் புதல்வராவார்.



எஃப்.சஹ்ரா, 160 புள்ளிகளைப் பெற்றுள்ளார். ஹொரவப்பொத்தானை மு.ம.வித்தியாலயத்தில் கல்வி கற்கும் இவர், அகமது பாவஸா-சித்தி நிஸா தம்பதியரின் புதல்வியாவார்.



எஃப். நுஹா, 150 புள்ளிகளைப் பெற்றுள்ளார். பூலாச்சேனை மு.வித்தியாலயத்தில் கல்வி கற்கும் இவர், தாஸீம்-ஹுஸைனா தம்பதியரின் புதல்வியாவார்.



நு/அல்-மின்ஹாஜ் தேசிய பாடசாலையில் கல்வி கற்கும் ஏ.ருகா, 153 புள்ளிகளைப் பெற்றுள்ளார். இவர், நிஸாட் அஹமட்- ஹிமாயா தம்பதியரின் புதல்வியாவார்.



கம்மந்தளுவை இருமொழிப் பாடசாலையைச் சேர்ந்த எம்.ருஸ்தி, 163 புள்ளிகளைப் பெற்றுள்ளார்.



கம்மந்தளுவை இருமொழிப் பாடசாலையைச் சேர்ந்த எஃப். மின்ஹா, 144 புள்ளிகளைப் பெற்றுள்ளார். இவர், மின்னதுல்லா-சகீலா தம்பதியரின் புதல்வி ஆவார்.



கிரி/சுலைமானியா முஸ்லிம் வித்தியாலயத்தில் கல்வி கற்கும் மாணவி ஹுஸ்னா, 149 புள்ளிகளைப் பெற்றுள்ளார். இவர், அப்துல் ஹாதி-ஹஸ்னியா தம்பதியரின் புதல்வியாவார்.




நு/நல்லாயன் மகளிர் கல்லூரியைச் சேர்ந்த மாணவி சு.திலக்ஷனா, 150 புள்ளிகளைப் பெற்றுள்ளார். இவர், சுப்ரமணியம்- நேசமலர் தம்பதியரின் புதல்வியாவார்.



*க/வ/கந்தகட்டி த.ம.வித்தியாலயத்திலிருந்து சித்தியடைந்த யோ.ஹரீந்ரன் (160 புள்ளிகள்), ம.சுவேதிகா (157 புள்ளிகள்), ம.பிரபாளினி (153 புள்ளிகள்) ஆகிய மாணவர்கள் தமது அதிபர் பொன்னையா ராஜகோபால் மற்றும் வகுப்பாசிரியை பொ.ஜெயசித்ரா ஆகியோருடன் காணப்படுகின்றனர்.*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## இடைவெளிகளை நிரப்புக 1



## பொருத்தமான கூட்டப்பெயருடன் இணைக்க 5

| | |
|---|---|
| 1. திராட்சை | 1. தொடர் |
| 2. கல் | 2. கொத்து |
| 3. மலை | 3. குலை |
| 4. சாவி | 4. படை |
| 5. வீரர்கள் | 5. குவியல் |

## எத்தனை உள்ளன? 3



## சரியான சொல்லில் கீறிடுக 4

1. நாளாந்தம் - (dali/daily/daly)
2. தரம் - (grade/grate/grad)
3. தெற்கு - (south/sauth/soudh)
4. மக்கள் - (pupil/peple/people)
5. கடிகாரம் - (clok/klock/clock)

## கீழுள்ள சொற்களை எழுத்துக் கூட்டத்தினுள் இனங்கண்டு, நிறந்தீட்டுக 2



| | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| Y | Q | X | N | O | P | E | T | V | I |
| B | K | R | P | E | K | O | K | G | T |
| M | C | P | C | D | L | O | Y | V | M |
| H | I | F | E | C | B | K | A | T | D |
| H | Z | L | A | O | E | G | L | L | J |
| F | Z | Y | N | W | C | H | Y | D | A |
| H | R | B | U | L | K | U | V | P | O |
| V | E | O | K | I | W | C | L | A | N |
| O | O | V | G | H | A | X | Q | B | I |
| O | X | A | F | E | T | X | Y | Z | D |







HIPPO FROG
FLY ELK
OWL KOALA





தயாரிப்பு - நுஸ்பா கௌஸ்

1, 2, 3, 4, 5 என இலக்கமிடப்பட்டுள்ள பகுதிகளுக்கான விடைகளை தபால் அட்டையில் மாத்திரம் ஒட்டி 2011.02.02ஆம் திகதிக்கு முன்னர் எமக்குக் கிடைக்கக்கூடியவாறு அனுப்பி வையுங்கள்.

**அற்லஸ் அறிவுக்கு விருந்து 297**
**விஜய் - த.பெ.எண் 2037, கொழும்பு**

## அறிவுக்கு விருந்து 294 விடைகள்

**போட்டி: 01**




**போட்டி: 02**




**போட்டி: 04**

அமெரிக்க நாட்டின் ஜனாதிபதியாக இருந்த ஆபிரகாம் லிங்கன் மிகவும் உயரமான மனிதர். ஒருமுறை நண்பர்கள் மத்தியில் அவர் வேடிக்கையாகப் பேசிக்கொண்டிருந்த போது, மனிதனின் உடல் உறுப்புகள் எந்த அளவுக்கு நீள மாக இருக்க வேண்டும் என்ற பேச்சு வந்தது. "ஒரு மனித னுக்குக் கால்கள் எந்த அளவுக்கு நீளமாக இருக்க வேண்டும் என்பது பற்றி எனக்குத் தெளிவான கருத்து உண்டு" என்றார் லிங்கன். "என்ன கருத்து?" என நண்பர்கள் ஆவலு டன் கேட்டனர். "சாதாரணமாக இடுப்பில் இருந்து தரை யைத் தொடுகின்ற அளவுக்குக் கால்கள் இருந்தால் போதும்" என்றார் லிங்கன். லிங்கனின் அந்த நகைச்சுவையான பதிலைக்கேட்டு நண்பர்கள் வாய்விட்டுச் சிரித்தார்கள்.

**போட்டி: 05**

1. இத்தாலியர்கள் 2. மலேசியா 3. அவுஸ்திரேலியா

## அற்லஸ் அறிவுக்கு விருந்து - 294 பரிசுபெறும் அதிர்ஷ்டசாலிகள்...

**போட்டி: 01**
சாம் சேனுஜன்,
26, பாரதிபுரம், கன்னியா வீதி, திருகோணமலை.

**போட்டி: 02**
எஃப்.ஷம்லா, 206, கண்டி வீதி, கம்பளை.

**போட்டி: 03**
எஸ்.ஜமன் சமா,
47/3A, 5 ஆம் குறுக்குத் தெரு,
6 ஆம் ஒழுங்கை, புத்தளம்.

**போட்டி: 04**
அ.தில்ஷானி,
96, டிக்கிரிய, ரத்தோட்டை வீதி, களுதாவளை.

**போட்டி: 05**
இரா.தனுஹரன்,
39, விதான்ஸ் வீதி, சுண்டிக்குளி.

**பாராட்டுப் பெறுவோர்:**

* அஞ்சனா இராஜகுமாரன், யாழ்ப்பாணம்.
* பி.செரீனா, பண்டாரவளை.
* எம்.ஏ.எம்.ஹசன், கம்பளை.
* சி.அபிலாஷன், சாவகச்சேரி.
* எஸ்.எம்.சிறாஜ், இறக்குவானை.
* லோகநாதன், அம்பேவெல.
* சை.ளுஹ்பத் அஹமத், மருதமுனை-02.
* எம்.டபிள்யூ.எம்.நஜாத், பொல்கஹவெல.
* க.டிலக்ஷன், அக்கரைப்பற்று-09.
* ஹ.ரொஷான், குருதெனிய.

## விஜய் வாசகர் மடல்



உன்னால் நான் பெற்ற அறிவு அளவில்லாதது. 'சீபா' பற்றிய ஆக்கம் எனது புவியியல் பாடத்தில் கணிப்பீடு ஒன்றிற்கு மிகவும் உதவியது. 'வேப்பமரத்தடிப் பேய்' தொடர்கதை மிகவும் சுவாரஸ்யமானது. 'ஒல்லாந்தர் வரலாறு' எனது வரலாற்றுப் பாடத்திற்கு பேருதவியாக இருக்கின்றது.

**-எம்.ஹாஷீர், முறுதகஹமுல.**

நீ பிரசுரிக்கும் அனைத்து விடயங்களும் பாராட்டத்தக்கவை. அதிலும், 'விளையாட்டுச் செய்திகள்', 'நிலவைப் பற்றிய விசித்திரத் தகவல்கள்' போன்றவை நன்றாக இருந்தன.

**-அஃபா மொஹமட், தக்கியா வீதி, பலகத்துறை.**

'ஒரங்குட்டான்' பற்றிய ஆக்கம், 'வேப்பமரத்தடிப் பேய்', 'இராமாயணம்' போன்றவை என்னை பெரிதும் கவர்ந்தன. 'நிலவு பற்றிய விசித்திரத் தகவல்கள்' சுவாரஸ்யமாகவும் பயனளிக்கக்கூடியதாகவும் அமைந்திருந்தது.

**-பி.ஷாருக்ஷனா, சேலம் பிரிஜ், நாவலப்பிட்டி.**

நீ தாங்கி வந்திருந்த அனைத்து ஆக்கங்களும் அருமை. அதிலும் 'நிலவு பற்றிய விசித்திரத் தகவல்கள்', 'குளிர்கால மாற்றங்கள்', 'சீபா', 'பயணம் செய்வோம்; கவனம் கொள்வோம்' போன்ற ஆக்கங்கள் சிறப்பானவை.

**-வி.அனுஷன், கோவில் குஞ்சுக்குளம், பாலமோட்டை.**




'ஹை ஹீல்ஸ் பாதணிகள்', 'சீபா', '11 கி.மீ பறக்கும் பறவை', 'துருவங்கள் பற்றி அறிவோம்', 'பயணம் செய்கையில் கவனத்தில்கொள்ள வேண்டியவை', 'குளிர்கால மாற்றங்கள்' போன்ற ஆக்கங்களை ஒவ்வொன்றாகத் தெரிவு செய்து வாசித்து வந்த என்னை, தொடர்ந்து ஏனைய ஆக்கங்களையும் வாசிக்கத் தூண்டினாய். நீ என்றும் வாழ்க!

**-தி.ஜோதிபாலா, கண்டி வீதி, தேக்கவத்த.**

ஒவ்வொரு வாரமும் நீ தாங்கி வருகின்ற ஆக்கங்களை வாசித்து உன்னில் மூழ்கிட நாம் ஆவலோடு காத்திருக்கின்றோம். அற்புதமான தகவல்களைத் தாங்கி வந்து நீ அசத்தும் பாணி என்றும் வியக்க வைக்கிறது. நீ என்றும் நிலைத்திட வாழ்த்துகின்றேன்.

**-ஹுஸைனா பாரி, சீனங்கோட்டை, பேருவளை.**

சாதாரண தரப் பரீட்சை முடித்துவிட்டு வீட்டில் இருக்கும் எனக்கு, சிறந்த ஆசானாகவும் உற்ற தோழனாகவும் நல்ல வழிகாட்டியாகவும் நீ இருப்பது எனது கல்விப் பயணத்தை தடையின்றித் தொடர வழிவகுக்கின்றது. உன்னில் பிரசுரமாகியிருந்த ஆக்கங்கள் யாவும் பயன்தரக் கூடியவையே!

**-நிஜாம் மொஹிடீன், உளுக்கப்பள்ளம், புத்தளம்.**

'பயணம் செய்வோம்; கவனம் கொள்வோம்' எனும் ஆக்கம் பாடசாலை மாணவர்களாகிய நாம் போக்குவரத்துச் செய்யும்போது கவனத்தில்கொள்ள வேண்டியவற்றை அழகாகத் தெரியப்படுத்தியது. 'செனகல்' எனும் நாட்டைப் பற்றி உன்னால் அறிந்துகொண்டேன். 'துருவங்கள்', 'குளிர்கால மாற்றங்கள்' போன்ற ஆக்கங்கள் குளிர்கால நிலைமைகளை உணரச் செய்ததோடு, சுவாரஸ்யமாகவும் இருந்தது.

**-டே.மதியுகா, 'க்ளோரியஸ்', செ‌ன். பீற்றர்ஸ் ஒழுங்கை, கொழும்பு.**

இந்த இதழில் (26.01.2011) வெளியாகியிருக்கும் ஆக்கங்கள் குறித்து உங்கள் விமர்சனங்களை தபாலட்டையில் மாத்திரம் எழுதி எமக்கு அனுப்பி வையுங்கள்.

அனுப்ப வேண்டிய கடைசித் திகதி 02.02.2011.

**அனுப்ப வேண்டிய முகவரி:**



**வாசகர் மடல், 'விஜய்' த.பெ.எண் 2037, கொழும்பு.**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நினைவாற்றலை வளர்க்கும் கலை



படித்ததை நினைவில் வைக்க முடியவில்லை என சில மாணவர்கள் கருதுகிறார்கள். அத்தனை செய்திகளையும் மூளையில் போட்டு வைத்தால் அது எவ்வாறு தாங்கிக்கொள்ளும்?'' என்றும் சிலர் கருத்துக் கூறுகிறார்கள். ஆனால், 'மனித மூளைக்கு மிக அபாரமான திறமை இருப்பதாக ஆய்வுகளின்மூலம் அறிவியல் அறிஞர்கள் கண்டறிந்துள்ளனர். அந்தவகையில் மனித மூளையில் இரண்டு 'குயிண்டிலியன்' அளவுக்கு சின்ன சின்ன செய்திகளை பாதுகாப்பாகச் சேமித்து வைக்க முடியும் என்று ஆராய்ந்து கூறியுள்ளனர்.

அதாவது, 'ஒன்று' என்ற எண்ணிற்கு பின்னர் 18 பூஜ்யங்களைச் சேர்த்தால் எவ்வளவு மதிப்பு வருமோ அதுதான் 'குயிண்டிலியன்' என்பதன் மதிப்பாகும். அதாவது, மனித மூளையின் சக்தி 40 விதமான மொழிகளை நினைவில் கொள்ளும் அளவுக்கு 'அபாரசக்தி' கொண்டது.

இவ்வாறான அதிக கொள்ளளவு கொண்ட மனித மூளையில் தேவையான அளவு தகவல்களைத் திரட்டி, சேமித்து பாதுகாப்பாக முறைப்படி வைக்காததுதான் இன்றைய மாணவ மாணவிகளின் குறைபாடாகும்.

ஒரு நூலகத்தில் பலவிதமான புத்தகங்கள் உள்ளன. ஆனால், அந்தப் புத்தகங்கள் ஒழுங்கான முறையில் அடுக்கி வைக்கப்படவில்லையாயின், நமக்கு வேண்டிய புத்தகத்தை உடனே கண்டுபிடிக்க இயலாது போய்விடுகின்றது.

ஆகவே, தேவையான புத்தகத்தை எளிதான முறையில் கண்டறிவதற்கு 'புத்தகப் பட்டியல் அடங்கிய குறிப்பேடு அவசியம் தேவைப்படுகிறது''



இந்த நூலகம் போலவே நமது மூளையும் ஒரு 'ஒழுங்கில்லாத நூலகம்' தான். தேவையான புத்தகங்களை எளிதில் கண்டுபிடிக்க உதவும் குறிப்பேடு போன்று மூளையில் குவிந்து கிடக்கும் தகவல்களையும் எளிதில் கண்டுபிடிக்க குறிப்பேடு தேவை.

மூளையில் குவிந்து கிடக்கும் தகவல்களை எளிதில் நினைவில் கொள்ள நமது மூளைக்கு நன்கு பயிற்சி கொடுக்க வேண்டும். குறிப்பிட்ட செய்திகளை, குறிப்பிட்ட நேரத்தில் நினைவில் கொண்டுவரும் 'நினைவாற்றல் கலையை' வளர்த்துக் கொள்ள வேண்டும்.

நினைவாற்றலை வளர்த்துக்கொள்வதற்கு பல வழி முறைகள் உள்ளன. அவற்றில் ஒன்றுதான் 'தொடர்பு ஏற்படுத்தல் முறை' ஆகும்.

பொதுவாக நமது மூளையில் சேமித்து வைத்திருக்கும் தகவல்களைப் புதிய தகவல்களோடு தொடர்புபடுத்திப் பார்க்கும்பொழுதுதான் நாம் கற்ற பாடம் நினைவில் நிற்கின்றது.

அறிவைப் பெருக்குவதற்கு 'தொடர்புபடுத்தல்' மிகவும் உறுதுணையாக அமைகின்றது.

அந்தவகையில் ஒரு விடயத்தை நினைவில் வைத்துக்கொள்ள அந்த விடயத்தோடு, தொடர்புள்ள பல விடயங்களைத் தொடர்புபடுத்திப் பார்க்கும்போது அந்த விடயம் நினைவில் நின்றுவிடும். இதுவே நினைவாற்றலை வளர்க்கும் கலையின் ஓர் அம்சமாகும்.



# புராதன பௌத்த ஆலய சிதைவுகள்

ஆப்கானிஸ்தானில் தொல்பொருள் ஆய்வாளர்கள் கி.பி 5 ஆம் நூற்றாண்டைச் சேர்ந்த புராதன பௌத்த ஆலய சிதைவுகளைக் கண்டுபிடித்துள்ளனர். காபூலுக்கு கிழக்கே தலிபான் தீவிரவாதிகள் போராட்டம் நடத்திவரும் பகுதியிலேயே இந்த சிதைவுகள் கண்டுபிடிக்கப்பட்டுள்ளன.

பௌத்த ஆலயம், நினைவுத் தூபி, அழகிய அறைகள், பெரிய சிறிய சிலைகள், சித்திரங்கள், தங்க நாணயங்கள் என்பன இந்தச் சிதைவுகளில் அடங்குமென கூறுகின்றார்.




ஆப்கான் தொல்பொருள் ஆய்வுக்குழுவின் தலைவர் முஹம்மட் ரசூலி கூறினார். கண்டுபிடிக்கப்பட்டுள்ள சிதைவுகள் 5 ஆம் நூற்றாண்டைச் சேர்ந்தவையாக இருந்தபோதிலும் இவற்றில் சில அதற்கு முன்னைய காலத்தைச் சேர்ந்தவை போல் தெரிவதாகவும் அவர் கூறுகின்றார்.

சுமார் 12 கிலோமீற்றர் தூரம் வரை தொடரும் இந்த அகழ்வாராய்ச்சிப் பகுதி காபூலுக்கு கிழக்கே லோகர் மாகாணத்தில் அய்னாக் (Aynak) என்னும் பிராந்தியத்தில் அமைந்துள்ளது.

கடந்த வருடம் அரசாங்கம் இப்பகுதியில் தொல்பொருள் ஆய்வு நடவடிக்கைகளை மேற்கொள்வதற்கு முன்னர் கடத்தல்காரர்கள் இங்கிருந்து சில நினைவுச் சின்னங்களை திருடியும் நாசப்படுத்தியும் உள்ளனர் என்றும் ரசூலி கூறினார்.

1996 ஆம் ஆண்டு முதல் 2001 ஆம் ஆண்டு வரையிலான ஐந்து வருட காலப்பகுதியில் தலிபான்கள் நாட்டை தம் கட்டுப்பாட்டில் வைத்திருந்தபோது, பாமியன் சிலைகள் நாசம் செய்யப்பட்டமை குறிப்பிடத்தக்கது.



# பற் தூய்மையின் அவசியம்



நாம் எமது பற்களின் பெருமை பற்றிப் பேசிக்கொண்டே போகலாம். நாம் பேசுவதற்கும் சிரித்தால் அழகாகத் தெரிவதற்கும் உணவை அரைத்து வயிற்றுக்குள் அனுப்புவதற்கும் இந்தப் பற்கள் உதவி செய்கின்றன. அப்படிப்பட்ட பற்களை நாம் தூய்மையாக வைத்திருப்பது மிக அவசியமாகின்றது. காரணம், பல நோய்கள் உண்டாவதற்குப் பற்களும் காரணமாக அமைவதேயாகும்.

மனித உடலில் இரத்தம் ஓடாத உறுப்புகளில் மிகவும் முக்கியமானது, பல். எப்படி ஒருவரின் கைரேகை போல் அடுத்தவருக்கு இல்லாதிருக்குமோ அதேபோல் ஒருவருடைய பல் வரிசையும் ஒரே மாதிரி அடுத்தவருக்கும் இருக்காதாம். இதனால்தான், சில காவல் நிலையங்களில் குற்றவாளிகளின் கைரேகையைப் பதிவு செய்யும்போது, பற்களின் அமைப்பையும் பதிவு செய்கிறார்கள்.



இவ்வாறான, பல சிறப்புகளைப் பெற்ற பற்கள், மனிதனுக்கு 32 மட்டும்தான் இருக்கின்றன. அதிலும் கடைசி இரண்டு பற்கள் மனிதன் நன்கு முதிர்ச்சியானபின் தான் முளைக்கின்றதாம். இந்த 32 பற்களிலும் மனிதன் அதிகமாகப் பயன்படுத்துவது அரவைப் பற்களைத் தானாம். அதிலும் மனிதர்கள் இயற்கையாகவே இடதுபுற அரவைப் பற்களையே அதிகம் பயன்படுத்துகிறார்களாம். ஒரு புள்ளி விபரத்தின்படி, உலக அளவில் நூற்றுக்கு 17 பேர் மட்டுமே வலதுபுற அரவைப் பற்களால் உணவை மெல்லுகிறார்களாம். சைவ விலங்குகள் வெட்டுப்பற்களையும் அசைவ விலங்குகள் கோரைப் பற்களையும் அதிகமாக உபயோகப்படுத்துகின்றனவாம்.

# யோகாசனம் பயில்வோம் 10

## மயூராசனம்

மயூர் என்றால் மயில் என்பதாகும். இரண்டு கால்களில் நின்று மயில் தோகையை விரிக்காமல் நீட்டியபடி நிற்பதைப் போன்றது இந்த ஆசனம். இரண்டு கைகளிலும் வயிற்றின் பாரத்தைச் சுமத்தி முதல் கட்டம் உடலை நேராக்கிப் பழக வேண்டும். இந்நிலையில் கால்களின் நுனி நிலத்தில் படலாம். இரண்டு, மூன்று வாரங்கள் இந்நிலையில் நின்று தினமும் பழகிவரத் தானாகவே கால்கள் தூக்கக்கூடிய நிலைக்கு வரும். இதன்மூலம் வாதம், பித்தம், கபம் சம்பந்தப்பட்ட கோளாறுகள் சமநிலை அடையும். இரைப்பை, ஈரல், கணையம், சிறுகுடல் என்பன கசக்கப்பட்டு குருதியோட்டம் சீராக்கப்படும். ஜீரண உறுப்புக்கள் அனைத்தும் நன்கு இயக்கப்படும். அத்துடன், இது நீரிழிவு நோயை முற்றாக நீக்கக்கூடிய ஒரு சிறந்த ஆசனமாகும்.



கிரேன் மாஸ்டர் - ஆறுமுகம் ராஜா

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 'வைரஸ்' தாக்கத்திலிருந்து கணினியைக் காப்பாற்ற புதிய வழிமுறை

கணினியில் 'வைரஸ் தாக்கம் ஏற்படுவது அதன் பாவனையாளர்களுக்குப் பெரும் அச்சுறுத்தலாகவே இருந்து வருகின்றது. இதனை மெல்வெயாஸ் (Malwares) என்றும் கூறுவர். ஆகையால் இத்தகைய வைரஸ் தாக்கங்களிலிருந்து கணினியைப் பாதுகாப்பதற்கு 'என்டி வைரஸ்' முறை பயன்படுத்தப்படுவதுண்டு. இருப்பினும் புதுப்புது நுணுக்கங்களினூடே, வைரஸ்கள் கணினிக்குள் ஊடுருவி விடுவதனால், அவற்றைத் தடுப்பது பெரும் போராட்டமாகவே அமைந்து விடுகின்றது. எனவே, இந்தப் பிரச்சினைக்குப் புதிய தீர்வொன்றை அறிமுகப் படுத்தவுள்ளார் கிரிஸ் போலின் என்பவர். முன்னர் 'மெக்காஃபி என்டி வைரஸ் (Mcafee) என்ற நிறுவனத்தில் பிரதான தொழில்நுட்ப அதிகாரியாக இருந்து பின்னர் அங்கிருந்து விலகித் தற்போது பிரிட்டனிலுள்ள 'பிரிவ்ஸ்க்' என்ற கணினிப் பாதுகாப்பு நிறுவனத்தின் மேலதிகாரியாக இவர் கடமையாற்றிக்கொண்டிருக்கின்றார்.

வைரஸ் தாக்கத்திலிருந்து கணினியை பாதுகாத்துக் கொள்வதற்கான புதிய வழியை அறிமுகப்படுத்தவுள்ள கிறிஸ் போலின் 'வைரஸ்களை உடனடியாக நொடிப்பொழுதிலேயே இனங்காணக்கூடிய 'என்டி வைரஸ் புரோகிராம்' ஒன்றை ஏற்படுத்தியுள்ளார்.

இந்தப் புரோகிராமை கணினியில் 'இன்ஸ்ட்டோல்' செய்த பின்னர் அது எப்பொழுதும் கணினியில் இடம்பெறும் அத்தனை செயற்பாடுகளையும் கண்காணித்துக் கொண்டே இருக்கும். தப்பித்தவறி ஏதேனும் வைரஸ் தாக்கிவிட்டால் உடனே பாவனையாளருக்கு அது குறித்த தகவலை உணர்த்திவிடும். குறித்த வைரஸை இனங்காட்டுவது மட்டுமன்றி, அதனால், ஏற்படக்கூடிய பாதிப்புகளையும் அது தெளிவுபடுத்தியும் விடும்.

பொதுவாக, என்டி வைரஸ் மென்பொருட்களைத் தயாரிக்கின்ற நிறுவனங்கள் புதுப்புது வைரஸ் தாக்கங்களின்போது, அவற்றை இனங்காண்பித்து பாதுகாப்பு வேலைத்திட்டங்களை, புரோகிராம்களைப் பயன்படுத்துவதுண்டு. இதனை Signature Files என்று குறிப்பிடுவதுண்டு. ஏதேனும், ஒரு சந்தர்ப்பத்தில் திடீரென புதியதோர் வைரஸ் புகுந்துவிட்டால், அது உட்புகுந்த நேரமும், அது குறித்து என்டி வைரஸ் மென்மொருள் விபரங்களை அறிவிக்கும் நேரமும் அதிக இடைவெளியைக் கொண்டதாக இதுவரை இருந்ததுண்டு. இத்தகைய அதிக நேர இடைவெளியானது கணினிப் பாவனையாளர் உஷாராவதற்கோ, கணினியை தற்காத்துக் கொள்வதற்கோ போதிய அவகாசத்தை வழங்குவதில்லை. இந்தக் குறையை தீர்க்கும் விதமாகவே தற்போது கிரிஸ் போலின் அறிமுகப் படுத்துகின்ற என்டி வைரஸ் புரோகிராம் பயன்படவுள்ளது. இந்த புரோகிராமின்படி, வைரஸ் உடனே இனங்காணப்படுவதுடன் அந்த நொடியிலேயே பாவனையாளருக்கு அது தொடர்பான சமிக்ஞையை வழங்கி அதற்குண்டான தடுப்பு வழிகளை அறிவிக்கின்றது.

**இந்தப் புரோகிராமை கணினியில் 'இன்ஸ்ட்டோல்' செய்த பின்னர் அது எப்பொழுதும் கணினியில் இடம்பெறும் அத்தனை செயற்பாடுகளையும் கண்காணித்துக் கொண்டே இருக்கும்**

இன்னமும் இறுதியாகப் பெயர் சூட்டப்படாத இந்த திட்டமானது முழுமைப் படுத்தப்பட்ட ஒன்றல்ல என்பதையும் இதன் உருவாக்குனரான கிரிஸ் போலின் குறிப்பிடுகின்றார். ஏனையவர்களின் உதவியிலிருந்தால் இதனை மேலும் மெருகூட்டி முழுமைப்படுத்த முடியும் என்பதே அவரது கருத்தாகும். எனினும், இதிலுள்ள சிறப்பு என்னவென்றால், 'வைரஸ்'களை நீக்கும் சம்பிரதாயபூர்வமான 'என்டி வைரஸ்' முறையானது தற்போது நவீன கட்டத்தை அடைந்துள்ளது என்பதேயாகும்.








இப்பத்திரிகை கொழும்பு - 2, இல. 08, ஹுணுப்பிட்டிய குறுக்கு வீதி, விஜய நியூஸ்பேப்பர்ஸ் நிறுவனத்தினால் 2011, ஜனவரி மாதம் 26 ஆம் திகதி புதன்கிழமை அச்சிட்டு வெளியிடப்பட்டது.
Printed and Published by Wijeya Newspapers Ltd. No. 8, Hunupitiya Cross Road, Colombo - 02, on Wednesday January 26, 2011.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org